

கல்கி


KALKI 15-8-1976 ■ 75 காசு



கல்கி

நள ௵ ஆடி 31
ஆகஸ்டு 15, 1976

"கல்கியில்" வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே சம்பவங்களும் கற்பனையே.




போடு புதிர்!

நடிகை ஜிகினாஸ்ரீயைப் பேட்டி காண வந்த பத்திரிகை நிருபர் நடிகையின் வயதைக் கேட்ட போது ஜிகினாஸ்ரீ, "என்னைவிட எட்டு வயது அதிகமான நடிகை ஜில் ஜில் தேவியின் வயதைக் கண்டுபிடிக்க ஒரு புதிர் போடு கிறேன். முடிந்தால் அதிலிருந்து தெரிந்து கொள்ளவும். பன்னிரண்டு வருடங்களுக்கு முன்னால் அவள் வயது எவ்வளவோ அதைப் போல இரண்டு மடங்கு பன்னிரண்டு வருடங் களுக்குப் பிறகு அவள் வயது இருக்கும்" என்றாள். (திரை உலகில் நடிகைகள் ஜிகினா ஸ்ரீக்கும் ஜில்ஜில் தேவிக்கும் இடையே யுள்ள உறவு கீரிக்கும் பாம்புக்குமிடையே உள்ள உறவைப் போன்றிருந்தது எல்லோரும் அறிந்ததே!) அப்படியானால் நடிகை ஜிகினா ஸ்ரீ யின் தற்போதைய வயது என்ன?

—இரா. வேங்கடசுப்பிரமணியம்

(விடை 92 : [illegible])



கம்யூனிசம்
இந்திய
சுதந்திர தேவி
நின்னைத்
தொழுதிடல்
மறக்கிலேனே!
100000
லாட்டரி
தமிழ்நாடு

சுதந்திரச் சிற்பிகள் — புது ரகம்!

மாங்கொட்டையிலிருந்து எண்ணெய் எடுக்கலாம் என்று கண்டார் ஒருவர். சோப்பு தயாரிப்புக்கு இந்த எண்ணெய் பயன்படும். தொழிலகம் ஒன்று தொடங்கினர். நன்முக நடக்கிறது.

பொறி இயல் நிபுணர் ஒருவர் பதினொரு ஆண்டுகள் ஒரு நிறுவனத்தில் உழைத்துவிட்டு விலகிக் கொண்ட போது கணக்குத் தீர்த்ததில் வாங்கிய கடன் போக ரூபாய் ஐயாயிரம் தேறியது. இந்தத் தொகையை மூலதனமாகக் கொண்டு ஒரு தொழிலகம் தொடங்கினர். படிப்படியாக அபிவிருத்தி அடைந்தது. 1971ல் ஒரு லட்சத்துக்குக் கொஞ்சம் அதிகமாகப் பொருள்களை விற்றார். 1975லோ பத்து லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள பொருள்களை விற்றார். அந்த ஆண்டில் நிகர லாபம் ஒரு லட்சம். இப்போது அவர் மூன்று லட்சம் மூலதனத்துடன்

''பாங்குகளின் நோக்கம் கடந்த சில ஆண்டுகளில் பெருமளவுக்கு மாறிவிட்டது'' என்கிறார் ரிசர்வ் பாங்கு கவர்னர் திரு கே. ஆர். புரி. ''கடந்த காலத்தில் பணக்காரர்களும் நிறைய சொத்துடையவர்களும் மட்டுமே கடன் பெற முடிந்தது. இன்று பாங்குகள் ஒரு நல்ல திட்டத்தைக் கண்டால் போதும்; அது வெற்றி பெறும் என்ற நம்பிக்கை பிறக்குமானல் கடன் தரத் தயாராயுள்ளன.''

'படிக்கும்போது நன்முக இருக்கிறது. ஆனல் நடைமுறையில் அப்படியொன்றும் எளிதாகக் கடன் பெற முடிவதில்லை' என்பது பல சிறு தொழிலதிபர்கள் அனுபவம். பாங்குகள் தயங்குவதிலும் தவறில்லைதான். கொடுக்கிற கடன் சரியாகப் பயன்படுத்தப்பட வேண்டுமே, திரும்பி வர வேண்டுமே, என்றெல்லாம் அதிகாரிகள் கவனிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

கல்கி மலர் 36 இதழ் 3

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற — எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

புதிதாக ஒரு தொழிலகம் தொடங்கத் திட்டம் போட்டிருக்கிறார்.

இப்படி எத்தனையோ வெற்றிக் கதைகள். தோல்விகளும் உண்டுதான். ஆனல் சிலரது தோல்விகளை எண்ணி மனம் சோர்வதைவிடப் பலர் வெற்றிகளைப் பார்த்து உற்சாகம் பெறுவதே தேசப் பொருளாதாரம் உயர வழி.

பெரிய நகரத்தையொட்டி ஆயிரக் கணக்கான பேர்களுக்கு வேலை வாய்ப்புத் தரும் பெரிய தொழிலகத்தைக் கோடிக் கணக்கான ரூபாய் முதலீடு செய்து தொடங்குவதைவிடச் சிறிய நகரங்களையொட்டி நூற்றுக்கணக்கான பேர்களுக்கு வேலை வாய்ப்புத் தரும் பல சிறிய தொழிலகங்களை லட்சக்கணக்கான ரூபாய் முதலீடு செய்து தோற்றுவிப்பது நல்லது.

பெரிய தொழிலதிபர்களுக்கு மட்டுமின்றி இத்தகைய சிறிய தொழிலதிபர்களுக்கும் பாங்குகளின் கடனுதவி இன்றியமையாதது. மேற்சொன்ன வெற்றிக் கதைகள் பாங்குகளின் உதவியின்றி நடைபெற்றிருக்க முடியாது.

கோடிக்கணக்கான மக்களின் பணத்துக்குத் தர்மகர்த்தா பொறுப்பு பெற்றுள்ள பாங்குகள். அலட்சியமாகப் பணத்தை வாரிவிட முடியாது, கூடாது.

ஆயின் அதே நேரத்தில் திரு புரி கூறியுள்ளது போல் பாங்குகளின் நோக்கிலும் போக்கிலும் கணிசமான மாறுதல் ஏற்பட்டிருப்பதையும் நாம் உணர முடியும். பாங்குகளில் மொத்தமுள்ள பணத்தில் பத்து சத விகிதத்துக்கும் அதிகமாகச் சிறு தொழில்களிலேயே முடங்கிக் கிடங்கின்றன என்பது அதனை நிரூபிக்கிறது.

பாங்குக் கடன் உதவியுடன் சிறு தொழில்களைத் தொடங்க விரும்புவோர் சில அம்சங்களை நன்முகக் கவனித்துச் செயல்பட்டால் பாங்கு அதிகாரிக்கு உதவும் போது தங்களுக்குத் தாங்களே உதவிக் கொண்டவர்களும் ஆவார்கள். முதலில் தமது திட்டம் நன்முகச் செயல்படுமா? தொழிலகம் லாபகரமாகச் செயல்படுமா? மார்க்கெட் நிலவரம் என்ன? எந்த ஆண்டில் உற்பத்தி தொடங்கும், எந்த ஆண்டிலிருந்து லாபம் காண

லாம் என்பன போன்ற விவரங்களை வாய்மையுடனும் தவறின்றியும் தயாரித்துக் கொள்ள வேண்டும். இதற்குமேல் அதிகாரிகள் கேட்கக் கூடிய கேள்விகளுக்குப் பளிச்சென்று பதில் கூறிச் சமாளிக்கும் அளவில் விஷய ஞானம் பெற வேண்டும். ஓரளவு வேறிடத்தில் அனுபவம் பெற்ற பிறகு சொந்தத் தொழில் முயற்சியில் இறங்குவது நல்லது. தேவைப்படும் மூலதனத்தில் பத்து முதல் பதினைந்து சதமாவது சொந்தப் பணமாக இருக்க வேண்டும். பாக்கிக்கு நம்பிக்கையான கூட்டாளிகளைச் சேர்த்துக் கொள்ளலாம். மூலதனம் முழுவதுமே கடன் வாங்கிய பணமாக இருந்தால் தொழிலோ வியாபாரமோ வெற்றி பெறுவது கடினம் என்பதுடன் மனப்பூர்வமான ஈடுபாடும் ஏற்படாது. பாங்கு அதிகாரியிடம் கொடுத்த வாக்கைக் கொடுத்த கெடுவில் நிறைவேற்றினால் அவருக்குத் தொழில் அதிபரிடம் நம்பிக்கை பிறக்கும். பிறகு பல விதங்களிலும் அவர் தொழிலதிபருக்கு உதவ முடியும். இதற்கு மறுபுறத்தில் பாங்கு அதிகாரிகள் சிறு தொழில் அதிபர்களிடம் கண்டிப்புடன் கனிவும் காட்ட வேண்டும். அவர்களுக்குத் தொல்லை தருவது போன்ற பேச்சைத் தவிர்த்து அவர்களுக்கு உதவவே விரும்புவது போன்ற எண்ணத்தைத் தோற்றுவிப்பது அவசியம்.

அன்று சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சொத்து பந்தங்களைத் துறந்து சிறை சென்றனர் விடுதலை வீரர்கள். இன்று இருக்கிற சிறிதளவு சேமிப்பை முதலீடாக்கி அதற்குமேல் ஏராளமாய்க் கடனும் வாங்கித் தொழில் செய்து தேசப் பொருளாதாரத்துக்கு உதவ முன்வருகிறவர்களும் வீரர்களே.

முன்னவர் தேச சுதந்திரத்துக்காகப் பாடுபட்டார்கள். பின்னவர் நாட்டின் பொருளாதார சுதந்திரத்துக்காகப் பாடுபடுகிறார்கள். முன்னவர்கள் சகலத்தையும் துறந்துவிட்டுப் போனார்கள். பின்னவர்கள் இருப்பதற்கு மேல் கடனும் வாங்கிச் செயல்பட்டு அதனால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களைச் சந்திக்கவும் தயாராகிறார்கள். லாப நோக்கு இருப்பினும் இதற்கும் அளப்பரிய மன உறுதியும் வீரமும் வேண்டும்.

சுதந்திர தினத்தன்று தேசத்தின் சிறிய பெரிய பொருளாதாரச் சுதந்திரச் சிற்பிகளுக்கு வாழ்த்துத் தெரிவிப்போம்.

அலாதிப் போக்கில் இத்தாலி!

புலியும் மாடும் ஒரு துறையில் நீர் குடிக்குமா? பாம்பும் கீரியும் நேசம் கொள்ளுமா?

இவ்வாறு நடக்க முடியாத ஒரு காரியம் தான் நடந்திருக்கிறது இத்தாலியில்!

அந்த நாட்டில் கிறிஸ்டியன் டெமோகிராடிக் கட்சி, சோஷல் டெமோகிராடிக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய மூன்று முக்கியமான கட்சிகள். இவற்றில் முதலில் குறிப்பிடப்பட்ட கிறிஸ்டியன் டெமோகிராடிக் கட்சி வலது சார்புள்ள முதலாளித்துவக் கட்சி. இதுதான் சமீப காலம் வரை இத்தாலியை ஆண்டு லஞ்சம், ஊழல் மிகுந்த கட்சி என்று அவப்பெயர் வாங்கிக் கொண்டது.

இரண்டாவதாக சோஷல் டெமோகிராடிக் கட்சி இடது சார்புள்ள கட்சி. ஆளும் கட்சிக்குச் சரியான எதிர்க்கட்சி.

கம்யூனிஸ்ட் கட்சியைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை.

ஜூன் மாதம் இத்தாலி சட்டசபைக்கு நடந்த தேர்தலில் ஆளும் கட்சியாக இருந்த வலதுசார்புள்ள கிறிஸ்டியன் டெமோகிராடிக் கட்சி தனது செல்வாக்கைப் பெரிதும் இழந்துவிட்டது. கிறிஸ்டின் டெமோகிராடிக் கட்சி இழந்த செல்வாக்கு அப்படியே கம்யூனிஸ்ட் கட்சிக்குப் போய்ச் சேர்ந்தது. இதன் விளைவாக மிகச் சிறுபான்மை கட்சியாக இருந்த கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினர்கள் தொகை இத்தாலி சட்டசபையில் உயர்ந்தது. பெரிய கட்சிகளாக இருந்த மற்ற இரு கட்சிகளும் மெஜாரிட்டி இழந்தன. எந்தக் கட்சியும் கம்யூனிஸ்டுகளின் ஆதரவில்லாமல் மந்திரி சபை அமைக்க முடியாது என்ற நிலை உருவாயிற்று.

இந்தச் சந்தர்ப்பத்தில் மேற்கத்திய வல்லரசுகளான அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி ஆகிய நாடுகள் கம்யூனிஸ்டுகளுடன் சேர்ந்து கூட்டு மந்திரி சபை அமைத்தால் மேற்கத்திய பொருளாதார உதவி நிறுத்தப்படும் என்று பயமுறுத்தின.

இந்நிலையில் இத்தாலி நாட்டு கம்யூனிஸ்ட் கட்சி மிகப் பெருந்தன்மையான ஒரு காரியத்தைச் செய்தது.

கம்யூனிஸ்டு கோட்பாட்டுக்கு முற்றும் எதிரான வலதுசாரி கிறிஸ்டியன் டெமோகிராடிக் கட்சியை மந்திரி சபை அமைக்கக் கோரினார்கள் கம்யூனிஸ்டுகள். அந்த மந்திரி சபையில் தங்களுக்கு ஓர் இடமும் தேவையில்லை என்று சொன்னார்கள். அது மட்டுமல்ல, மந்திரி சபை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை மற்ற எதிர்க்கட்சிகள் கொண்டு வந்தால் கம்யூனிஸ்ட் அங்கத்தினர்கள் வோட்டளிக்காமல் சட்டசபையை விட்டு வெளிநடப்புச் செய்து மந்திரி சபை கவிழாமல் பார்த்துக் கொள்வதாக வாக்குறுதி அளித்தார்கள்.

ஐரோப்பியர்களிலேயே இத்தாலியர்களுக்கு என்று காதல் வாழ்க்கையாகட்டும் வர்த்தகமாகட்டும், தனி வழி உண்டு என்பார்கள். அத் 'தனி வழி' இத்தாலிய கம்யூனிஸத்துக்கும் உண்டு போலும்!

மேற்கத்திய பொருளாதார உதவியுடன் இத்தாலி முன்னேறுவதில் இத்தாலிய கம்யூனிஸ்டுகள் அவ்வளவு அக்கறை கொண்டுள்ளனர் என்பதே இதன் பொருள்.

இந்த நாட்டுப் பற்றைக் கண்டு யாரால் தான் வியக்காமல் இருக்க முடியும்?

ஜீவகாருண்யம் 16



ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி
சங்கராசாரிய சுவாமிகள்

வைதிகக் குடுக்கைகள், மடிசஞ்சிகள் என்று மற்றவர்கள் திட்டுகிற மாதிரி சிலர் ஜீவகாருண்யம் இல்லாமல் வெறுமே கர்மா, பக்தி என்று பண்ணிக் கொண்டிருந்தால் அது சரியில்லைதான். ஆனாலுங்கூட இவர்கள் உணர்ந்தாலும் உணராவிட்டாலும், இந்த யாக யக்ஞம், ஹோமம், தர்ப்பணம், பூஜை எல்லாமுங்கூட, அதனுடைய உள்ளர்த்தத்தைக் கவனித்தால் ஸோஷல் ஸர்வீஸ்தான். லோகத்தின் ஸமஸ்த ஜீவராசிகளுக்கும் க்ஷேமத்தை உண்டாக்கிக் கொடுப்பதுதான் யாக மந்திரங்கள் சடங்குகள் ஆகியவற்றின் தாத்பரியம். இந்த லோகத்தில் உள்ள ஜீவராசிகளில் செத்துப் போன நம் பித்ருக்களும் எங்கேயோ பிறந்துதானே இருக்கிறார்கள்? அவர்கள் எந்த இடத்தில், எந்த ரூபத்தில் பிறந்திருந்தாலும் அவர்களுக்கு க்ஷேமம் உண்டாவதற்குத்தான் பித்ரு தேவதைகளுக்குத் தர்ப்பணாதி சிராத்தம் முதலானதுகளைச் செய்கிறோம்.

லோகக்ஷேமத்துக்காகவேதான் பகவானைப் பூஜை பண்ணுவதும். "ஜகத் ஹிதாய கிருஷ்ணாய" — உலகமெல்லாம் கஷ்டம் தீர்ந்து ஸந்தோஷமாக இருக்க ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவைப் பிரார்த்தித்துத்தான் பூஜையை ஆரம்பித்து, முடிக்கிறபோது "ஸர்வே ஜனா: ஸுகினோ பவந்து" — அதாவது "வையகமும் துயர் தீர்கவே"—என்று முடிக்கிறோம்.

யோகம், ஞானம் என்று ஜனங்களையே விட்டு விட்டு எங்கேயோ குகையில் உட்கார்ந்து கொண்டு மூக்கைப் பிடித்துக் கொண்டிருக்கிறானே அவன் கதை என்ன? 'இப்படிப்பட்டவனுக்குப் பிக்ஷை போடாதே அவன் ஸோஷல் ஸர்வீஸ் என்ன செய்கிறான்? சமூகத்தைப் பிடுங்கித் தின்கிறான் (Parasite) என்றெல்லாங்கூட இந்த நாளில் கோஷம் போடுகிறார்கள். ஆண்டி, பண்டாரம், சந்நியாசி என்று கிளம்பியிருப்பவர்களில் வேஷம் போடுபவர்களும் ரொம்பப் பேர் இருப்பார்கள். அது வேறு விஷயம். ஆனால் வாஸ்தவமாகவே ஒருத்தன் ஆத்ம அபிவிருத்தி அடைவதற்காக ஏகாந்தமாக சமூகத்தை விட்டு இருக்கிறான் என்றால் அவன் சமூகத்துக்குப் பிரயோஜனம் இல்லாதவன்தானா?

இப்படி நினைப்பது முழுப் பிசகு. ஒவ்வொரு ஜீவனும் தன் மனஸைச் சுத்தப்படுத்திக் கொண்டு, அதை ஈச்வரனோடு ஈச்வரனாகச் சேர்த்துக் கரைக்கிற அளவுக்கு உயருவதற்காகப் பாடுபடத்தான் வேண்டும். மற்ற ஜீவராசிகளுக்குச் செய்கிற பரோபகாரங்கூட அவர்களையும் கடைசியில் இப்படி ஆத்மார்த்தமாக உயர்த்தாவிட்டால் அத்தனை உபகாரத்தாலும் பிரயோஜனம் ஒன்றுமில்லை. ஆகையினால் நம்மில் ஒருத்தன் அப்படி உயரப் பாடுபடுகிறான் என்றால் அதுவே நமக்கு ஸந்தோஷம் தரத்தான் வேண்டும். நம் மாதிரி சம்சாரத்தில் உழன்று கொண்டு கஷ்டப்படாமல், இதிலிருந்து தப்பிக்கிறதற்கு ஒரு தீரன் முயற்சி பண்ணுகிறான் என்றால் அவனைப் பார்த்து நாம் பெருமைதான் பட வேண்டும்; அவனுடைய சரீர யாத்திரை நடப்பதற்கு அத்தியாவசியமான சகாயத்தை நாம் செய்து கொடுக்கத்தான் வேண்டும். அப்புறம் அவன் நல்ல பக்குவம் அடைந்து யோக ஸித்தனாக, அல்லது பூர்ண ஞானியாக ஆகிவிட்டான் என்றால், அதன் பின் அவன் காரியத்தில் ஸோஷல் ஸர்வீஸ் என்று பண்ணவே வேண்டாம்; தன்னாலேயே அவனிடமிருந்து ஜனங்களின் தாபங்களையெல்லாம் தீர்க்கிற சக்தி வெளிப்படும்—Radiate ஆகும். ஜனங்களின் மனசுக்குத் தாப சாந்தி உண்டாக்குவதைவிடப் பெரிய சமூக சேவை எதுவும் இல்லை. ஒரு மகானின் தரிசனத்தால் கிடைக்கிற இந்த சாந்தி, விச்ராந்தி தாற்காலிகமாக இருந்தால்கூட அது பெரிய ஸோஷல் ஸர்வீஸ்தான். அப்படிப் பார்த்தால் எந்த ஸோஷல் ஸர்வீஸ்தான் சாசுவதமாயிருக்கிறது? எல்லாமே தாற்காலிகம்தான் — தர்ம ஆஸ்பத்திரி வைத்து ஒரு வியாதிக்கு மருந்து கொடுத்துச் சரி பண்ணினாலும் அப்படியும் இன்னொரு வியாதி வரத்தான் வருகிறது. அன்னசத்திரம் வைத்து ஒருவேளை சாதம் போட்டால் அடுத்த வேளை பசிக்கத்தான் செய்கிறது. அதனால் இந்த லோகத்தில் எல்லாமே தாற்காலிகம்தான்.

ஒருத்தன் பூரணத்துவம் அடைந்துவிட்டால் மற்றவர்களின் மனசின் கஷ்டத்தைப் போக்குவது, அதைச் சுத்தப்படுத்துவதுதவிர, அவன் அவர்களுடைய லௌகிகமான வேண்டுதல்களைக்கூட நிறைவேற்றுகிற அநுக்கிரஹ சக்தியும் பெற்றுவிடுகிறான்.

எந்த விதி (Rule) இருந்தாலும் அதற்கு ஒரு விலக்கு (Exception) இருக்கத்தான் செய்யும். அம்மாதிரி, அத்யாத்ம மார்க்கத்தில் போகிறவர்களை — பக்தி, யோகம், ஆத்ம விசாரம் என்று தீவிரமாக இருக்கிறவர்களை ஸோஷல் சர்வீஸில் இழுக்கக் கூடாது; — அவர்கள் 'பாரஸைட்' என்று திட்டக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். (தொடரும்)

[1932ம் வருஷத்திலிருந்து பெரியவர்கள் வழங்கிய உரைகள்; ஸ்ரீமுகங்கள், கட்டுரைகளிலிருந்து தொகுத்தது]



புதியது!
டம்ளர்
பேக்
100
கிராம்
நெஸ்கஃபே
100%
அசல் காபிக்
கொட்டையில்
தயாரிக்கப்பட்டது
NESCAFÉ®
instant coffee
ஸ்டாக்
குறைவாக
உள்ளது
உலகிலேயே
மிக அதிகமாக
விற்பனையாகும்
இன்ஸ்டன்ட் காபி
நெஸ்கஃபே®

பார்த்திபன் கனவு


அமரர்
கல்கி

அத்தியாயம் 3

பல்லவ தூதர்கள்

பொன்னனும் வள்ளியும் தங்கள் குடிசையின் கதவைப் பூட்டிக் கொண்டு உறையூரை நோக்கிக் கிளம்பினார்கள்.

அவர்கள் வசித்த தோணித் துறையிலிருந்து உறையூர் மேற்கே ஒரு காத தூரத்தில் இருந்தது. அந்தக் காலத்தில் – அதாவது, சுமார் ஆயிரத்து முந்நூறு வருஷங்களுக்கு முன்பு – செந்தமிழ் நாட்டில் ரயில் பாதைகளும் ரயில் வண்டிகளும் இல்லை; மோட்டார் வண்டிகளும் தார் ரோடுகளும் இல்லை. (இவையெல்லாம் அந்த நாளில் உலகில் எந்த நாட்டிலுமே கிடையாது) அரசர்களும் பிரபுக்களும் குதிரைகள் மீதும் யானைகளின் மீதும் ஆரோகணித்துச் சென்றனர். குதிரை பூட்டிய ரதங்களிலும் சென்றனர். மற்ற சாதாரண மக்கள் மாட்டு வண்டிகளில் பிரயாணம் செய்தார்கள். இந்த வாகனங்களெல்லாம் போவதற்காக விஸ்தாரமான சாலைகள் அமைக்கப்பட்டிருந்தன. குளிர்ந்த நிழல் தரும் மரங்கள் இருபுறமும் அடர்ந்து வளர்ந்த அழகான சாலைகளுக்குச் சோழ வளநாடு அந்தக் காலத்திலே பெயர் போனதாயிருந்தது. அந்தச் சாலைகளுக்குள்ளே காவேரி நதியின் தென்







கரையோரமாகச் சென்ற ராஜபாட்டை மிகப் பிரசித்தி பெற்றிருந்தது. இந்த ராஜபாட்டை வழியாகத்தான் பொன்னனும் வள்ளியும் சோழநாட்டின் தலைநகரமான உறையூருக்குப் புறப்பட்டுச் சென்றார்கள்.

சோழ நாடு அந்த நாளில் தன்னுடைய புராதனப் பெருமையை இழந்து ஒரு சிற்றரசாகத்தான் இருந்தது. தெற்கே பாண்டியர்களும், வடக்கே புதிதாகப் பெருமையடைந்திருந்த பல்லவர்களும் சோழ நாட்டை நெருக்கி அதன் பெருமையைக் குன்றச் செய்திருந்தார்கள். ஆனால், சோழ நாட்டின் வளத்தையும் வன்மையையும் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அந்த வளத்துக்குக் காரணமாயிருந்த காவேரி நதியையும் அவர்களால் கொள்ளை கொண்டு போக முடியவில்லை. உறையூர் ராஜ பாட்டையின் இருபுறமும் பார்த்தால் சோழ நாட்டு நீர் வளத்தின் பெருமையை ஒருவாறு அறிந்து கொள்ளும் படியிருந்தது. ஒரு புறத்தில் கரையை முட்டி அலைமோதிக் கொண்டு கம்பீரமாய்ச் சென்ற காவேரியின் பிரவாகம்; ஆற்றுக்கு அக்கரையில் நீலவானத்தைத் தொட்டுக் கொண்டிருந்த அடர்த்தியான தென்னை மரத் தோப்புகளின் காட்சி; இந்தப்புறம் பார்த்தாலோ கண்ணுக்கெட்டிய தூரம் பசுமை, பசுமை, பசுமைதான். கழனிகளெல்லாம் பெரும்பாலும் நடவு ஆகியிருந்தன. இளம் நெற்பயிர்கள் மரகதப் பச்சை நிறம் மாறிக் கரும்பசுமை அடைந்து கொண்டிருந்த காலம். 'குளு குளு' சத்தத்துடன் ஜலம் பாய்ந்து கொண்டிருந்த மடைகளில் ஒற்றைக் காலால் தவம் செய்து கொண்டிருந்த வெள்ளை நாரைகள் இளம் பயிர்களின் பசுமை நிறத்தை இன்னும் நன்றாய் எடுத்துக் காட்டின. நெல் வயல்களுக்கு மத்தியில் ஆங்காங்கே சில வாழைத் தோட்டங்களும், தென்னந் தோப்புக்களும் கரும்புக் கொல்லைகளும் காணப்பட்டன.

இத்தகைய வளங் கொழிக்கும் அழகிய நாட்டின் அமைதியைக் குலைப்பதற்கு யுத்தம் நெருங்கி வந்து கொண்டிருந்தது. இதனால் சோழ நாட்டுக் குடிகளின் உள்ளம் எவ்வளவு தூரம் பரபரப்பு அடைந்திருந்த தென்பதைப் பொன்னனும் வள்ளியும் உறையூர்ப் பிரயாணத்தின் போது நன்கு கண்டார்கள். பக்கத்துக் கழனிகளில் வேலை செய்து கொண்டிருந்த உழவர்களும் பயிர்களுக்குக் களை பிடுங்கிக் கொண்டிருந்த ஸ்திரீகளும் பொன்னனையும் வள்ளியையும் கண்டதும் கைவேலையைப் போட்டு விட்டு ஓடோடியும் வந்தார்கள்.





''பொன்னா! என்ன சேதி?'' என்று சிலர் ஆவலுடன் கேட்டார்கள். ''சண்டை நிச்சயந்தானா?'' என்று சிலர் விசாரித்தார்கள். ''தூதர்கள் வந்த சமாசாரம் ஏதாவது தெரியுமா?'' என்று வினவினார்கள். பொன்னன் ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு விதமாய்ப் பதில் சொன்னான். ''சண்டையைப் பற்றிச் சந்தேகம் என்ன? நமது மகாராஜா ஒருநாளும் கப்பம் கட்டப் போவதில்லை. எல்லாரும் அவரவர் வாளையும் வேலையும் தீட்டிக் கொண்டு வந்து சேருங்கள்'' என்று சிலரிடம் சொன்னான். வேறு சிலரிடம் ''எனக்கு என்ன தெரியும்? உங்களுக்குத் தெரிந்ததுதான் எனக்கும் தெரியும்'' என்றான். அவர்கள் ''நன்றாயிருக்கிறது பொன்னா! உனக்குத் தெரியாமல் இருக்குமா? சோழ நாட்டுக்கே இப்போது முக்கிய மந்திரி நீ தானே? உனக்குத் தெரியாத ராஜ ரகசியம் ஏது?'' என்றார்கள். அப்போது வள்ளி அடைந்த பெருமையைச் சொல்லி முடியாது.

ஆனால், வேறு சிலர், ''பொன்னா! மகாராஜா யுத்தத்துக்குப் போனால் நீயும் போவாயோ, இல்லையோ?'' என்று கேட்ட போது வள்ளிக்கு ரொம்ப எரிச்சலாயிருந்தது. அவர்களுக்கு, ''அது என் இஷ்டமா? மகாராஜாவின் இஷ்டம்!'' என்றான் பொன்னன். அவர்கள் போன பிறகு, வள்ளியிடம், ''பார்த்தாயா, வள்ளி! நான் யுத்தத்துக்குப் போகாமலிருந்தால் நன்றாயிருக்குமா? நாலு பேர் சிரிக்க மாட்டார்களா?'' என்றான். அதற்கு வள்ளி, ''உன்னை யார் போக வேண்டாமென்று சொன்னார்கள். மகாராஜா உத்தரவு கொடுத்தால் போ! என்னையும் அழைத்துக் கொண்டு போ என்றுதானே சொல்கிறேன்?'' என்றாள்.

இப்படி வழியெல்லாம் பொன்னன் நின்று நின்று கேட்டவர்களுக்கு மறுமொழி சொல்லிக் கொண்டு போக வேண்டியதாயிருந்தது. உறையூர்க் கோட்டை வாசலை அணுகியபோது, அஸ்தமிக்கும் நேரம் ஆகிவிட்டது. அவர்கள் வந்து சேர்ந்த அதே சமயத்தில் கோட்டை வாசல் திறந்தது. உள்ளிருந்து சில குதிரை வீரர்கள் வெளியே வந்து கொண்டிருந்தார்கள். முதலில் வந்த வீரன் கையில் சிங்கக் கொடியைப் பார்த்ததும், அவர்கள்தான் மந்தியானம் உறையூருக்குச் சென்ற பல்லவ தூதர்கள் என்பது பொன்னனுக்குத் தெரிந்து விட்டது. இருவரும் சிறிது ஒதுங்கி நின்றார்கள். கோட்டை வாசல் தாண்டியதும் குதிரைகள் காற்றினும்

கடிய வேகத்துடன் பறக்கத் தொடங்கின. அவற்றின் காற் குளம்பின் புழுதி மறையும் வரையில் அவை சென்ற திசையையே பார்த்துக் கொண்டிருந்து விட்டு, பொன்னனும் வள்ளியும் கோட்டை வாசல் வழியாகப் புகுந்து சென்று நகருக்குள் பிரவேசித்தார்கள்.

நகரின் வீதிகளில் ஆங்காங்கே கும்பல் கும்பலாக ஜனங்கள் நின்று பேசிக் கொண்டிருந்தார்கள். ஒரு கும்பலின் ஓரத்தில் பொன்னனும் வள்ளியும் போய் நின்றனர். பல்லவ தூதர்கள் வந்தபோது ராஜ சபையில் நடந்த சம்பவங்களை ஒருவன் வர்ணித்துக்கொண்டிருந்தான்: "ஆகா! அந்தக் காட்சியை நான் என்னவென்று சொல்லப் போகிறேன்! மகாராஜா சிங்காதனத்தில் கம்பீரமாக உட்கார்ந்திருந்தார். இளவரசரும், மந்திரி, சேனாதிபதி எல்லாரும் அவரவர்களின் இடத்தில் உட்கார்ந்திருந்தார்கள். எள் போட்டால் எள் விழுகிற சத்தம் கேட்கும்; அந்த மாதிரி நிசப்தம் சபையில் குடிகொண்டிருந்தது. 'தூதர்களை அழைத்து வாருங்கள்!' என்று மகாராஜா சொன்னார். அவருடைய குரலில் எவ்வளவு வேகம் ததும்பிற்று இன்றைக்கு ? தூதர்கள் வந்தனர். அவர்களுடைய தலைவன் முன்னால் வந்து நின்று மகாராஜாவுக்கு வந்தனம் செலுத்தினான்.

" 'தூதரே! என்ன சேதி?' என்று கேட்டார்.

"அந்தக் குரலின் கம்பீரத்தினாலேயே தூதன் நடுங்கிப்போய்விட்டான். அவனுக்குப் பேசவே முடியவில்லை. தட்டுத் தடுமாறிக் கொண்டே, 'திரிலோக சக்கரவர்த்தி, காஞ்சி மண்டலாதிபதி, சத்ரு சம்ஹாரி நரசிம்ம வர்ம பல்லவராயருடைய தூதர்கள் நாங்கள்...' என்று அவன் ஆரம்பிக்கும் போது நம்முடைய அரண்மனை விதூஷகன் குறுக்கிட்டான். 'தூதரே ! நிறுத்தும்! எந்த திரிலோகத்துக்குச் சக்கரவர்த்தி! அதல ஸுதல பாதாளமா? இந்திரலோக, சந்திரலோக, யமலோகமா?' என்றான். சபையில் எல்லோரும் 'கொல்'லென்று சிரித்தார்கள். தூதன் பாடு திண்டாட்டமாய்ப் போய் விட்டது. அவனுடைய உடம்பு நடுங்கிற்று; நா குழறிற்று. மெதுவாகச் சமாளித்துக் கொண்டு, 'தங்கள் பாட்டனார் காலம் முதல் ஆண்டுதோறும் கட்டி வந்த கப்பத்தைச் சென்ற ஆறு வருஷமாய்மகாராஜா கட்டவில்லையாம். அதற்கு முகாந்திரம் கேட்டு வரும்படி சக்கரவர்த்தியின் கட்டளை' என்றான்.

ஆகா! அப்போது நமது மகாராஜாவின் தோற்றத்தைப் பார்க்க வேணுமே? 'தூதரே! உங்கள் சக்கரவர்த்தி கேட்டிருக்கும் முகாந்திரத்தைப் போர்முனையிலே தெரிவிப்பதாகப் போய்ச் சொல்லும்' என்றார். எனக்கு அப்போது உடல் சிலிர்த்து விட்டது..."

இவ்விதம் வர்ணித்து வந்தவன் சற்றே நிறுத்தியதும், பல பேர் ஏக காலத்தில் "அப்புறம் என்ன நடந்தது?" என்று ஆவலுடன் கேட்டார்கள்.

"அந்தத் தூதன் சற்று நேரம் திகைத்து நின்றான். பிறகு, 'அப்படியானால் யுத்தத்துக்குச் சித்தமாகும்படி சக்கரவர்த்தி தெரிவிக்கச் சொன்னார்கள். இதற்குள்ளே பல்லவ சைன்யம் காஞ்சியிலிருந்து கிளம்பியிருக்கும். போர்க்களமும், யுத்த ஆரம்ப தினமும் நீங்களே குறிப்பிடலாமென்று தெரியப்படுத்தச் சொன்னார்கள்' என்றான். அதற்கு நம் மகாராஜா, 'புரட்டாசிப் பௌர்ணமியில் வெண்ணாற்றங் கரையில் சந்திப்போம்' என்று விடையளித்தார். உடனே சபையோர் அனைவரும் 'வெற்றி வேல்! வீரவேல்!' என்று வீர கர்ஜனை புரிந்தார்கள்..."

இதைக் கேட்டதும் அந்தக் கும்பலில் இருந்தவர்களும் "வெற்றி வேல்! வீரவேல்!" என்று முழங்கினார்கள். பொன்னனும் உரத்த குரலில் அம்மாதிரி வீர முழக்கம் செய்து விட்டு வள்ளியை அழைத்துக் கொண்டு மேலே சென்றான்.

இதற்குள் இருட்டிவிட்டது. வெண்மேகங்களால் திரையிடப்பட்ட சந்திரன் மங்கலாய்ப் பிரகாசித்துக்கொண்டிருந்தது. ஒவ்வொரு வீதி மூலையிலும் நாட்டியிருந்த கல் தூணின் மேல் பெரிய அகல் விளக்குகள் இருந்தன. அவை ஒவ்வொன்றாகக் கொளுத்தப்பட்டதும் புகை விட்டுக் கொண்டு எரிய ஆரம்பித்தன.

திடீரென்று எங்கேயோ உயரமான இடத்திலிருந்து பேரிகை முழக்கம் கேட்கத் தொடங்கியது. 'தம்ம்ம்' 'தம்ம்ம்' என்ற அந்தக் கம்பீரமான சப்தம் வான வெளியில் எட்டுத் திக்கிலும் பரவி 'அதம்ம்ம்' 'அதம்ம்ம்' என்ற பிரதித் தொனியை உண்டாக்கிற்று. உறையூரின் மண்டபங்களும், மாட மாளிகைகளும், கோபுரங்களும், கோட்டை வாசல்களும் சேர்ந்து ஏக காலத்தில் 'அதம்ம்ம்' 'அதம்ம்ம்' என்று எதிரொலி செய்தன. சற்று நேரத்துக்கெல்லாம் அந்த சப்தம் 'யுத்தம்ம்' 'யுத்தம்ம்' என்றே கேட்கத் தொடங்கியது.



உடனடி சக்தி தருவது க்ளாக்ஸோஸ்-D !

நிமிட நேரங்களில் புத்துணர்ச்சி பெற, க்ளாக்ஸோஸ்-D அருந்துங்கள். குடிநீர், தேநீர், காப்பி, பழச் சாறு ஆகியவற்றிலேயோ, அப்படியே தனிப்படவோ சாப்பிட இனியது. எண்ணற்ற வேலைகளைச் சமாளிக்க உதவும். நடுக் காலைநேரப் பானமாக அருந்தி வாருங்கள்.

க்ளாக்ஸோஸ்-D®
க்ளாக்ஸோ தயாரிப்பு



நிமிடங்களில்
தென்பூட்டுகிறது
உடம்பிலே


"வாதுமை ஒன்றுதான் உங்கள் கூந்தலுக்கு வேண்டிய இயற்கையான போசாக்குச் சத்து அவ்வளவும் உடையது"
என்கிறார் அனிதா ராபின்ஸ்
எக்ஸ்போர்ட் ஹவுஸ் நிர்வாகி
ஆரோக்கியமுள்ள கேசம்தான் செழுசெழுவென்று ஒளிவீசி நிலைபெறும். செழுமை மின்னும் கூந்தலுக்கான லியூர் வழியினுக்கு மூலாதாரம், ஒரு பழங்காலப் பாரம்பரைச் செல்வம்: வாதுமை—தேங்காய், கடலை ஆமணக்கு ஆகிய எதனையும் விட அதிக இயற்கைச் சத்துள்ளது.
வரண்ட கேசத்திற்கு விசேஷப் பயன்தருவது லியூர் ஆல்மண்ட் ஹேர் ஆயில். இரு வழிகளில் அது வேலை செய்கிறது—பகலிலே, கேச அலங்கரிப்புத் தைலமாகப் பயன்படும். இரவிலே, கேச டானிக்காக உபயோகிக்கலாம்.
லியூர்
"என் கேசத்திற்கு வசீகரமூட்டுது லியூர்; ஆல்மண்ட் ஹேர் ஆயில் ஒளிவீசும் வளமூட்டுகிறது"
Creative Unit-A 2309-Tam.

இடி முழக்கம் போன்ற அந்தப் பேரிகை ஒலியைக் கேட்டதும் பொன்னனுடைய உடம்பில் மயிர்க் கூச்சல் உண்டாயிற்று. அவனுடைய ரத்தம் கொதித்தது. நரம்புகள் எல்லாம் புடைத்துக் கொண்டன. வள்ளியோ நடுங்கிப் போனாள்.

''இது என்ன இது? இம்மாதிரி ஓசை இதுவரையில் நான் கேட்டதே யில்லை!'' என்றாள்.

''யுத்த பேரிகை முழங்குகிறது'' என்றான் பொன்னன். அவனுடைய குரலைக் கேட்டுத் திடுக்கிட்ட வள்ளி, ''ஐயோ! உனக்கு என்ன?'' என்று கேட்டாள்.

''ஒன்றுமில்லை வள்ளி! எனக்கு ஒன்றுமே யில்லை'' என்றான் பொன்னன். சற்றுப் பொறுத்து, ''வள்ளி! யுத்தத்துக்கு நான் கட்டாயம் போக வேண்டும்!'' என்றான்.

அத்தியாயம் 4

பாட்டனும் பேத்தியும்

உறையூர்க் கம்மாளத் தெருவில் ஒரு வீட்டு வாசலில் வந்து பொன்னனும் வள்ளியும் நின்றார்கள். கதவு சாத்தியிருந்தது. ''தாத்தா!'' என்று வள்ளி கூப்பிட்டாள். சற்று நேரத்துக்கெல்லாம் கதவு திறந்தது. திறந்தவன் ஒரு கிழவன். ''வா, வள்ளி! வாருங்கள் மாப்பிள்ளை!'' என்று அவன் வந்தவர்களை வரவேற்றான். பிறகு, வீட்டுக்குள்ளே நோக்கி, ''கிழவி! இங்கே வா! யார் வந்திருக்கிறது பார்!'' என்றான்.

மூன்று பேரும் வீட்டுக்குள் போனார்கள். ''யார் வந்திருக்கிறது?'' என்று கேட்டுக் கொண்டே அங்கு வந்த கிழவி வள்ளியையும் பொன்னனையும் பார்த்ததும் பல்லில்லாத வாயினால் புன்னகை புரிந்து தன் மகிழ்ச்சியைத் தெரிவித்தாள். வள்ளியைக் கட்டிக் கொண்டு, ''சுகமா யிருக்கயா, கண்ணு? அவர் சுகமா யிருக்காரா?'' என்று கேட்டாள்.

பொன்னன், ''தாத்தா! உங்கள் பேத்தியைக் கொண்டு வந்து ஒப்புவித்து விட்டேன். நான் கொஞ்சம் வெளியே போய்விட்டு வருகிறேன்'' என்றான்.

''வந்ததும் வராததுமாய் எங்கே போகிறாய்?'' என்று கிழவன் கேட்டான்.

''மகாராஜாவைப் பார்க்கப் போகிறேன்'' என்றான் பொன்னன்.

''மகாராஜா இப்பொழுது அரண்மனையில் இல்லை. மலைக்குப் போயிருக்கிறார். இங்கே வா, காட்டுகிறேன்'' என்று கிழவன் அவர்களை வீட்டு முற்றத்துக்கு அழைத்துப் போனான். முற்றத்திலிருந்து அவன் காட்டிய திக்கை எல்லாரும் பார்த்தார்கள். உச்சிப் பிள்ளையார் கோவில் தீபம் தெரிந்தது. அங்கிருந்து தீவர்த்திகளுடன் சிலர் இறங்கி வருவதும் தெரிந்தது. இறங்கி வந்த தீவர்த்திகள் வழியில் ஓரிடத்தில் சிறிது நின்றன.

''அங்கே நின்று என்ன பார்க்கிறார்கள்?'' என்று வள்ளி கேட்டாள்.

''மகேந்திர சக்கரவர்த்தியின் சிலை அங்கே இருக்கிறது. மகாராஜா, இளவரசருக்கு அதைக் காட்டுகிறார் என்று தோன்றுகிறது'' என்றான் கிழவன்.

''அவர்கள்தான் இறங்கி வருகிறார்களே தாத்தா! நான் அரண்மனை வாசலுக்குப் போகிறேன். இன்று ராத்திரி மகாராஜாவை எப்படியும் நான் பார்த்துவிட வேண்டும்'' என்று சொல்லிக் கொண்டே பொன்னன் வெளிக் கிளம்பினான். கிழவன் அவனோடு வாசல் வரை வந்து, இரகசியம் பேசும் குரலில், ''பொன்னா! ஒரு முக்கியமான சமாசாரம் மகாராஜாவிடம் தெரிவிக்க வேணும். மாரப்ப பூபதி விஷயத்தில் கொஞ்சம் ஜாக்கிரதையா யிருக்கச் சொல்லு. இதை அந்தரங்கமாக அவரிடம் சொல்ல வேணும்'' என்றான்.

''மாரப்பபூபதியைப் பற்றி என்ன?'' என்று பொன்னன் கேட்டான்.

''அதெல்லாம் அப்புறம் சொல்கிறேன், மகாராஜாவின் காதில் எப்படியாவது இந்தச் செய்தியைப் போட்டுவிடு'' என்றான் கிழவன்.

கிழவி விருந்தாளிகளுக்குச் சமையல் செய்வதற்காக உள்ளே போனாள். பாட்டனும் பேத்தியும் முற்றத்தில் உட்கார்ந்தார்கள்.

திடீரென்று வள்ளி, ''ஐயோ! தாத்தா! இதெல்லாம் என்ன?'' என்று கேட்டாள்.

முற்றத்தில் ஒரு பக்கத்தில் உலைக்களம் இருந்தது. அதன் அருகில் கத்திகளும் வாள்களும் வேல்களும் அடுக்கியிருந்தன. அவைகளைப் பார்த்துவிட்டுத்தான் வள்ளி அவ்விதம் கூச்சல் போட்டாள்.

''என்னவா! வாளும் வேலும், சூலமும்தான். நீ எங்கே பார்த்திருக்கப் போகிறாய்? முன் காலத்தில்...''

"இதெல்லாம் என்னத்துக்கு, தாத்தா?"

"என்னத்துக்காகவா? கோவிலில் வைத்துத் தூப தீபம் காட்டிக் கன்னத்தில் போட்டுக் கொள்வதற்காகத்தான்! கேள்வியைப் பார் கேள்வியை! தேங்காயைக் குலை சாய்ப்பது போல் எதிராளிகளின் தலைகளை வெட்டிச் சாய்ப்பதற்கு வாள்; பகைவர்களின் வயிற்றைக் கிழித்துக் குடலை எடுத்து மாலையாகப் போட்டுக் கொள்வதற்கு வேல்! தெரிந்ததா?"

"ஐயையோ! பயமாயிருக்கிறதே!" என்று வள்ளி கூவினாள்.

"இன்னும் கொஞ்ச நாள் போனால் இந்த நாட்டு ஆண் பிள்ளைகள் கூட உன்னைப்போலேதான் ஆகிவிடுவார்கள். வாளையும் வேலையும் கொண்டு என்ன செய்கிறது என்று கேட்க ஆரம்பித்து விடுவார்கள். வள்ளி! இதைக் கேள்! என்னுடைய பாட்டன், முப்பாட்டன் காலங்களில் எல்லாம் எப்படித் தெரியுமா? அப்போது கொல்லுப் பட்டறையில் எல்லாம் வாளும் வேலும் சூலமும் செய்த வண்ணமாயிருப்பார்களாம். ஒவ்வொரு பட்டணத்திலும் கம்மாளத் தெருதான் எப்போதும் 'ஜே ஜே' என்று இருக்குமாம். ராஜாக்களும் ராஜ குமாரர்களும் சேனாதிபதிகளும் கம்மாளனைத் தேடி வந்து கொண்டிருப்பார்களாம். என் அப்பன் காலத்திலேயே இதெல்லாம் போய் விட்டது. வாழைக் கொல்லை அரிவாள்களும், வண்டிக்குக் கடையாணிகளும், வண்டி மாட்டுக்குத் தார்க் குச்சிகளும் செய்து கம்மாளன் வயிறு வளர்க்கும்படி ஆகிவிட்டது. என் வயதில் இப்போதுதான் நான் வாளையும் வேலையும் கண்ணால் பார்க்கிறேன்... ஆகா! இந்தக் கைகளிலே மட்டும் முன்னைப்போல் வலிவு இருந்தால்?... இருபது வருஷத்துக்கு முன்னாலே இந்த யுத்தம் வந்திருக்கக் கூடாதா!"

"சரியாய்ப் போச்சு, தாத்தா! இவருக்கு நீ புத்தி சொல்லித் திருத்துவாயாக்கும் என்றல்லவா பார்த்தேன்! யுத்தத்துக்குப் போகணும் என்று இவர் ஓயாமல் சொல்லிக்கொண்டிருக்கிறார்!"

"பொன்னனா? அவன் எங்கே யுத்தத்துக்குப் போகப் போகிறான் வள்ளி? பொன்னனாவது உன்னை விட்டு விட்டுப் போகவாவது? துடுப்புப் பிடித்த கை, வாளைப் பிடிக்குமா? பெண் மோகம் கொண்டவன்சண்டைக்குப்போவானா?"

"அப்படி ஒன்றும் சொல்ல வேண்டாம் தாத்தா! இவர் போகணும் போகணும் என்றுதான் துடித்துக் கொண்டிருக்கிறார். மகாராஜாதான் வரக் கூடாது என்கிறார். இளவரசருக்கு நீந்தக் கற்றுக் கொடுக்க இவர் இருக்க வேணுமாம்."

"அடடா! உன்னுடைய அப்பனும் சித்தப்பன்மார்களும் மட்டும் இப்போது இருந்தால் ஒவ்வொருவன் கையிலும் ஒரு வாளையும் வேலையும் கொடுத்து அனுப்ப மாட்டேனா? எல்லாரையும் ஒரே நாளில் காவேரி அம்மன் பலி கொண்டுவிட வேண்டுமா?" என்று சொல்லிக் கொண்டே கிழவன் பெருமூச்சு விட்டான்.

வள்ளிக்கு அந்தப் பயங்கரமான சம்பவம் ஞாபகம் வந்தது.

நாலு வருஷத்துக்கு முன்பு கிழவனையும் கிழவியையும் தவிரக் குடும்பத்தார் அனைவரும் ஆற்றுக்கு அக்கரையில் நடந்த ஒரு கல்யாணத்துக்காகப் படகில் ஏறிப் போய்க்கொண்டிருந்தார்கள். நடு ஆற்றில் திடீரென்று ஒரு சூறாவளிக் காற்று அடித்தது. படகு கவிழ்ந்து விட்டது. அச்சமயம் கரையில் இருந்த பொன்னன் உடனே நதியில் குதித்து நீந்திப் போய்த் தண்ணீரில் விழுந்தவர்களைக் காப்பாற்ற முயன்றான். தெய்வ யத்தனத்தினால் வள்ளியை மட்டும்தான் அவனால் காப்பாற்ற முடிந்தது. மற்றவர்கள் எல்லாரும் நதிக்குப் பலியானார்கள்.

கிழவன் மேலும் சொன்னான்: "என் குலத்தை விளங்க வைக்க நீ ஒருத்திதான் இருக்கிறாய். உன் வயிற்றில் ஒரு குழந்தை பிறந்து விட்டால் பொன்னனை நானே கழுத்தைப் பிடித்துத் தள்ளுவேன், யுத்தத்துக்குப் போ என்று."

"யுத்தம் என்னத்துக்காக நடக்கிறது தாத்தா! அதுதான் எனக்குப் புரியவில்லை" என்றாள் வள்ளி.

"யுத்தம் என்னத்துக்காகவா?—மானம் ஒன்று இருக்கிறதே, அதற்காகத்தான்! எருதுக் கொடிக்குப் புலிக் கொடி தாழ்ந்து போகலாமா? தொண்டை நாட்டுக்குச் சோழ நாடு பணிந்து போகிறதா? இந்த அவமானத்தைப் போக்குவதற்காகத்தான்."

"எருதுக் கொடி யாருடையது?"

"இது தெரியாதா உனக்கு? எருதுக் கொடி காஞ்சி பல்லவ ராஜாவினுடையது."

"சிங்கக் கொடி என்று சொல்லு."

"இல்லை, எருதுக் கொடிதான்."

"நான் இன்றைக்குப் பார்த்தேன், தாத்தா! தூதர்களின் கொடியில் சிங்கம்தான் போட்டிருந்தது."

"ஆமாம்; எருதுக் கொடியைச் சிங்கக் கொடியாக மாற்றி விட்டார்கள். ஆனால் எருது பன்றியை ஜயித்து விட்டதால் சிம்மமாகி விடுமா?" என்றான் கிழவன்.

''எனக்கு ஒன்றுமே புரியவில்லை, தாத்தா! விவரமாகச் சொல்லேன்'' என்றாள் வள்ளி.

''சரி, அடியிலிருந்து சொல்கிறேன், கேள்!'' என்று கிழவன் கதையை ஆரம்பித்தான்.

''நீ பிறந்த வருஷத்தில் இது நடந்தது. அப்போது காஞ்சியில் மகேந்திர சக்கரவர்த்தி ஆண்டு கொண்டிருந்தார். அவருடைய வீர பராக்கிரமங்களைப் பற்றி நாடெங்கும் பிரமாதமாய்ப் பேசிக் கொண்டிருந்த காலம். இந்த உறையூருக்கும் அவர் ஒருமுறை வந்திருந்தார். அவர் விஜயத்தின் ஞாபகார்த்தமாகத்தான் நமது மலையிலே கூட அவருடைய சிலையை அமைத்திருக்கிறது. இப்படி இருக்கும் சமயத்தில் வடக்கே இருந்து வாதாபியின் அரசன்—புலிகேசி என்பவன் — பெரிய படை திரட்டிக் கொண்டு தென்னாட்டின் மேல் படையெடுத்து வந்தான். சமுத்திரம் பொங்கி வருவது போல் வந்த அந்தச் சைனியத்துடன் யுத்த களத்தில் நின்று போர் செய்ய மகேந்திர சக்கரவர்த்திக்குத் தைரியம் வரவில்லை. காஞ்சிக் கோட்டைக்குள் சைன்யத்துடன் பதுங்கிக் கொண்டார். கோட்டையைக் கொஞ்ச காலம் முற்றுகையிட்டுப் பார்த்தான், புலிகேசி. அதில் பயனில்லை என்று கண்டு தெற்குத் திக்கை நோக்கி வந்தான். நமது கொள்ளிடத்தின் அக்கரைக்கு வந்து விட்டான். அப்பப்பா! அப்போது இந்த உறையூர் பட்டபாட்டை என்னவென்று சொல்லுவேன்! நமது பார்த்திப மகாராஜா அப்போது பட்டத்துக்கு வந்து கொஞ்ச நாள்தான் ஆகியிருந்தது. புலிகேசியை எதிர்க்கப் பலமான ஆயத்தங்கள் செய்து கொண்டிருந்தார். இதற்குள் வடக்கே புலிகேசியின் ராஜ்யத்துக்கே ஏதோ ஆபத்து வந்து விட்டதுபோலிருந்தது. புலிகேசி கொள்ளிடத்தைத் தாண்டவே யில்லை; திரும்பிப் போய் விட்டான். போகும்போது அந்தக் கிராதகனும் அவனுடைய ராட்சச சைன்யங்களும் செய்த அட்டூழியங்களுக்கு அளவே யில்லையாம். ஊர்களை யெல்லாம் சூறையாடிக் கொண்டும், தீ வைத்துக்கொண்டும் போனார்களாம். அதிலிருந்து மகேந்திர சக்கரவர்த்தியினுடைய புகழ் மங்கி விட்டது. 'சளுக்கரின் பன்றிக் கொடிக்குப் பல்லவரின் ரிஷபக் கொடி பயந்து விட்டது' என்று ஜனங்கள் பேசத் தொடங்கினார்கள். இந்த அவமானத்துக்குப் பிறகு மகேந்திர சக்கரவர்த்தி அதிக நாள் உயிரோடிருக்கவில்லை. அவருக்குப் பிறகு நரசிம்ம வர்ம சக்கரவர்த்தி பட்டத்துக்கு வந்தார். இவர் பட்டத்துக்கு வந்ததிலிருந்து புலிகேசியைப் பழிக்குப் பழி வாங்கிப் பல்லவ குலத்துக்கு ஏற்பட்ட அவமானத்தைப் போக்க வேணுமென்ற ஆயத்தங்கள் செய்து வந்தார். கடைசியில் ஆறு வருஷங்களுக்கு முன்பு பெரிய சைனியத்தைத் திரட்டிக் கொண்டு வடக்கே போனார். புலிகேசியைப் போர்க்களத்தில் கொன்று வாதாபி நகரையும் தீ வைத்துக் கொளுத்திச் சாம்பலாக்கி விட்டுத் திரும்பி வந்தார். இந்தப் பெரிய வெற்றியின் ஞாபகார்த்தமாகப் பல்லவர்களின் ரிஷபக் கொடியை நரசிம்ம சக்கரவர்த்தி சிங்கக் கொடியாக மாற்றி விட்டார். அவர் திரும்பி வந்து இப்போது ஒரு மாதம் தான் ஆகிறது, வள்ளி! அதற்குள்ளே..''



நூதன டென்னிஸ்!

டென்னிஸ் ஆட்டக்காரர் ஒருவர் தமது பகுதியிலிருந்து பந்தை அடித்தார். மறு கணம் வலைக்கப்பால் பாய்ந்து மறு பகுதிக்குச் சென்று, பந்து தரையில் விழுமுன் அதைத் திருப்பி அடித்தார். திரும்ப முன்னிருந்த பகுதிக்குப் பாய்ந்து வந்து பந்தை அடித்தார். இந்த முறையில் தாம் ஒருவரே 'கோர்ட்'டின் இரு பகுதிகளிலும் விளையாடினார். அவர்தாம் உலகப் புகழ்பெற்ற -- மிக்கி மௌஸ். வால்ட் டிஸ்னி, தமது கதாநாயகனை வைத்து இப்படி ஒரு படம் எடுத்திருக்கிறார்!

--என். ஆர்.


இத்தனை நேரமும் கவனமாய்க் கேட்டுக் கொண்டிருந்த வள்ளி ''அப்பேர்ப்பட்ட சக்கரவர்த்தியுடன் நமது மகாராஜா எதற்காக யுத்தம் செய்யப் போகிறார் தாத்தா! அவருடன் சிநேகமாக இருந்தால் என்ன?'' என்று கேட்டாள்.

''அடி பைத்தியக்காரி!....'' என்று கிழவன் மறுமொழி சொல்ல ஆரம்பித்தான்.

அப்போது வீதியில் குதிரை வரும் சத்தம் கேட்டது. அந்த வீட்டின் வாசலிலேதான் வந்து நின்றது.

''வீரபத்திர ஆச்சாரி!'' என்று யாரோ அதிகாரக் குரலில் கூப்பிட்டார்கள். உடனே கிழவன், ''அந்தச் சண்டாளன் மாரப்ப பூபதி வந்துவிட்டான். வள்ளி, நீ அவன் கண்ணில் படக்கூடாது, சமையற் கட்டுக்குள் போ; அவன் தொலைந்ததும் உன்னைக் கூப்பிடுகிறேன்'' என்றான். **(தொடரும்)**

ராஜேஷ் பெண் பார்க்கிறான்!



லக்ஷ்மி ரமணன்

பிரெஞ்சு வகுப்பிலிருந்து திரும்பிய நர்மதா வாசல் வராந்தாவில் செருப்பைக் கழற்றி வைக்கும்பொழுது தன் பாட்டியும் அம்மாவும் மாற்றி மாற்றி அப்பாவின்மீது சாடிக் கொண்டிருந்ததைக் கேட்டவளாய் நின்றுவிட்டாள். ''ஏண்டா ராகவா! உனக்குப் புத்தி இருக்காடா? வீட்டுக்குப் பெரியவளா நான் ஒருத்தி கல்லாட்டமா இருக்கேன். என்னை ஒரு வார்த்தை கேட்கணும்னு தோணலியா ஒனக்கு?'' — இது பாட்டியின் குரல்.


''கேளுங்கோ அம்மா! நன்னாக் கேளுங்கோ. வயசானா அறிவு மங்கிடும் போலும்பா. சரியா இருக்கு. ஊருலே ஒலகத்துலே கண்டதுமில்லே கேட்டதுமில்லே. நாம என்ன அமெரிக்காளா இல்லே ஐரோப்பாளா? பையன் பொண்ணோட பழகிப் பார்த்துட்டுத்தான் கல்யாணம் பண்ணிப்பாளாம். இங்கே வந்து நம்மாத்துலே ரெண்டு நாள் தங்கிட்டுப்போய் அப்புறம் முடிவு பண்ணுவாளாம். என்ன அநியாயம்! பிள்ளையோட அப்பா சொன்னார்னு இவரும் அசடாட்டம் தலையை ஆட்டிட்டு வந்து நிக்கறார். நான் ஏதோ ஒரு பொண்ணை உடப்புக்கல்லாட்டமா வெச்சுண்டு நல்ல எடமா அமையணுமேன்னு கவலைப் பட்டுண்டு இருக்கேன். இவர் என்னடான்னா பிள்ளையை அனுப்புங்கோன்னு சொல்லிட்டு அதோட பலன் என்ன ஆகும்னு யோசிக்காமே பேசிண்டிருக்கார். அந்தப் பிள்ளை யாண்டான் அப்படி என்ன பெரிய ஒசத்தி? பெரிய ராஜகுமாரனா? இந்தச் சம்பந்தத்திலே வீட்டுப் பெண்டுகளுக்கு விருப்பமில்லேன்னு சொல்லி உடனே வரவேண்டாம்னு தந்தி யடிங்கோ.'' அம்மாவோ தன் மாமியாருக்குமேல் சுருதி ஏறிய குரலில் சொன்னாள்.

''ரெண்டு பேரும் கொஞ்சம் சும்மா இருங்கோ. வரப்போறது என் சிநேகிதனோட பிள்ளைதானே. லண்டன் எல்லாம் போய்ப் பெரிய படிப்புப் படிச்சிருக்கான். தன்னோட அம்மா பேச்சைத் தட்டப்படாதுன்னு அங்கே கெடச்ச வேலையை ஒதறிட்டு இங்கே திரும்பி வந்து டயர் கம்பெனியிலே சேர்ந்துண்டிருக்கான். அப்பன் பேச்சை இந்தக் காலத்திலே எந்தப் பிள்ளை கேக்கறான்? வெளிநாட்டிலே இருந்துட்டு வந்த தோஷம். ஐடியாவெல்லாம் கொஞ்சம் மாடர்னா இருக்கு. கல்யாணத்துக்கு ஒப்புத்துக்கறதுக்கு முன்னாடி பொண்ணோட பேசிப் பழகணும்கறான். நமக்கோ சாஸ்திரப்படி ஜாதகம் பார்த்துச் சேர்ந்து போச்சு. மனுஷா நல்லவா. தெரிஞ்

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி

ரூ 500/-

இரண்டாம் பரிசுக் கதை





சவா. இந்த ஒரு சின்ன விஷயத்திலே எடக்குப் பண்ணினு நல்ல வரன் கையை விட்டுப் போயிடும். எல்லாம் ஒத்துண்டுடுவான், ஏன் கவலைப்படறே?''

''ஒத்துக்கலே...ன்னு வெச்சுக்கோங்க. அதையும் யோசிக்கணுமில்லே. நம்ம பெண்ணோட நாலு பேர் அறியப் பழகிட்டு வேண்டாம்னுட்டான். அப்புறம் அவளோட எதிர்காலம் என்ன ஆகிறது?''

''அடியே கல்யாணி! பழகறதுன்னு என்ன அர்த்தம்? மேற்கத்திக்காரா மாதிரி கட்டி அணைச்சுக்கப் போறானா? பைத்தியம் மாதிரிப் பேசாதே.''

''ஆமாம். பைத்தியம்தான். என்னவோ பண்ணுங்கோ. நான் சொல்லறதை நீங்க என்னைக்குத்தான் காதுலே போட்டுண்டேள்? நாளைக்குக் குழந்தை கல்யாணமாகாமே நின்னு நாலு பேர் நாலு பேசறதுக்குள்ளே நான் கண்ணை மூடிடணும். காமாட்சித் தாயே! காப்பாத்து.'' கல்யாணியின் கண்களிலிருந்து பிரவாகம் வரத் தயாராயிற்று. நர்மதாவுக்குக் கடகடவென்று சிரிப்பு வந்தது. சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள். அம்மாவும் பாட்டியும் வேண்டாததையெல்லாம் நினைத்து ஏன் இப்படிக் கவலைப்படுகிறார்கள்? அவள் என்ன இன்னும் சின்னக் குழந்தையா? அவளுடைய சிநேகிதிகள் சிலர் காதலித்துத் திருமணம் செய்து கொண்டிருக்கிறார்கள். பெரியவர்கள் கண்காணிப்பில்தான் இப்படியொரு புதுவிதப் பெண் பார்க்கும் படலம் நடக்கப் போகிறது. அவளை வேண்டாம் என்று மறுக்க ராஜேஷுக்கு எத்தனை உரிமை உண்டோ, அத்தனை உரிமை அவளுக்கும் அவனை நிராகரிப்பதற்கு உண்டு. அவள் எம். ஏ. படித்திருக்கிறாள். பத்து ராஜேஷ்களைச் சமாளிக்கும் சாமர்த்தியம் அவளுக்கு உண்டு. அதைப் புரிந்துகொள்ளாமல் வீட்டில் பெரியவர்கள் இப்படித் தங்களைக் குழப்பிக்கொள்வானேன்?'' என்று எண்ணியவளாய் அப்பொழுதுதான் உள்ளே நுழைகிறவள் மாதிரி வந்தாள்.

அவளைக் கண்டதும் ராகவன் தன் பொறுப்புக் குறைந்தவர் போல் ''சொல்லும்மா, நர்மதா. நாளைக்குக் காலையிலே பையன் வரப் போறான். உங்கம்மாவும் பாட்டியும் அவன் வரப்படாதுன்னு போர்க் கொடி காட்டிண்டு நிக்கறா. உன் அபிப்பிராயம் என்ன?'' என்றார்.

''வரப்படாதுன்னு எங்கே சொன்னேன்? ரெண்டு நாள் எல்லாம் பழக விட முடியாதுன்னேன்.''

''வரட்டுமே அப்பா!'' நர்மதாவின் கணீரென்ற பதில் கல்யாணிக்கு இருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கையையும் தகர்த்து விட்டது.

'' அப்பாவும் பொண்ணும் எக்கேடு கெடுங்கோ'' — முணுமுணுத்துக் கொண்டே அவள் உள்ளே போனாள்.

மறுநாள் காலையில் ராகவன் மட்டும் ஸ்டேஷனுக்குப் போய் ராஜேஷை அழைத்து வந்தார்.

இறங்கினதுமே, ''ஏன், உங்கள் பெண் வரவில்லை?'' என்று கேட்டானும்.

அதை ராகவன் நர்மதாவிடம் கிசுகிசுக்கப் போக ஒட்டுக் கேட்டுவிட்டுக் கல்யாணி, ''ஆமாம்; பெண்டாட்டி ஆகின்னப்பறம் இப்படியெல்லாம் கேட்கட்டும். இப்போ என்ன பெரிய உறவு தட்டுக் கெட்டுப் போச்சு''என்று இரகசியமாகப் பொரிந்தாள்.

அப்பாவும் பெண்ணும் ஒரு கட்சி. மாமியாரும் நாட்டுப்பெண்ணும் ஒரு கட்சி என்று வீட்டில் இருந்தவர்கள் இரு பிரிவுகளானாலும் வந்தவனுக்கு உபசாரம் எதிலும் குறை வைக்க முடியவில்லை. வேளைக்கு ஒரு ஸ்வீட்டும் பாயச, சித்திரான்னங்களுமாகச் சமையல் அமர்க்களப்பட்டது.

நர்மதா 'பளிச்'சென்று உடை உடுத்திக் கொண்டு ராஜேஷுக்கு வேண்டியவைகளைக் கவனித்துக் கொண்டாள். உணவு பரிமாறி

னாள். அவன் கேட்ட கேள்விகளுக்குச் சளைக்காது பதில் தந்தாள். பிரபல நாவலாசிரியர்களின் நடைகளைப் பற்றி விவாதித்தாள். அவன் வேண்டுமென்றே (அவன் பிரெஞ்சு பயிலுகிறான் என்று தெரிந்து கொண்டு) சம்பாஷணையின் நடுவில் பிரெஞ்சுப் பதங்களைப் பிரயோகித்தான். அவளும் புரிந்துகொண்டு விடை பகர்ந்தாள். வீணை வாசித்துக் காட்டினாள். அவன் இரகசியமாகத் தோட்டத்தில் சிகரெட் பிடிக்க நெருப்புப் பெட்டி கொண்டு வந்து கொடுத்தாள். மாலையில் அவனுடன் 'வாக்' போனாள். ஒரு நாள் பொழுது போனதே தெரியவில்லை.

''பையன் என்னவோ பார்க்க லட்சணமாகத்தான் இருக்கான். காதுக்குப் பக்கத்திலே ரெண்டு கரப்பான் பூச்சி ஊர்றது மாதிரி மயிரை வளர்த்துண்டு இருக்கிறது தான் சகிக்கலே'' என்று மாமியாரிடம் அபிப்பிராயத்தை வெளியிட்டாள் கல்யாணி.

''பாட்டி, மாமீன்னு பிரியமாக் கூப்பிட்டுப் பேசறான். ஆனால் அதென்ன செடிக்குப் பின்னாடி நின்னுண்டு ரயில் இன்ஜின் மாதிரி மணிக் கணக்கா புகை விடறான்? நம்ப வீட்டிலே யாருக்குமே இந்தப் பழக்கம் கிடையாதே'' என்று பாட்டி அங்கலாய்த்தாள்.

ராஜேஷ், நர்மதா தன் முன் வந்து நின்ற பொழுதெல்லாம் நேரே பார்க்க அவள் எப்படி இருக்கிறாள், பக்கவாட்டில் பார்த்தால் மூக்கு எடுப்பாக இருக்கிறதா என்றெல்லாம் ஆராய்ந்து கொண்டிருந்தான். அவள் நடை உடை பாவனைகளைக் கூர்மையாகக் கவனித்தான். அவள் பேசும்போது தயங்குகிறாளா, சரளமாக இருக்கிறாளா என்று பார்த்தான். தனக்குத் தெரிந்த பெண் சிநேகிதிகளுடன் அவளை அவன் மனம் ஒப்பிட்டுப் பார்த்தது. அவள் இன்னும் கொஞ்சம் நாகரிகமாக உடை உடுத்திக் கொள்ளலாமோ என்று தனக்குள் கேட்டுக் கொண்டான். கொஞ்சம் கர்நாடக டைப் மாதிரி இருந்தது. சில சமயங்களில் புன்னகை புரியும்பொழுதை விட அவள் கலகலவென மனம் விட்டுச் சிரிக்கும் பொழுது அதிகக் கவர்ச்சியுடன் இருக்கிறாளோ என்று தோன்றியது.

மறு நாள் காலை ராகவனுக்கு ஆபீசுக்குப் போக வேண்டியிருந்தது.

''சார்! நர்மதாவை நான் கொஞ்சம் வெளியே அழைத்துப் போகலாம் என்றிருக்கிறேன்.'' பாட்டியும் கல்யாணியும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''அப் கோர்ஸ். கோ அஹெட்.'' ராகவன் யாருடைய முகத்தையும் பார்க்காமல் பதில் சொல்லிவிட்டு நழுவி விட்டார். பிற்பகல் ஒரு மணி சுமாருக்கு ஆபீஸ் டிரைவர் காரைக் கொண்டுவந்து நிறுத்திப் பூட்டிவிட்டுச் சாவியைக் கொடுக்கும்பொழுது உறையினில் மூன்று மணிக் காட்சிக்கான ஓர் ஆங்கிலப் படத்துக்கு இரண்டு டிக்கட்டுகளையும் கொடுத்து விட்டுப் போனான்.

''உங்க ஃபாதர் ரொம்ப அண்டர்ஸ்டான்டிங் டைப். ஐ லைக் ஹிம்'' என்று நர்மதாவிடம் சொன்னான் ராஜேஷ்.

''அப்பாடா! அவரைப் பிடித்து விட்டதாக்கும்'' என்று மனத்துக்குள் சொல்லிக் கொண்ட நர்மதா புன்னகை பூத்தாள்.

காப்பி அருந்திவிட்டு இருவரும் கிளம்பிய பொழுது கல்யாணி அரை மனத்துடன் விடை கொடுத்தாள்.

ஜன்னலுக்குப் பின்னால் இருந்த வண்ணம் பாட்டி ரகசியமாகப் பார்ப்பதைக் கண்டதும் மறுபடியும் சிரிப்பு வந்தது நர்மதாவுக்கு.

முன் ஸீட்டுக் கதவைத் திறந்து நர்மதா அமர்ந்ததும் மூடிவிட்டு டிரைவர் ஆசனத்தில் தான் அமர்ந்தபொழுது வேண்டுமென்றே அவள் தோளின் மீது உரசும் வண்ணம் உட்கார்ந்தான்.

அவள் அசையவில்லை; முகத்தையும் சுளிக்கவில்லை. ''தைரியசாலியான பெண் தான்'' என்று எண்ணிக் கொண்டான் அவன்.

தெரு முனை திரும்பி மெயின் ரோட்டில் கொஞ்ச தூரம்கூடப் போயிருக்க மாட்டார்கள். வலது பக்க முன் சக்கரத்தில் காற்று போய்த் தொய்ந்தாடுவது தெரிந்தது.

காரை நிறுத்திவிட்டு இறங்கிப் பார்த்த ராஜேஷ் ''அடடே. பங்க்ச்சர்'' என்று கலவரத்துடன் சொன்னான்.


''அப்படியா! சீக்கிரம் போட்டுவிடுங்கள். எனக்கு நியூஸ் ரீலிலிருந்து கடைசி வரை பார்த்தால்தான் சினிமாப் பார்த்த திருப்தி'' என்று சொல்லிவிட்டுக் கைப்பையிலிருந்து ஓர் ஆங்கில நாவலை எடுத்துப் படிக்கத் தொடங்கி விட்டாள் நர்மதா.

ராஜேஷ் கையைப் பிசைந்து கொண்டு நின்றான். அவன் பிரபல டயர் கம்பெனியில் சட்ட ஆலோசகனாக இருந்தானே தவிர, கார் பங்க்ச்சர் ஆனால் டயர் மாற்றத் தெரியாது.

ஐந்து நிமிடங்களுக்குப் பிறகும் நிலைமையில் ஏதும் முன்னேற்றம் இல்லாமற் போகவே நர்மதா அவன் என்ன செய்து கொண்டிருக்கிறான் என்று எட்டிப் பார்த்தாள்.

ராஜேஷ் யாராவது உதவிக்கு வரமாட்டார்களா என்று தவித்துக் கொண்டிருப்பது தெரிந்தது. அவள் புத்தகத்தை மூடி வைத்து விட்டுப் பரபரவென்று இறங்கி டிக்கியைத் திறந்து ஸ்டெப்னியை எடுத்தாள். அவன் பார்த்துக் கொண்டிருந்த பொழுதே புடவையைச் சற்றுத் தூக்கலாக எடுத்து இடுப்பில் செருகிக் கொண்டு 'ஜாக்' போட்டு முன்புறத்தை உயர்த்திவிட்டுப் பழைய டயரை கழற்றிப் புதியதை மாட்டினாள். கழற்றியதை எடுத்து இதர சாமான்களுடன் டிக்கியில் போட்டுவிட்டு அருகே இருந்த வீட்டுக்குள் நுழைந்து கையைக் கழுவிக்கொண்டு வந்து நின்றபொழுது ராஜேஷுக்கு அவளைப் பார்க்க ஏதோ சினிமாக் கதாநாயகி மாதிரி இருந்தது. அந்த ஆச்சரியம் அடங்குவதற்குள்ளாகவே அவள் டிரைவரின் ஸீட்டில் ஏறி உட்கார்ந்து, ''வாருங்கள், போகலாம்'' என்று வண்டியை 'ஸ்டார்ட்' செய்தபொழுது அவனுக்கு இன்னும் தூக்கி வாரிப் போட்டது.

''அடடே! ஆல்ரவுண்டராக இருப்பீர்கள் போல இருக்கே. அடக்கமாய் இருந்து கொண்டு எத்தனை விஷயங்களைத் தெரிந்து வைத்திருக்கிறீர்கள்'' என்று அவளைப்



ஒரு நாவலாசிரியர் நாவலின் முன்னுரையில் பின்வருமாறு எழுதினார்: ''இந்த நாவலை என் மனைவிக்கே சமர்ப்பிக்கிறேன். அவள் கோபித்துக்கொண்டு பிறந்தகத்துக்குப் போனதால்தான் நான் இதை எழுதி முடிக்க முடிந்தது.''

- ''லயோ''

ஓடோமாஸ் மட்டுமே உங்களுக்குக் கொசுக் கடியிலிருந்து 2-விதங்களில் பாதுகாப்பை அளிக்கிறது.

நீங்கள் இரவில் நிம்மதியாக உறங்க உதவுகிறது.


இதர கொசு விரட்டியைப் போலல்லாது
ஓடோமாஸ் உங்களைப் பாதுகாக்கிறது.

1



அதன் வாசனை கொசுக்களை விரட்டி அடிக்கிறது.

2



அதன் ஒப்பற்ற கலவைப்பொருள் உங்கள் சருமத்தை
இரவு முழுவதும் கொசுக்களிலிருந்து கவசம்போல்
காக்கிறது.

இன்று இந்தியாவில் அதிகமாக விற்பனையாகும
கொசு விரட்டி ஓடோமாஸ் என்பதில் வியப்பு
எதுவுமில்லை.

உடனே
ஓடோமாஸ்
உபயோகியுங்கள்.

இல்லையேல்
கொசுக்கள் உங்களுக்கு சொல்ல
முடியாத தொல்லையைத் தரும்.



சிறு
குழந்தைகளின்
மென்மையான
மேனிக்கு
முற்றிலும்
பத்திரமானது

மச்சர்
கா
துஷ்மன்

CHAITRA-BLS-86 TAM



ப்ளீச் செய்யாமலே கருநிற மேனியை சிகப்பாக்கும் க்ரீம்



உலகு காணும் புதுமை: நிறத்தைக் கரைக்காமலே (ப்ளீச் செய்யாமலே) கரு மேனியைச் சிகப்பாக்கும் சாதனம் எக்காலத்திலும் இருந்ததில்லை. சருமத்தைச் சிவப்பாக்க இதுநாள்வரை செய்த முயற்சிகள் எல்லாமே குருட்டு முயற்சிகள், முரட்டு முறைகள். ப்ளீச்சுகளின் சங்கதி உங்களுக்குத் தெரியும்: இருக்கும் நிறத்தையும் கரைத்து வெளிற வைத்து விடும். அடிக்கடி உபயோகிப்பதோ ஆபத்து: காரணம், சருமத்தையே பாதிக்கும் அவற்றின் கடுங்குணம்.

விடிவெள்ளி காட்டும் விஞ்ஞான சாதனையாம் ஃபேர் அண்ட் லவ்லி இரு வழிகளில் வேலை செய்கிறது:

1. உள்ளூர வேலை செய்யும் வைட்டமின் ஒன்று அதிலுள்ளது.

இந்தக் க்ரீமை இடும்போதே, இதிலுள்ள வைட்டமின் சருமத்தினுள் இறங்குகிறது. இழைத்துத் தடவும் போதே உணருவீர்கள் இதன் செயல்வேகத்தை: பரவும் சருமக் கருமையினை மெல்லத் திசைதிருப்புகிறது இது. வேளாவேளை ஆறு வாரங்கள் உபயோகித்துவந்தால் மேனி வண்ணம் மாறக் காண்பீர். பிறரும் காண்பார்.

2. வெளிப்புறத்திலிருந்து பாதுகாப்பதற்கு, சூரிய ஒளி படாதபடி தடுக்கும் சாதனம் அடங்கியுள்ளது.

நிறம் கருப்பதற்குக் காரணமான கதிரொளியை சருமத்தின் மீது படவிடாமல் தடுத்து விலக்கி, மேனியைக் காத்திடுகிறது ஃபேர் அண்ட் லவ்லி.

சிகப்பழகு தந்து, மேலும் பல வகையில் சிறப்பூட்டும் க்ரீம் ஃபேர் அண்ட் லவ்லி.

ஒப்பனைக்கு அடிப்படையாக தினமும் ஒரு முறை இடத்தக்கது ஃபேர் அண்ட் லவ்லி; இரு முறை உபயோகித்தாலோ நிறைவான பலனுண்டு. வேளாவேளை உபயோகித்துவாருங்கள், மங்காத சிகப்பு நிறத் தங்க மேனி மனம்போல் உங்களுக்கே.

சிகப்பான மேனியழகுக்கு மென்மையான வழி- ஃபேர் அண்ட் லவ்லி

தமிழ்நாட்டில் தேர்ந்தெடுத்த சில நகரங்களில் கிடைக்கும்.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

லின்டாஸ்-FALOV-4-140 TM (R)

பாராட்டிய வண்ணம் கனிவுடன் பார்த்தான் அவன். அவள் நெற்றியில் அரும்பியிருந்த வியர்வைத் துளிகளைத் துடைக்கக் கை துடித்தது. கஷ்டப்பட்டுத் தன்னை அடக்கிக் கொண்டான்.

''மிஸ்டர் ராஜேஷ், 'நீ' என்று என்னைச் சொன்னால் போதும். அடக்கமாய் இல்லாமல் எல்லாம் எனக்குத் தெரியும் என்று சத்தம் போட்டுக் கொண்டே வரணுமா?''

''ஓர் அழகான பெண்ணுக்கு அழகாக உடையும் மாற்றத் தெரியும் என்பதை இன்று தான் தெரிந்து கொண்டேன்.'' அவன் சொன்னது கேட்டு நாணத்தில் நர்மதா முகம் சிவந்தாள்.

தியேட்டருக்கருகில் காரை நிறுத்திவிட்டு இருவரும் படம் பார்க்கப் போனார்கள்.

ராஜேஷின் மனம் அதில் லயிக்கவில்லை. சலனமின்றிப் பதுமை போல் அமர்ந்திருந்த அவளை அடிக்கடி திரும்பிப் பார்த்துக்கொண்டிருந்தான். அவனைப் பற்றி அவள் என்ன நினைக்கிறாள்? அவள் ஒப்புக் கொண்டாலும் அவள் ஒதுக்கிவிடுவாளோ? படம் முடிந்தபின் இருவரும் மனம் விட்டுப் பேசிக்கொள்ளாமலேயே தவித்து வீடு வந்து சேர்ந்தார்கள்.

அவன் புறப்படும் வேளை வந்தது.

ராஜேஷ் தன் முடிவைச் சொல்லுவான் என்று எண்ணிய ராகவன் அவனைச் சுற்றிச் சுற்றி வந்தார்.

அவனோ வாயைத் திறக்கவேயில்லை.

''கேளேண்டா ராகவா, பண்ணிப் பண்ணி இப்படி நிப்பானா?'' பாட்டி அரற்றிக் கொண்டே இருந்தாள்.

ராகவனுக்கும் மனம் இலேசமடையத்தான் செய்தது. இந்த இடம் நடக்காவிட்டால் எல்லோருக்குமே பெரிய அதிர்ச்சியாக இருக்குமோ என்று தோன்றியது. அவன் புறப்படும் முன் நர்மதாவைப் பார்த்துச் சிரித்துவிட்டு விடைபெற்றுக் கொண்டவிதம் கொஞ்சம் நம்பிக்கை ஊட்டுவதாக இருந்தது.

ஆனால் அவன் ஊர் போய்ச் சேர்ந்து நான்கு நாட்களாகியும் எந்தவிதத் தகவலும் வராது போகவே பெற்றவரின் தவிப்பு அதிகமாயிற்று.

''தந்தியடித்துக் கேளேண்டா. இல்லே, போனிலாவது கேளு!'' பாட்டி நச்சரிக்கத் தொடங்கினாள். நர்மதா வெளிக்குச் சலனமில்லாமல் இருந்தாலும் உள்ளூறக் கவலைப்படாமல் இல்லை. அவள் தன்னால் இயன்ற வரை கலகலப்பாகப் பழகினாள். நன்றாக அலங்கரித்துக் கொண்டாள். அப்படியும் அவனுக்கு அவள் மீது நாட்டம் ஏற்படவில்லை என்றால் அவர்கள் திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படவில்லை என்று பொருள். 'அதற்காக வீணாக அலட்டிக் கொள்வானேன்' என்று தன்னைத் தானே தேற்றிக் கொண்டாள். கூடவே தான் உடை மாற்றியபோது அவன் தெரிவித்த பாராட்டும் நினைவுக்கு வந்தது. அந்த வார்த்தைகள்...? அவற்றுக்கு எந்தப் பொருளும் இல்லையோ? சிந்தனையிலேயே நேரம் கழிந்தது.

அன்று...

அவள் தகப்பனாரின் பெயருக்கு ஏதோ ரிஜிஸ்தர் தபால் வந்தது. அனுப்பியவரின் பெயர் ராஜேஷ் அல்ல. வேறு யாரோ வட இந்தியர். கையெழுத்துப் போட்டு வாங்கப் பேனாவை எடுத்தபொழுது கைப்பைக்குள்ளிருந்து ஒரு கவர் விழுந்தது.

'நர்மதா!' என்று பெயரிடப்பட்டிருந்த அதைப் பார்த்ததும் பரபரப்புடன் தபால்காரரை அனுப்பிவிட்டு அதைப் பிரித்துப் படித்தாள்.

''மிஸ் நர்மதாவுக்கு,


'டியர்' என்று ஆரம்பிக்க எண்ணினேன். உன் அபிப்பிராயத்தையும் தெரிந்து கொண்டுவிடுவது முதலில் அவசியம் என்று தோன்றியது. ஒரு பெண் அடக்கமாகவும் அதே சமயத்தில் நாகரீகமாகவும் இருக்க முடியும் என்று உன்னைப் பார்த்ததும்தான் புரிந்தது. லண்டன் போய்ப் படித்து விட்டு வந்ததையே பெரிய சாதனையாக எண்ணி இதுவரையில் இறுமாந்திருந்த எனக்கு உலகத்தில் நாம் அறிந்து கொள்ள வேண்டியது இன்னும் எத்தனையோ இருக்கையில் அனுபவத்தைப் பொறுத்தவரை நான் எத்தனை சிறியவன் என்பதை உணரும்படி நீ செய்து விட்டாய். உன்னுடைய மன ஒப்புதலும் இருக்குமானால் உன் தந்தையை உடனடியாகத் தெரியப்படுத்தச் சொல்லு.

உன்னுடையவனாகிவிட்ட
ராஜேஷ்''

நர்மதாவுக்குத் தூக்கிவாரிப் போட்டது. அதை எப்பொழுது அவன், அவள் கைப்பைக்குள் வைத்தான்? அவள் முட்டாள்தனமாகப் பார்க்காமல் இருந்து விட்டாளே. அவர்களிடமிருந்து பதில் ஏதும் இல்லை என்று இப்போது ராஜேஷும் அல்லவா துடித்துக் கொண்டிருப்பான்.

ராகவனுக்கு டெலிபோன் செய்து விஷயத்தைத் தெரியப்படுத்த நினைத்த நர்மதா அவர் 'என்ன?' என்று வினவியபோது வெட்கத்தில் பதில் சொல்ல முடியாமல் தடுமாறினாள்!

கலைஞர் பெயரால் ஓர் அரங்கம்



பீகார் மாநிலத்தில் பாகல்பூர் நகரத்தில் கட்டப்பட்டிருக்கும் கலை அரங்கத்துக்குத் தமிழக நாட்டியக் கலைஞர் ஒருவரின் பெயரை வைத்து இருக்கிறார்கள். சரோஜா வைத்தியநாதன் என்ற பரதநாட்டியக் கலைஞரின் சேவையைப் பாராட்டி 'சரோஜா பவனம்' என்று பெயரிட்டு இருக்கிறார்கள். காரணம் பாகல்பூரில் இருந்தபோது அந்நகருக்கு சரோஜா செய்த பணிகள் ஏராளம்.

கணவர் திரு வைத்தியநாதன் ஓர் உயர் அதிகாரி. அவரோடு சரோஜா பல இடங்களுக்குச் சென்று பல பரதநாட்டிய நிகழ்ச்சிகளை நடத்தியதுடன் மாதர் நல சேவைகளிலும் ஆர்வமாக ஈடுபட்டுள்ளார். கலைகளைப் பொறுத்தவரை 'சஹாரா'வாக உள்ள இடங்களில் கூடப் பரதநாட்டியப் பூக்களைச் சிருஷ்டித்து இருக்கிறார்.

— பாலாஜி

இந்து

என்றால் பிலிம்

போட்டோ·சினி·எக்ஸ்ரே.

இந்த சமயத்தில்தான் நாங்கள் ஓர் உண்மையை சொல்கிறோம். ஆனால், மூன்று வருடங்களாக இந்து எல்லாவித போட்டோ கிராபிக் பொருட்களையும் தயாரித்து வருகின்றது. இந்தியாவில் பிலிம் தயாரிக்கும் ஒரே கம்பெனி இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ்தான் என்பது மட்டும் விசேஷமல்ல; போட்டோ சென்ஸிடைஸ்டு பிலிம் தயாரிப்பில் மிக நவீன தொழில் நுணுக்கத் திறனைப் பெற்றுள்ள உலகின் தலை சிறந்த ஆறு கம்பெனிகளில் ஒன்றாகும் என்பது வியக்கத்தக்கது.

இந்துவின் தனிச்சிறப்பிற்குக் காரணம்: உலகிலேயே ஆறு நாடுகள் தான் அவர்களுக்கான பிலிமினை அவர்களே தயாரித்துக் கொள்கின்றனர். அவற்றில் இந்தியா ஒன்று. இந்தியாவிற்கே பெருமிதம் இந்து.

இந்து, அதனுடைய மேல் நாட்டுத் தொழில் கூட்டாளர்களிடமிருந்து மிகவும் கவனமாகவும், நிதானமாகவும் தொழில் நுணுக்கங்களைக் கற்றுக் கொண்டு சர்வதேச தர நிர்ணயத் திற்கேற்ப தரமிக்க போட்டோ பிலிமினைத் தயாரிக்கின்றது.

இந்து — முன்னணியாளர்களுடன் முன்னணியில் நிற்கிறது.

இந்துவின் சிறந்த தரத்திற்கு உறுதியான சான்று — தலை சிறந்த தொழில் முறை போட்டோகிராபர்கள், படத் தயாரிப்பாளர்கள், திரைப்பட இயக்குனர்கள், ரேடியாலஜிஸ்ட்டுகள் — இவர்கள் எல்லோரும் இந்துவையே விரும்பி தேர்ந்தெடுப்பதேயாகும். அவர்களுக்குத் தெரியும், இன்று எங்கெல்லாம் தரம் என பேசப்படுகிறதோ அங்கெல்லாம் இந்துவின் பெயரும் இணைந்திருக்குமென்பது.

இந்து அளிப்பவை — உங்கள் தரத்திற்குச் சான்று:

இந்து ரோல்பிலிம். இந்து ப்ரோமைட் பேப்பர். இந்து சினிபாஸிடிவ். இந்து சினி சவுண்ட் நெகடிவ். இந்து எக்ஸ்ரே இந்து பாலியெஸ்டர் எக்ஸ்ரே. இந்து மீடியம் காண்ட்ராஸ்ட் கிராஃபிக் ஆர்ட்ஸ் பிலிம். இந்து டயாபாஸிடிவ். இந்து டாகுமெண்ட் காபியிங் பேப்பர்.


இந்து அளிப்பவையெல்லாம் நியாயமான விலையில் சீரிய தரத்துடன் விளங்குகின்றன. தரத்தினை நீங்கள் நம்பலாம். ஏனெனில் அவைகள் இந்துவின் படைப்புகளாயிற்றே!

ஆம், இந்து இன்று தன்னிறைவு பெற்று சிறப்பாக இயங்குகின்றது. அதனால்தான் நாங்கள் உறுதியுடன் கூறுகிறோம்: ''இந்து என்றால் பிலிம்''

INDU®

இந்துஸ்தான்
போட்டோ பிலிம்ஸ்
மான்யுபாக்சரிங் கோ. லிமிடெட்
(இந்திய அரசு நிறுவனம்)
இந்துநகர், உதகமண்டலம் 643 005.

SAA/HPF/2153





6. புத்தகங்கள், பத்திரிகைகள், நூலகங்கள்

சோவியத் யூனியனிலும், போலந்திலும் இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி முத



★ லெனின் நூலகத்தில் [illegible] படிக்கும் நாள்.

★ அ ல ா ச குடியரசில் [illegible] நூலகத்தில் பழைய கையெழுத்துப் பிரதி ஆராயப்படுகிறது.

★ மாஸ்கோ லெனின் நூலகம்.

★ பி. பி. ஸி. தமிழோசையின் பணியாளர்கள்.



லிய பிற ஐரோப்பிய நாடுகளிலும் தகவல் ஒலிபரப்பு செய்தி, புத்தகங்கள், பதிப்பகங்கள், நூல் நிலையங்கள் பற்றிச் சற்று அதிக அக்கறையுடன் கவனித்தேன் என்றே சொல்ல வேண்டும். ஐரோப்பிய நாடுகள் எல்லாவற்றிலும் செய்தியாளர்கள், பத்திரிகையாளர்கள் புத்தக ஆசிரியர்களுக்கும் ரேடியோ, டெலிவிஷன் நிகழ்ச்சிகளுக்கும் அதிகமான தொடர்பு உண்டு. அதிகமான பங்கும் உண்டு.

ஒலிபரப்புத் துறையிலும் சரி, டெலிவிஷன் துறையிலும் சரி, முன்மாதிரியாக அமையும் வளர்ச்சியை அவர்கள் பெற்றிருக்கிறார்கள். மாஸ்கோ ரேடியோ, பி.பி.ஸி, ரோமிலுள்ள வாடிகன் ரேடியோ ஆகியவற்றில் பல்வேறு மொழிகளில் ஒலிபரப்புகிறார்கள். மாஸ்கோ ரேடியோவின் தமிழ்ப் பிரிவிலும் பி.பி.ஸி. தமிழ்ப் பிரிவிலும் நானே கலந்து கொண்டு சொற்பொழிவுகள், உரையாடல்கள் செய்ய முடிந்தது. வாடிகன் ரேடியோவில் அதற்கு வாய்ப்பு இருந்தும் ஈஸ்டர் வாரத்தில் நான் இத்தாலி போய்ச் சேர்ந்திருந்தேன். இந்தியத் தூதரக நண்பர்கள் மூலம் அதற்கு ஏற்பாடு நடக்கும் முன்னரே நான் ரோமிலிருந்து ஏதென்ஸ் புறப்பட நேர்ந்து விட்டது. வாடிகன் போப்பாண்டவரின் ஆளுகைக்கு உட்பட்ட தனி ரேடியோவாகும்.

மாஸ்கோ வானொலியில் தமிழ், கன்னட, மலையாள, தெலுங்கு ஒலிபரப்புப் பிரிவுகளும் உள்ளன. தமிழ்ப் பிரிவின் தலைவராக இருக்கும் மீனின் என்ற ரஷ்யர் (இவர் சென்னையில் சிறிது காலம் தங்கித் தமிழ் கற்றவர்.) இலக்கணப் பிழையற்ற நல்ல தமிழில் அழகாக உரையாடுகிறார். என்னுடைய சில பேச்சுக்களின் ஒலிப் பதிவுக்காக நான் மாஸ்கோ



ரேடியோவுக்குச் சென்றிருந்த சமயத்தில் அங்கு தமிழ்ப் பிரிவில் பணி புரியும் நாஞ்சில் மணிவர்மன் விடுமுறையில் இந்தியா வந்திருந்ததனால், பீப்பிள்ஸ் பிராகிரஸ் பப்ளிஷிங் ஹவுஸைச் (People's Progress Publishing House) சேர்ந்த திரு கிருஷ்ணையாவும், மீனிலும் அவற்றைப் பதிவு செய்தார்கள். கன்னட, தெலுங்கு, மலையாளப் பிரிவு நண்பர்களையும் சந்தித்தேன். கடல் போல் பெரிய மாஸ்கோ வானொலியில் பல்வேறு உலக மொழிப் பிரிவுகள் திறமாகவும், தரமாகவும் அமைந்திருக்கின்றன. சோவியத் யூனியனின் பல்வேறு பகுதிகளிலும் நான் பார்த்த டெலிவிஷன் நிகழ்ச்சிகள் சாரமுள்ளவையாகவும் சுவையாகவும் அமைந்திருந்தன. ஹோட்டல் அறைகளில் எல்லாம் அநேகமாக டெலிவிஷன் பெட்டிகள் வைக்கப் பட்டுள்ளன. நாடு முழுவதுமாக மொத்தம் 132 டெலிவிஷன் கேந்திரங்கள் உள்ளன. ஒவ்வொன்றுக்கும் தனித் தனி நிகழ்ச்சி ஏற்பாடுகள் உண்டு. எல்லாவற்றிலும் பெரியது மாஸ்கோ டி. வி. நிலையமே. மாஸ்கோ, கீவ், பிலிஸி, தாஷ்கெண்ட், பாக்கூ, லெனின்கிராட் ஆகிய நகரங்களில் உள்ள டி. வி. ஸ்டூடியோக்கள் வண்ண நிகழ்ச்சிகளை (Colour Programme) ஏற்பாடு செய்கின்றன. ஒளி பரப்புகின்றன. மாஸ்கோ டி. வி. சென்டர் தனது 6 சானல்களிலுமாக நாளொன்றுக்கு 46 மணியளவு நிகழ்ச்சி நேரத்திற்கு (Operating Time) இயங்குகிறது. வானொலி 8 சானல்களிலுமாக நாளொன்றுக்கு 142 மணி நேரம் இயங்குகிறது. நாட்டின் மொத்த ஒளிபரப்பும் நேரம் (Telecasting Time) சராசரி 1889 மணிகள். ஒலிபரப்பு நேரம் (Broadcasting Time) சராசரி 1040 மணிகள். 67 உள்நாட்டு மொழிகளிலும், 70 அந்நிய மொழிகளிலும் ஒலிபரப்பு நடக்கிறது.

போலந்தில் ரேடியோ, டெலிவிஷன் நிகழ்ச்சிகளில் மேற்கு ஐரோப்பிய — அமெரிக்கச் சாயல்கள் கொஞ்சம் உண்டு. குற்றக் கதைப் படங்கள் (Crime Story) டி. வி. யில் நிறைய பார்க்கலாம். துப்பறியும் கதைகள், படங்களில் கொஞ்சம் மோகம் உண்டு.

மாஸ்கோ ரேடியோவுக்கு அடுத்தபடி பல மொழிகளில் ஒலிபரப்பு நடக்கும் ரேடியோ இங்கிலாந்தின் பி. பி. ஸி. சிறந்த கவிஞரும், புவனேஸ்வர் அகில இந்திய ரேடியோ நிலைய டைரக்டருமான திரு துறைவனின் தம்பி எஸ். சங்கரமூர்த்தி. இப்போது பி.பி.ஸி.யில் தமிழோசை முழங்குகிறார். டாக்டர் டி. கே. கிருஷ்ணமூர்த்தி, கரடியார் சீதாராம கிருஷ்ணமூர்த்தி, ஆனந்தி, கமலா ஆகியோர் நிகழ்ச்சிகளில் பங்கு ஏற்கிறார்கள். ஞாயிறு, திங்கள், வியாழன், சனி ஆகிய நாட்களில் இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், பர்மா ஆகிய நாடுகளுக்காகப் பி.பி.ஸி.யின் தமிழோசை கேட்கிறது.



பி.பி.ஸி. டெலிவிஷனில் மிகவும் பிரபலமாக இருக்கும் ஒரு நிகழ்ச்சியை இங்கே குறிப்பிட்டாக வேண்டும். ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும்

இரவு 10 மணிக்கு 'தட் இஸ் லைஃப்' (That is life) என்று ஒரு நிகழ்ச்சி நடக்கிறது. 'எஸ்தர்' என்ற பெண்மணி இந்த நிகழ்ச்சியை நடத்துகிறார். இளைஞர் முதல் முதியோர் வரை இந்த நிகழ்ச்சியை யாரும் தவற விடுவதே கிடையாது. பிரிட்டன் முழுவதும் ஒருவகை ஆவலோடு முனைந்து பார்க்கப்படுகிறது இந்நிகழ்ச்சி. பத்திரிகை புத்தகங்கள், விளம்பர அறிவிப்புப் பலகைகளிலுள்ள பிழைகளையும், அச்சுப் பிழைகளையும் எப்படியாவது மார்க்கெட்டில் விற்பனைக்கு வந்துவிடுகிற தரம் குறைந்த (Sub Standard) பண்டங்களையும், தவறுகளையும் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல் நாசூக்காகக் கட்டிக் காட்டிக் கிண்டல் செய்யும் நிகழ்ச்சி இது. சிரிக்கச் சிரிக்க எடுத்துச் சொல்லி அதன் மூலம் பல துறைகளில் நேரும் பிழைகளைத் திருத்துகிறார்கள். 'எஸ்தர்' தவிர மற்றும் சில பத்திரிகையாளர்கள், விமர்சகர்கள் இதில் பங்கு பெறுகிறார்கள். வில்ஸன் பதவி விலகிய தினத்தன்று 'வீக் எண்ட் வோர்ல்ட்' (week end world) என்ற பகுதியைப் படைப்பதன் மூலம் பிரபலமாகியிருக்கும் பீட்டர் ஜே (Peter Joy) நம்பர் 10, டௌனிங் தெருவில் பிரிட்டிஷ் பிரதமரின் வீட்டு முகப்பில் நின்று டெலிவிஷனுக்காக நிகழ்ச்சி ஒளிப்பதிவு செய்து கொண்டிருந்ததைப் பார்த்தேன். பெரிய பத்திரிகையாளரும் அரசியலில் செல்வாக்குள்ள குடும்பத்தைச் சேர்ந்தவருமான பீட்டர் ஜே அந்த டெலிவிஷன் நிகழ்ச்சியைப் பிடித்து முடிப்பதற்காக எடுத்துக் கொண்ட சிரத்தை வியப்பூட்டுவதாக இருந்தது. பி. பி. சி. தவிர 'தேம்ஸ் டெலிவிஷன் ஸ்டுடியோ'வினரும் நிகழ்ச்சி ஒளிபரப்புகின்றனர். டெலிவிஷனில் மாணவர் வேலைநிறுத்தம் ஒன்றை ஆதரித்துப் பேராசிரியர்கள் பேசியதைப் பிரான்ஸில் பார்த்தேன். எம்.ஏ. பட்டதாரிகள் அனைவருமே பி.எச்.டி. எழுதலாம் என்ற நிலையை மாற்றி 'அதில் தகுதியுள்ள, அதிகமான மதிப்பெண் பெற்ற சிலரே இனி எழுத முடியும்' என்று பிரெஞ்சு அரசாங்கம் புதிய முடிவு செய்ததை எதிர்த்து எல்லாப் பல்கலைக் கழக மாணவர்களும் வேலைநிறுத்தம் செய்தனர். இந்த வேலைநிறுத்தத்தில் மாணவர்கள் நிலையை ஆதரித்தும் அரசின் நிலையைக் கண்டித்தும் பேராசிரியர்கள் பேசும் அளவு கல்வி நிலையங்களில் ஆசிரியர்களுக்கு உரிமை இருக்கிறது போலும்.

அலுவலகம் முடிந்து வீடு திரும்பியதும் டெலிவிஷனுக்கு எதிரே ஆவலோடு உட்காருகிற அளவு ஐரோப்பிய நாடுகளிலும் சோவியத் யூனியனிலும் அதைச் சுவாரசியமான, சுறுசுறுப்பான சாதனமாக இயக்குகிறார்கள்.

புத்தக வெளியீட்டுத் துறை, பதிப்பகத் துறையில் யுனெஸ்கோ (Unesco) மதிப்பீட்டின்படி பல ஆண்டுகளில் சோவியத் யூனியன் முதலிடம் பெற்றிருக்கிறது. உலகின் எல்லாப் பகுதிகளிலும் தயாராகும் புத்தகங்களில் நாலில் ஒரு பங்கு சோவியத் யூனியனில் மட்டுமே வெளியிடப் படுகின்றன. 1.5 ஆயிரம் மில்லியன் பிரதிகள் அடங்கிய 80,000 புத்தகங்கள் ஆண்டுதோறும் சோவியத் யூனியனின் பிரசுரமாக வெளியாகின்றன. 214 புத்தக வெளியீட்டு நிறுவனங்களும், 15 செய்தித் தாள் வெளியீட்டகங்களும் அரசின் சார்பில் இயங்குகின்றன. உள்நாட்டைச் சேர்ந்த 89 மொழிகளிலும் 56 அயல் மொழிகளிலும் இந்தப் புத்தக வெளியீட்டு நிறுவனங்கள் பணி புரிகின்றன.

உணவுப் பொருள்கள் முதலிய அடிப்படைத் தேவைகளின் விலை எப்படி நாடு முழுதும் ஒரே சீராக மலிவாய் இருக்கிறதோ, அப்படியே புத்தகங்களின் விலைகளும் மலிவாக உள்ளன. பெரும்பாலும் புத்தகங்கள் விரிவான மக்கள் பதிப்புக்களாக (Mass Editions) வருவதினாலும், அதிக லாப வேட்டையோடு அலையும் தனியார் பதிப்பகமாக எதுவும் இல்லாததாலும் — புத்தகங்களை மலிவான விலையில் வெளியிடுவது அங்கே சாத்தியமாகிறது. குழந்தைகளுக்கான புத்தகங்களோ கொள்ளை மலிவு. குழந்தைகள் புத்தகங்களுக்கான 10 மத்திய கேந்திரங்களும், பல்வேறு குடியரசுகளைச் சேர்ந்த 100 வெளியீட்டகங்களுமாக ஆண்டுதோறும் 320 மில்லியன் பிரதிகளை வெளியிடுகின்றன என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன்.


102 மொழிகளில் 447.7 மில்லியன் பிரதிகள் லெனினின் புத்தகங்களும், 81 மொழிகளில் 96.5 மில்லியன் பிரதிகள் மார்க்ஸ் எங்கெல்ஸ் புத்தகங்களும், புஷ்கின் தொகுதிகள் (பத்து வால்யூம்கள்) 300,000 பிரதிகளும், டாஸ்டயேவ்ஸ்கி தொகுதிகள் (10 வால்யூம்கள்) 100,000 பிரதிகளும், பொக்காஷியோ (Bocaccio) வின் டெக்காமரான் 375,000 பிரதிகளும் ஹெமிங்வே தொகுதிகள் (4 வால்யூம்கள்) 100,000 பிரதிகளும் எம். ஷெலகோவின் 'அவர்கள் தங்கள் நாட்டுக்காகப் போரிட்டார்கள்' (They Fought for their Country) 100,000 பிரதிகளும் வெளிவந்தன என்றும் புள்ளி விவரங்கள் கூறுகின்றன. 'புதுமைப் பித்தன் கதைகள்' தமிழில் (அவர் எழுதிய தாய் மொழியில்) ஒரு பதிப்பு ஆயிரம், இரண்டாயிரம் விற்றிருக்கலாம். ஆனால் ரஷ்யனில் 30,000 பிரதிகளுக்குக் குறையாமல் மொழிபெயர்ப்பே விற்றிருக்கிறது. திருக்குறள் வசன நடையில் ஒன்றும், கவிதை நடையில் ஒன்றுமாக மொழிபெயர்ப்பாகிப் பல்லாயிரம் பிரதிகள் விற்றிருக்கின்றன.

1973 மே மாதம் முதல் புத்தக வளர்ச்சி—கலாசார இலக்கிய வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு சர்வதேச 'காப்பிரைட்' ஏற்பாட்டில் சோவியத் யூனியனும் சேர்ந்திருக்கிறது.


சோவியத் யூனியன் முழுவதிலும் இருந்து மொத்தம் 8000 செய்தித் தாள்களும், 6,300 பத்திரிகைகள், சஞ்சிகைகளும் வெளிவருகின்றன. செய்தித் தாள்களின் மொத்த விற்பனை 150 மில்லியன் பிரதிகளைத் தாண்டிச் செல்கிறது.

இவற்றில் நாடளாவிய பெரிய செய்தித் தாள்கள் பிராவ்தா (உண்மை என்று பொருள்) 'இஸ்வெஸ்தியா (நியூஸ் — செய்தி என்று பொருள்) முதலியவை. பிராவ்தா சுமார் பத்து மிலியன் பிரதிகளும், இஸ்வெஸ்தியா சுமார் எட்டரை மிலியன் பிரதிகளும் விற்கின்றன. செய்தித் தாள்கள் 58 உள்நாட்டு மொழிகளிலும், ஒன்பது அயல்

அன்றும் இன்றும்



நேற்று நிறுவப்பட்டது ஜோதி யூனிபில்ட் பம்பு




இன்றே காணமுடிந்தது இன்ப நாள் இதனை


முன்னேற்றத்தின் இரகசியம்—

ஜோதி யூனிபில்ட் பம்பு

வெற்றி மிகு ஜோடி

ஜோதி
யூனிபில்ட்
பம்பு





ஜோதி
ஸ்டார்ட்டர்

ஆழ ஈர்ப்பு (டீப் ஸக்ஷன்) மூலம் செவ்வனே நீரிறைக்கும் திறன், அன்றாடப் பழுதுபார்ப்புத் தொல்லைக்குத் தீர்வு, மின்சாரச் செலவுகளிலே மிச்சம், நீடித்த ஆயுள்—இவை யாவும் ஜோதி யூனிபில்ட் பம்புகளிலே கிடைக்கும் முக்கிய நன்மைகள். இக் காரணத்தினால் தான் ஜோதி பம்பு காப்பியடிக்கப் படுகிறது. ஜோதி ஆராய்ச்சி நிலையத்தின் ஓயாத முயற்சிகளின் பயனாக, எப்போதுமே விவசாயிகள் இந்தப் பம்பையே கோருகின்றனர்.

ஜோதி லிமிடெட், பரோடா

ஹைட்ராலிக்ஸ் • எலக்ட்ரிகல்ஸ் • பவர் எலக்ட்ரானிக்ஸ்

everest/24r2/JY-tm

கிளை: எய்ர்லைன்ஸ் ஓட்டல், 177/179 மவுண்ட் ரோடு, சென்னை. போன்: 850 07.
விற்பனையாளர்கள்: வி. வி. & கோ., xxx/613, மகாத்மா காந்தி ரோடு, கொச்சி 682 016. ஆட்டோமேட்டிக் பம்ப் ஸ்பெஷலிஸ்ட்ஸ், நம்பர் 4, பாண்டி பஜார், தி. நகர், சென்னை 600 017; ஜயலட்சுமி டிரேடர்ஸ், நம்பர் 2, எர்ரபாலு செட்டி ஸ்ட்ரீட், சென்னை 600 001; ராஜும் & கோ., 61, சதி ரோடு, ஈரோடு; மேலக்கடை எலக்ட்ரிகல்ஸ், 215, மெயின் ரோடு, பெண்ணாடம் 606 105; ஆகட் ஏஜன்ஸீஸ், நம்பர் 8, நியூ கொழும்பு ஸ்டோர்ஸ், மாயூரம்; ப்ரீமியர் இண்டஸ்ட்ரீஸ், 80/81, செம்புதாஸ் ஸ்ட்ரீட், சென்னை 600 001; முருகன் ஆட்டோமேட்டிக்ஸ், காளியம்மன் கோயில் ஸ்ட்ரீட், உசிலம்பட்டி.



maa-SSM-46 TAM

மொழிகளிலும் நடத்தப் படுகின்றன. சஞ்சிகைகள் 48 உள்நாட்டு மொழிகளிலும், 25, அந்நிய மொழிகளிலும் நடத்தப்படுகின்றன. 'நியூ டைம்ஸ்' என்ற ஆங்கில வார சஞ்சிகை மிகச் சிறப்பாகச் சோவியத் யூனியனைப் பிரதிபலிக்கிறது. 'நவோஸ்தி' (Novosti) பிரஸ் ஏஜென்ஸி என்பது சோவியத் யூனியன் பொது செய்தி ஸ்தாபனமாகும். அதன் பிரிவான APN சர்வதேச உள்நாட்டுத் தொடர்புகளைக் கவனிக்கிறது. நம் நாட்டில் சோவியத் தூதரகம் இந்திய மொழிகளில் நடத்தும் 'சோவியத் நாடு' இதழைப் போல் அதே பாணியில் சோவியத் யூனியன் மக்களுக்காக நமது தூதரகம் 'இந்தியா' என்ற அழகிய ரஷ்ய மொழி இதழை நடத்துகிறது. லண்டனில் நமது தூதரக ஆதரவுடன் 'இந்தியா வீக்லி' (India Weekly) என்ற ஆங்கில இதழ் வருகிறது.

இங்கிலாந்தில் பெரிய தினசரி நிறுவனங்களே மாபெரும் பொருட்காட்சிகளுக்கு ஏற்பாடு செய்கின்றன. நான் லண்டனில் இருந்த போது 'டெய்லி மெயில்' பத்திரிகை ஒலிம்பியா எக்ஸிபிஷன் மைதானத்திலே வீடு வீட்டுக்கான பண்டங்கள் — சாதனங்கள் — தட்டுமுட்டுச் சாமான்கள் அடங்கிய பொருட்காட்சி (Daily Mail - Ideal home Exhibition) ஒன்றை மிகப் பெரிய அளவில் நடத்தியது. அதில் அமெரிக்கா, சைனு, ரஷ்யா போன்ற பல நாடுகள் பங்கு பெற்றிருந்தன. ஒரு நாள் முழுவதும் சுற்றிப் பார்க்கிற அளவு பொருட்காட்சி சிறப்பாக இருந்தது. காலையில் உங்களைத் தூக்கத்திலிருந்து எழுப்புவதற்கு அலாரம் அடிக்கும் கடிகாரத்தை மட்டும்தான் நீங்கள் பார்த்திருப்பீர்கள். 'ஆட்டோமேடிக்'காக இரண்டு அல்லது மூன்று கப் காப்பியோ டீயோ போட்டுத் தயாராக வைத்துக் கொண்டு அப்புறம் உங்களை எழுப்புவதற்கு மணி அடிக்கும் டீ மேக்கிங் காப்பி மேக்கிங் சாதனங்கள் இணைக்கப்பட்ட அலாரம் கடிகாரங்களை இந்த டெய்லி மெயில் எக்ஸிபிஷனில் பார்த்தேன். இவ்வளவு பெரிய எக்ஸிபிஷனை ஒரு தனிப்பட்ட தினசரி நடத்துகிறது என்பதை அறிந்த போது பிரமிப்பாக இருந்தது. பிரிட்டிஷ் பத்திரிகைகள் (டெய்லிகிராப் தவிர) தரமும், சர்வதேச விஷய கவனமும் உள்ளவை. ஒவ்வொரு தினசரியும் முழுமையும், தனித் தன்மையும் உடையவை. புதிய சஞ்சிகைகள் பரவுவதற்காக இரயில் நிலையங்களில் இலவசமாகத் தரப்படும் பழக்கம் பிரிட்டனில் இருக்கிறது. அழகிய ஆர்ட் பேப்பரில் பிரமாதமாக அச்சிட்ட பத்திரிகைகள் நாலு வாரங்களுக்குள் இருபது முப்பது பிரதிகள் என்னிடம் சேர்ந்து விட்டன. மாஸ்கோவில் நான் பார்த்த பெரிய பெரிய புத்தகக் கடைகளில் கூட்டம் மொய்த்துக்கொண்டிருந்ததைப் போலவே லண்டனிலே பார்த்த புத்தகக் கடைகளிலும் கூட்டம் இருந்தது. சேரிங் கிராஸ் ரோடு அருகே பார்த்த 'Foyles' என்ற புத்தக சூப்பர் மார்க்கெட் போன்ற பெரிய நிறுவனத்தில் பல மாடிகளில் உலகின் எல்லாப் புத்தகங்களும் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. தமிழ்ப் புத்தகங்களும் இருப்பதாகச் சொன்னதால் தேடிக் கண்டுபிடித்துச் சில 'லிஃப்கோ' வெளியீடுகளைப் பார்த்தேன். இது தவிர பாரதிய வித்யா பவன் லண்டன் கிளையிலும் இந்திய நூல்களை விற்கிறார்கள். விரைந்து விற்காத புத்தகங்கள், கிராம ஃபோன் ரிக்கார்டுகள் எல்லாவற்றையும் ஸ்டாக் வைத்துக்கொண்டு சிரமப்படாமல், அரை விலை, கால் விலைக்கும் குறைத்துப் பழைய புத்தகக் கடைக்குத் தள்ளிவிட்டு விடுவது அங்கு வழக்கம். இம்மாதிரி ஒரு பழைய புத்தகக் கடையின் பெயர் 'Words and Music' என்பது. அந்தக் கடையில் புத்தகங்கள் படு மலிவாகக் கிடைக்கின்றன. ஒரு விஷயத்தை மேம்போக்காகத் தெரிந்து வைத்துக்கொண்டு 'கப்ஸா' அடிப்பவர்களுக்கு மட்டுமேகூடச் சில புத்தகங்களைத் தயாரித்து விற்கும் பழக்கம் கூட லண்டன் கடைக்காரர்களிடம் உண்டு. 'கப்ஸா அடிப்போர் வரிசை' (Bluffer's Guide Series) என்றே ஒரு பெரிய பகுதியை ஒரு கடையில் பார்த்தேன்.

பிரிட்டனிலும் பிரான்ஸிலும் இந்திய ஆசிரியர்களில் 'நிராத் சௌதிரி' நன்கு தெரிந்திருக்கிறது. பாரிஸில் 'ராஜா ராவ்' பற்றி ஓரளவு அறிந்திருக்கிறார்கள். ரஷ்யாவோ, போலந்தோ, இங்கிலாந்தோ, பிரான்ஸோ தாகூரை மிக நன்முகத் தெரிந்திருக்கிறது.

சோவியத் யூனியனில் மொத்தம் 360,000 நூல் நிலையங்கள் இருக்கின்றன. அவைகளில் எந்தக் கட்டணமும், முன்பணமும் வசூலிக்கப்படுவதில்லை. நாட்டின் மக்கள் தொகையில் சரி பாதியினரான 120 மில்லியன் மக்கள் அவற்றை உபயோகிக்கிறார்கள். 129,000 நூலகங்கள் பொதுவான பகுதிகளிலும், 93,000 நூலகங்கள் நாட்டுப்புறங்களிலுமாக இயங்குகின்றன. விஞ்ஞானம், விவசாயம், தொழில் நுணுக்க ஆராய்ச்சிகளுக்கான சிறப்பு வகை நூல் நிலையங்களும் (Specialized Libraries) தனியே உள்ளன.

மாஸ்கோவில் உள்ள மிகப் பெரிய லெனின் ஸ்டேட் லைப்ரரி 27 மில்லியன் புத்தகங்களை உட்கொண்டிருக்கிறது. ஆண்டொன்றுக்கு 2,700,000 மக்கள் இந்த நூலகத்துக்குப் படிக்க வருகிறார்கள். இவை தவிர டிரேட் யூனியன் அலுவலகங்களிலும் தொழிலகங்களிலும் கூட நூல் நிலையங்கள் உண்டு. புத்தக 'கிளப்'களும் (Book clubs) உண்டு. 100 முக்கிய சோவியத் நூலகங்கள் 100 முக்கிய அயல் நாடுகளுடன் புத்தகப் பரிவர்த்தனை (Book Exchange Scheme) ஏற்பாடு வைத்திருப்பதால் பல புத்தகங்களும் படிக்கக் கிடைக்கின்றன. சோவியத் யூனியன் முழுவதும் உள்ள 'புத்தக 'கிளப்'களின் எண்ணிக்கை 133,000. வாழ்வின் எல்லாத் துறை மக்களும் புத்தக ஆர்வம் உள்ளவர்களாக இருப்பது சோவியத் யூனியனின் சிறப்பாகும். ரேடியோ, டெலிவிஷன், பத்திரிகை புத்தகம் எதுவானாலும் நாட்டின் அனைத்து வகை மக்களையும் அவை சென்றடையுமாறு செய்திருக்கும் சாதனை சோவியத் யூனியனுடையதாக இருக்கிறது. அதனால்தான் இந்த எல்லாச் சாதனங்களும் மக்கள் சாதனங்களாக அங்கே பரவ முடிந்திருக்கிறது.

(தொடரும்)

பல் வைத்தியர்கள் கூறுகிறார்கள்-

தவறாமல் பிரஷ்கொண்டு பற்களைத் துலக்குவதோடு, ஈறுகளையும் தேய்த்துக் கொடுத்தால், ஈறு உபாதைகளையும் பற்சிதைவையும் தடுக்கலாம்.

போர்ஹென்ஸ பற்பசையைத் தவறாது உபயோகிப்பவர்கள் தாங்களே கூறுகிறார்கள்:

"...பல் உபாதையால் அவதிப்பட்டு வந்த என் மனைவி... போர்ஹென்ஸ் உபயோகிக்கத் தொடங்கினாள்...வியக்கத் தக்க பலன் விளைந்தது...இப்போது ஈறு உபாதையால் அவதிப்படும் மற்றவர்களுக்கும் அதை அவள் சிபாரிசு செய்கிறாள். இங்கிலாந்திலுள்ள என் சகோதரரும் 6 ட்யூப் இந்திய போர்ஹென்ஸ் கேட்டு அவசரச் செய்தி அனுப்பினார்..." (கையொப்பம்)
டி.ஜி.எம். டிசௌஸா, பம்பாய்

"...ராஜ மகேந்திரத்திலுள்ள ஒரு பல் வைத்தியர்...பற்களும் ஈறுகளும் வலுப் பெற... போர்ஹென்ஸ் உபயோகிக்கச் சொன்னார். உடனே அப்படியே செய்தேன். சில நாட்களிலேயே என் மூச்சுக் காற்றும் ஈறுகளும் நல்லபடியாயின. அது முதல் போர்ஹென்ஸ் என் உயிர். இப்போது என் குடும்பத்தினர் அனைவரும் (9 பேர்கள்) போர்ஹென்ஸ் உபயோகிக்கிறோம். இந்தப் பழக்கமும் நம்பிக்கையும் தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து வரும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். (கையொப்பம்) பி.ஜே. லாஸர்
சிராலா, ஆந்திரப் பிரதேசம்

(மேற்கண்ட சான்றிதழ்களின் புகைப்பட நகல்களை ஜெப்ரி மேனர்ஸ் & கம்பெனி லிமிடெடின் எந்த அலுவலகத்திலும் காணலாம்).

முறையான பற்பராமரிப்புக்கு, போர்ஹென்ஸ் கொண்டு இரவும் காலையும் உங்கள் பற்களைத் துலக்குவதோடு, ஈறுகளையும் தேய்த்துக் கொடுங்கள்.

இலவசம்! பற்களையும் ஈறுகளையும் பராமரிப்பது பற்றிய வண்ணப் புத்தகம். தபால் செலவுக்காக, 25 பைசா தபால் தலையுடன், போர்ஹென்ஸ் டென்டல் அட்வைஸரி ப்யூரோ, டிபார்ட்மெண்ட் நெ. T133 த. பை எண் 11463, பம்பாய் 400 020 என்ற முகவரிக்கு எழுதுக. எந்த மொழியில் வேண்டுமெனத் தெரிவிக்கவும்.

PIN CODE FOR FAST MAIL



போர்ஹென்ஸ்

பல் வைத்தியரால் உருவாக்கப்பட்ட பற்பசை

160F-152 TM

சேரமான் காதலி

கண்ணதாசன்

அத்தியாயம் 22

முடிவல்ல ; தொடக்கம்

சேர மண்டலத்தின் வரலாற்றில் ஒரு புதிய நாடு உதயமாகிறது. அப்போது, மொத்தமான சேரமண்டலத்தின் எல்லை கீழ்க்கண்டவாறு இருந்தது:

வடக்குத் திசை பழனி, வான்கீழ்
தென்காசி
குடக்குத் திசை கோழிக்கோடாம்
— கடற்கரையின்
ஓரமே தெற்காகும்; உள் எண்பதுகாதம்
சேரநாட் டெல்லையெனச் செப்பு

— இந்த எண்பது காதச் சேர மண்டலத்தில், வேணாட்டுப் பகுதி பாண்டியர் வசமிருந்து, சேர மன்னர்கள் கைக்கொண்ட பகுதி என்றோம்.

அந்தப் பகுதியையே 'வேணாடு' என்று தனி நாடாகப் பிரிப்பது என்றும் அதற்கு மார்த்தாண்டவர்மனை முடி சூட்டுவது என்றும், ரவிவர்மன், நாராயணன் நம்பூதிரி, மார்த்தாண்ட வர்மன், ஸ்ரீவல்லபர் ஆகியோர் முடிவு செய்தனர்.

விக்ரம சோழனின் யோசனைப் படியே இந்த முடிவு மேற்கொள்ளப் பட்டது.

இதற்கு வேணாடு என்று ஏன் பெயர் வந்தது ?

'ஆய்' என்னும் மலையவேள் ஆண்டது இந்நாடு என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள்.

சங்க காலத்தில் வாழ்ந்த மன்னன், ஆய்.

அவன் காலத்தில்தான், வேணாடு பழனி வரையில் விரிந்திருந்தது.

அதன்பிறகு சேர நாட்டில் இது சேர்க்கப்பட்டதால், பழனி சேரநாட்டின் வடக்கு எல்லையாயிற்று.

வேள் + நாடு = வேணாடு.

ஆய் எனும் மலையவேளின் காலத்திலேயே அழகிய சிறிய கிராமமாக இருந்தது திருவிதாங்கோடு.

மலையவேளின் தலைநகரமே அதுதான்.

கோடுகளும் குன்றுகளும் அடர்ந்த அந்த இடத்துக்குத் திருவிதாங்கோடு என்று வந்த பெயர் ஒரு மரூஉ ஆகும்.

ஆயின் கோடு
திரு ஆயின் கோடு
திரு ஆய்தன் கோடு
திரு வாதங்கோடு
திரு விதாங்கோடு

காலத்தால் இப்படி மருவி வந்த பெயர்தான் திருவிதாங்கோடு என்பது.

பழனி அருகில் ஆயின் குடியினர் வாழ்ந்த பகுதிகள் இன்னும் ஆயக்குடி என்று அழைக்கப்படுகின்றது.

அதில், பழைய ஆயக்குடி என்பது 'ஆய் அண்டிரன்' காலத்தில், அவனது சந்ததியைச் சேர்ந்த ஒருவன் குறுநில மன்னனாக ஆண்ட பகுதியாகும்.

இப்போது மலையவேளின் நாடான வேணாடு, பல நூற்றாண்டுகளுக்குப்பிறகு வஞ்சி என்னும் திருவஞ்சிக் களத்திலிருந்து தனியாகப் பிரிக்கப்பட்டது.

திருவிதாங்கோட்டைப் புதிய தலைநகர் ஆக்குவதற்கு ரவிவர்மனும் நாராயண நம்பூதிரியும் உடனடியாக முயற்சிகளை மேற்கொண்டனர்.

பத்மநாபபுரத்தில், புதிய கோட்டை ஒன்றை எழுப்பும் வேலை தொடங்கிற்று.

திருவிதாங்கோட்டில் அழகிய அரண்மனை ஒன்றைக் கட்டும் பணியும் ஆரம்பமாயிற்று.

இந்தப் பணிகள் முடியும் வரையில் மார்த்தாண்டவர்மனும் மெல்லிளங்கோதையும் வஞ்சிநகர் அரண்மனையி

லேயே தங்கியிருப்பது என்று முடிவா யிற்று.

திருவஞ்சைக் களத்தில் வஞ்சியில் எரிந்து போன நம்பூதிரி சபையும் புதுப் பிக்கப்பட்டது.

இந்தப் பணிகளுக்கான காலம் ஆறு திங்கள் என்று வரையறுக்கப்பட்டு வேலை தொடங்கிற்று.

இந்த ஆறு திங்களும், மெல்லிளங் கோதைக்கும், பத்மாவதிக்கும், சுவை யான காலங்களாகும்.

இருவரும் அம்மானை ஆடுதல், தாயம் விளையாடுதல் என்று உற்சாகமாகப் பொழுதைக் கழித்தனர்.

மார்த்தாண்டவர்மனே மெல்லிளங் கோதையைப் பார்த்து, ''நீ மணந்து கொண்டது என்னையா, பத்மாவதி அக்காவையா ?'' என்று கேலி பேசும் அளவுக்கு அவர்கள் இணை பிரியாமல் இருந்தனர்.

இரவு நேரங்களில் யாருக்கும் தெரி யாமல், யூஜியானுவின் இல்லத்துக்குச் செல்ல விரும்பும் ரவிவர்மனுக்கு இது ஓர் இடையூறாகவே இருந்தது.

பத்மாவதி விழித்துக் கொண்டிருக் கும் போது, யூஜியானுவைத் தேடிச் செல்வது அவனுக்குப் புதிதல்ல.

ஆனால், மெல்லிளங்கோதையோ, மார்த்தாண்ட வர்மனோ அதை ஒரு கேள்வியாகக் கேட்டுவிடக் கூடாது என்று அவன் பயந்தான்.

சோழ நாட்டிலிருந்து திரும்பி ஏழு நாட்கள் வரையிலே, அவன் யூஜியானு வைச் சந்திக்கவில்லை.

வந்தும் வராத தலைவனை எண்ணி, வெந்து விழுந்தாள் யூஜியானு.

மனம் அரசியலில் போராடிய காலங் களில் அவளை மறந்திருக்க ரவிவர்மனு லும் முடிந்தது.

ஆனால், நாடும் தானும் அமைதியுற்ற நேரத்தில், அவன் மனத்தில் மகுடாபி ஷேகத்தைப் பற்றிய சிந்தனையைவிட யூஜியானுவைப் பற்றிய சிந்தனையே மேலோங்கி நின்றது.

பொன்னிற மேனிப் பூவையின் நினை வால், தன்னிலையிழந்த அண்ணலைப் பார்த்துத் தானும் கலங்குவாள் பத்மா வதி.

யாரிடம் சொல்வாள் நாயகன் நிலையை ?

''அண்ணு! அண்ணு!'' என்று மெல்லிளங்கோதைதான் ரவிவர்மனை உபசரிப்பாள்.

''தம்பி! தம்பி!'' என்று பத்மாவதி தான் மார்த்தாண்டவர்மனை உபசரிப் பாள்.

அன்புமிக்க குடும்பத்தின் பாசப் பிணைப்பில் ரவிவர்மன் கட்டுண்டானுயி னும், முன்பு போல் அடிக்கடி யூஜியானு வைச் சந்திக்க முடியாமல் இருந்தது, அவனுக்குப் பாரமாகவே இருந்தது.

ஒரு நாள் நள்ளிரவு.

மங்கையர் அனைவரும் உறங்கி விட்டார்கள்.

மன்னவன் மூன்றும் சேரமான்—ஆம்! ரவிவர்மன் — பழைய பாணியிலேயே யூஜியானுவின் இல்லம் நோக்கிப் புறப் பட்டான்.

ஆனால் முன்பிருந்த தைரியம் இப் போது அவனுக்கு இல்லை.

ஏற்றுக் கொண்டுவிட்ட பொறுப்பு எல்லோரும் மதிக்கும்படி நிறைவேற் றப்பட வேண்டும் என்ற நிலையில், அவன் அச்சத்துக்கு ஆளாகியிருந்தான்.

அந்தப்புரத்தில் ஆசைநாயகிகளை வைத்துக் கொள்வது சேர மன்னர் களுக்கு அனுமதிக்கப்பட்ட சம்பிர தாயமே.

ஆனால் குலசேகர ஆழ்வாரின் அரண்மனை ராமச்சந்திரமூர்த்தியின் திருமனையாக விளங்கியதல்லவா ?

அரண்மனையை அபகரித்தபோது தோன்ருத அந்த உணர்வு அது அங்கீ கரிக்கப்பட்டுவிட்டதால், ரவிவர்மனுக் குத் தோன்றலாயிற்று.

நள்ளிரவில் முக்காடிட்டு, குதிரை யில் ஏறி அவன் செல்லும்போது குதிரை மீண்டும் பகவதி அம்மன் கோவிலுக் குப் போவது போன்றே அவனுக்குத் தோன்றிற்று.

உலகம் வெறுக்கும்போது, உள்ளம் துணிந்து விடுகிறது; உலகம் மதிக்கும் போது உள்ளம் அணை போடுகிறது.

யூத ரத்தத்தில் சேர ரத்தம் கலந்து ஒரு புதிய வம்சம் உருவாகியிருப்பதை அறியாத நிலையிலேயே ரவிவர்மன் யூஜியானுவின் இல்லம் வந்தான்.

முன்பு அக்கம் பக்கம் பார்த்தாலும் வெட்கப்படாத ரவிவர்மன், இப்போது அங்குமிங்கும் பார்த்தபடியே கதவைத் தட்டினுன்.

காற்றடிக்கும் ஓசையைக்கூட அவ னது காலடி ஓசை என்று கருதும் அள வுக்கு அவனை எதிர்பார்த்துக் கொண் டிருந்த யூஜியானு ஓடி வந்து கதவைத் திறந்தாள். அவள் காத்திருந்தது வீண் போகவில்லை.

அங்கங்கள் வாடி அழகிழந்த நிலைக் குத் தள்ளப்பட்டுக் கொண்டிருந்த யூஜியானு, அவனைக் கண்ட மாத் திரத்திலேயே தங்க மயமாக ஜொலிக் கத் தொடங்கினுள்.

அனல்படும் மூச்சினுல் தாலாட்டப் பட்ட அவளது இதழ்களில், வியர்வை முத்துக்கள் அரும்பத் தொடங்கின.



மௌனம் பரிபாஷையாயிற்று.
மயக்கம் அபிநயமாயிற்று.
மார்பு பஞ்சணையாயிற்று.
தன்னை மறந்து அவன் மார்பில் சாய்ந்த பூஜியாளு விம்மி விம்மி அழுதாள்.
அவன், அவளது கன்னங்களைத் தடவிக் கொடுத்தான்.
எப்போதும் வெட்கம் மிதக்கும் அந்தக் கன்னங்களில் இப்போது வெப்பம் மிதந்தது.
கண்ணீர்க் குளத்தில் அந்தத் தெப்பம் மிதந்தது.
ஒன்றும் பேச முடியாத நிலையில் அந்தச் சிற்பம் இருந்தது.
அவளை அப்படியே வாரி எடுத்து அமளியில் சேர்த்தான் ரவிவர்மன்.
மயில்தோகை விசிறியால் விசிறிக் கொடுத்தான்.
அவள் அவன் கைகளைப் பற்றிக் கொண்டாள்.
'உங்கள் கால்களுக்குச் சேவை செய்யவே நான் காத்திருக்கிறேன். உங்கள் கைகள் எனக்குச் சேவை செய்ய வேண்டாம்....' என்பது போல் இருந்தது அது.
அவன் குனிந்து இதழுடன் இதழ் சேர்த்தான்.
உலர்ந்து போன அவள் இதழ்கள் தளிர்விடத் தொடங்கின.
அவள் கனவுலகில் மிதக்கத் தொடங்கினாள். இது வரையில் எத்தனை இரவுகளை ஒவ்வொரு நாழிகையாக அவள் வழி அனுப்பி வைத்தாள்.
''துட்டமதன் கணை துளைத்த துளை வழியே தென்றல் வந்து கவைத்துத் தள்ளி, விட்ட வெறும் கூட்டை இனிச் சுட்டதனால் என்ன பயன் வெண்ணிலாவே'' என்று எத்தனை முறை அவள் பாடியிருப்பாள்.
பூத தேவதைகள் அவள் நினைவில் தோன்றி ஆறுதல் சொல்வது போல் எப்படி எல்லாம் அவள் அமைதி அடைந்திருப்பாள்.
''ஆயிரம் குதிரைகளின் மீது உன் நாயகன் ஆரோகணித்து வருவான்'' என்று சிறு வயதில் யாரோ கணித்துச் சொன்னதை அவள் எத்தனை முறை நினைவுகூர்ந்திருப்பாள்!
கருவுற்ற காலத்தில் தூக்க மயக்கம் வரும் பெண்களுக்கு.
அந்தத் தூக்கத்தைக்கூட அவள் அறிய மாட்டாளே!
பிரிவின் துயரம் பெண்ணைச் சுடுவதை அறிவால் உணர்ந்தான், ரவிவர்மன்.
ஒன்றிரண்டு பேசுவதானால், உடனே பேசிவிடலாம்.
ஆயிரம் பேச நினைத்தால் அரை வார்த்தைகூடத் தேராது.
நயனங்கள் — அவற்றில் நாடகங்கள்.
இடையிடையே அந்த மேகங்களிலிருந்து சிறு நீர்த் துளிகள்.
அவை காய்ந்த பயிருக்கு உயிரூட்ட வந்த வெள்ளங்கள்.
''பூஜி!''
''ராஜா!''
ஒரே அழைப்பு — மாறி மாறி அதே வார்த்தைகள்.
கேள்வி கேட்க நேரமில்லை.
விளக்கம் சொல்லத் தேவை இல்லை.
அவளை மார்புறத் தழுவி உச்சி மோந்து அலங்கோலமாகக் கிடந்த கூந்தலில் தன் விரல்களால் வீணை மீட்டி ஆனந்தபைரவி பாடினான் ரவிவர்மன். செல்லும்போது சொல்லிவிட்டா சென்றான்; திரும்பி வரும்போது கேட்டுக் கொண்டா வந்தான்!
எங்கெங்கோ பிறந்த இருவரைக் காதல் தேவதை சங்கமத்தில் முடிசூட்டிப் பார்த்தாள்.
வர்மாக்கள் பரம்பரையில் இப்போது ஒரு புதிய வாரிசு உருவாகிக் கொண்டிருப்பதை அவள் வார்த்தைகள் சொல்லவில்லை.
அப்படி ஒன்று உருவாகிறதா என்று கேட்கும் எண்ணமும் அவனுக்கு இல்லை.
ஆனால் தூங்காத அந்த இரவின் நெடிய போதையில், அவள் தன்னை மறந்து உளறிய வார்த்தைகளில், அந்தச் செய்தியும் அடங்கியிருந்தது.
ரவிவர்மனுக்கு இல்லை — மன்னவர் மூன்றும் சேரமானுக்கு அதிலே அளப்பரிய ஆனந்தம்.
பத்மாவதிக்குப் பிள்ளைப் பேறு இல்லாததால், தன் மகுடத்துக்கு ஒரு வாரிசு இல்லாவிட்டாலும் தன் மார்புக்கு ஒரு வாரிசு வரப் போகிறது என்று எண்ணி மகிழ்ச்சி அடைந்தான்.
அந்தச் சலவைக் கல் சிலையிலிருந்து ஒரு தங்க விக்கிரகம் வரப் போகிறது.
நினைவு வளர்ந்தபோது நெருக்கம் மேலும் அதிகமாயிற்று.
அன்பு வெறியாயிற்று!
குழந்தையின் கன்னம் எவ்வளவு தாங்கும் என்பதைக்கூட மறந்து தந்தை அதைக் காயப்படுத்துவது போல் அவனும் நடந்து கொண்டுவிட்டான்.
பொழுது புலர்வதற்கு அறிகுறியாக, எல்லா நாட்டிலுமே சேவல்தான் கூவுகிறது.
சேரநாடென்ன அதற்கு விதிவிலக்கா?
தான் வளர்த்த சேவலே தனக்குப் பகை என்று கருதினாள் பூஜியாளு.



வேறு எந்த ஆரோக்கிய பானமும்
பரிபூரணமானது
அல்ல.
துடிப்புடனும்
சக்தியுடனும் விளங்க
உங்களுக்குத் தேவையான
இந்த23அத்தியாவசிய ஊட்டச்
சத்துக்கள் நிறைந்த
பரிபூரண பானம்
காம்ப்ளான்®
ஒன்றுதான்.
புரதம்
கார்போஹைடிரேட்
கால்ஷியம்
லிப்பிடுகள்
பாஸ்பரஸ்
சோடியம்
குளோரைடு
பொட்டாஷியம்
இரும்பு
சத்து
அயோடின்
வைட்டமின் 'ஏ'
வைட்டமின் பி1
ரிபோஃப்ளேவின்
நிகோடினமைடு
கோலின்
பென்டோதெனேட்
பைரிடாக்ஸின் (பி6)
வைட்டமின் பி12
ஃபாலிக் அமிலம்
வைட்டமின் டி
வைட்டமின் கே
அதோடு, இதர சிறுசிறு
பொருட்கள், உடல்
சரிவர ஆரோக்கியமாக
இயங்க உதவும்.
பாலையும் விட இன்னும் அதிகமான
வைட்டமின்கள், புரதம்,
கால்ஷியம், இரும்புச் சத்து
மற்றும் இதர அத்தியாவசிய ஊட்டச்
சத்துக்களை காம்ப்ளான் அளிக்கிறது.
*பரிபூரண போஷாக்கிற்கு
டாக்டர்களால் பெரிதும்
சிபாரிசு செய்யப்படுவது
சாப்பிட நேரமில்லையா?
சாதாரண ஆரோக்கிய
நிலையில்
சரியாக
சாப்பிடுவதில்லையா?
நோயால் சக்தி
இழந்துவிட்டீர்களா?
Glaxo
Complan
காம்ப்ளான்
CMGC.17-203 TM

MCA/J/Tam/1

மல்லிகைப்பூ மணம் கமழ...



சுகபோகமிக்க
குளியல் சோப்
விலை ரூ. 1.47 பை.
மட்டுமே
(தலவரிகள் தனி)

கவர்ன்மெண்ட் சோப் ஃபாக்டரி, பெங்களூர் அளிக்கும் தரமிக்க தயாரிப்பு.

விற்பனை செய்பவர்கள்: மைசூர் ஸேல்ஸ் இன்டர்நேஷனல் லிட்., பெங்களூர்.

உயிர் பிரியும் நேரத்தைவிட உறவு பிரியும் நேரம் மிக மோசமானது.

பிரிவதைத் தவிர வேறு வழியில்லை என்னும் போது இரண்டு சொட்டுக் கண்ணீர் வழி அனுப்பி வைக்கிறது.

கிழக்கு வெளுக்கும் நேரமே அவள் உள்ளம் சிவக்கும் நேரமாயிற்று.

அவன் பிரிந்தான்.

அரண்மனைக்குள் அவன் நுழைந்ததும் அந்த அதிகாலைப் போதிலும், ''அண்ணா!'' என்ற குரல் ஒலித்தது.

மெல்லிளங்கோதை அவனை வரவேற்றாள்.

அந்தக் குரல் கேட்டதும் அவனுக்கு அச்சமாக இருந்தது.

அஞ்சாதவன் அஞ்சுவது அன்புக்கு மட்டுமே.

'' நாங்கள் இங்கு இருப்பது உங்களுக்கு இடையூறாக இருக்கிறதா அண்ணா ?'' என்றாள் மெல்லிளங்கோதை.

''இல்லை, சத்தியமாக இல்லை ; பகவதி அம்மன் மீது ஆணையாக இல்லை'' என்றான் ரவிவர்மன்.

''நாங்கள் வேணாட்டுக்குச் செல்லும் வரை நீங்கள் இருந்த மாளிகையில் தங்கலாம் என்று கருதுகிறோம்'' என்றாள் அவள்.

'' ஏன்; எதற்காக? நீங்கள் எங்களை விட்டுப் போகக் கூடாது '' என்றான் ரவிவர்மன்.

''யாராவது ஒருவர் அழுதே தீர வேண்டும் என்பது பகவதி அம்மன் நமக்கிட்ட ஆணை போல் தெரிகிறது. பத்மாவதியின் கண்ணீரை என்னால் தாள முடியவில்லை'' என்று தலை குனிந்து கொண்டே சொன்னாள் மெல்லிளங்கோதை.

ரவிவர்மன் தலை தானாகக் குனிந்தது. அவன் குற்றவாளிபோல் நின்றான்.

''இனி அவள் கண்ணீர் சிந்தமாட்டாள்'' என்று மெதுவாகச் சொன்னான்.

அவள் உள்ளே செல்லத் திரும்பினாள்; அவள் கண்களைத் துடைத்துக் கொள்வதை அவன் கவனித்தான்.

சிறிது நேரத்தில், அவன் குளிப்பதற்காகச் சென்றபோது, ''பத்மாவதி!'' என்று குரல் கொடுத்தான்.

'' நீ குளிக்கவில்லையா ?'' என்று கேட்டான்.

''நான் குளிக்க வேண்டும், வா '' என்றான்.

இவையெல்லாம் மெல்லிளங்கோதைக்குக் கேட்க வேண்டும் என்பதற்காகவே கூறினான்.

இருவரும் குளிக்கச் சென்றபோது கள்ளமின்றி மாடத்திலிருந்து இறங்கி வந்த மார்த்தாண்டவர்மன் கோதையைப் பார்த்து, ''ஆண்டுக்கு ஒரு முறையாவது நீயும் குளிக்க வேண்டும்'' என்றான்.

அரண்மனையும் அந்தப்புரமும் மீண்டும் கலகலப்பாயின.

அந்தப்புரத்தில் வேடிக்கைப் பேச்சுக்கள் தொடங்கின. அரண்மனையில் அரசியல் ஆரம்பமாயிற்று.

மகோதைப் பட்டினம் நாராயண ஆசிரமத்தில் தங்கியிருந்த திருவேங்கடத்தான் ஸ்ரீவல்லபவர் விடை பெற்றுக் கொள்ள வந்தார்.

'' அகஸ்தீசுவரம் குடிசைக்கு நீங்கள் மறுபடியும் போக வேண்டாம். எங்களுடனேயே தங்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டான், ரவிவர்மன்.

நாராயண நம்பூதிரியும் அவரை அப்படியே வற்புறுத்தினர்.

''நாட்டில் இருந்தால் எனக்கு நல்ல அமைதி கிடைக்காது; நான் காட்டில் இருப்பதே கண்ணனின் கட்டளை. வஞ்சியிலும் திருவிதாங்கோட்டிலும் நடைபெறப் போகும் முடிசூட்டுவிழாக்களுக்கு நான் சீடர்களோடு வந்து சேருவேன்'' என்று கூறி விடைபெற்றுக் கொண்டார் அவர்.

திருவிதாங்கோட்டில் அரண்மனை வேலைகளைப் பார்வையிடவும், பத்மநாபபுரத்தில் கோட்டை அமைப்பைப் பார்வையிடவும், குதிரைகள் பறந்தன.

அங்கே இரவு பகலாக வேலைகள் நடந்து கொண்டிருந்தன.

அமைதியாக இரண்டு நாடுகள் தொடங்கப் போகின்றன; அற்புதமான முடிசூட்டு விழாக்கள் நடைபெறப் போகின்றன.

சேர நாட்டின் வரலாற்றில் அவற்றைத் தொடர்ந்து ஒரு விசித்திரமான அத்தியாயத்தை எழுத இறைவன் தயாராகிக் கொண்டிருந்தான்.

ஆம் ! சேர நாட்டின் தலை எழுத்தையே மாற்றப் போகும் ஒரு பாய்மரக் கப்பல் அரேபியாவிலிருந்து புறப்பட்டது !

(தொடரும்)




தமிழக ஆளுனர் திரு குரானாவுக்கு வாலிபால் ஆட்டம் வெகு நன்றாகத் தெரியும். அவர் ஜெயிலில் இருக்கும் காலத்தில் ஒரு நாளைக்கு நாலு மணி நேரம் வாலிபால் ஆடுவாராம். திரு குரானா தம் நாற்பத்தாறாவது வயது வரையில் வாலிபால் ஆடியுள்ளார். சர்வ கலாசாலைகளுக்கான வாலிபால் கோஷ்டியில் கலந்து கொண்டிருக்கிறார்.

- பி.எஸ்.எம்.

பாருங்கள் எப்படி ப்யூரிடாஸ் ஃபில்ட்டர்கள் சாதாரணக் குழாய் நீரை வடிகட்டி அசுத்தங்களை நீக்கி நூற்றுக்கு நூறு தீங்கற்ற நல்ல குடி நீராக ஆக்கிவிடுகிறது

நீர்வழிப் பரவும் நோய்களான காலரா, டைஃபாயிடு, சீத பேதி, இரைப்பை-குடல் அழற்சி முதலியவற்றைத் தடுத்துக் காக்க இதைவிட மேலான உத்தரவாதம் எதுவுமில்லை.



1. மேற்புற அறைக்குள் ஊற்றப்படுகிறது குழாய் நீர்.

2. ஆய்வுக் கூடத்தில் பரிசோதனை பெற்ற கேண்டல் ஃபில்ட்டர் எல்லாக் கிருமிகளையும் நீரிலிருந்து வடிகட்டி ஒதுக்கிவிடுகிறது.

3. இணைப்புத் தடமற்ற, இரசாயனப் பொருள்களை எதிர்க்கும் தன்மையுள்ள, கீறல் விழ முடியாத எபாக்ஸி-பூசப் பெற்ற அலுமினியம் அறை.

4. கீழ்ப்புற அறையினுள் நூற்றுக்கு நூறு தூய நீர் குடிக்கத் தயாராகத் திரண்டிடும்.

உங்கள் ஆதரவுக்குரியவர்களுக்கு ஆதரவளியுங்கள். இன்றே பெறுவீர் ஒரு ப்யூரிடாஸ்.



ப்யூரிடாஸ் இலேசானது, உடையவே உடையாது, தூக்கிச் செல்ல வாகானது, துப்புரவாக்க இலகுவானது.



அசல் ப்யூரிடாஸ் ஃபில்ட்டர்களையே வாங்குகிறீர்கள் என்பதை உறுதி செய்ய மேற்புற அறைக்கு மேலுள்ள ப்யூரிடாஸ் முத்திரையைப் பார்த்து வாங்குங்கள். ப்யூரிடாஸ் பெயரும் பதிவு எண் 196501ம் அடிப்புற உலோகத்தின் மீது இருப்பதையும் கவனியுங்கள்.

பல்சாரா
நலமான வாழ்க்கைக்கு நவீனமான வசதிகள்

BALBARA பல்சாரா & கம்பெனி (பிரை.) லிட்.
43, நகின்தாஸ் மாஸ்டர் ரோடு, பம்பாய் 400 001.

CHAITRA-BLS19 TAM Rev.



அட்டைப்படம்: ஆர்.நடராஜன்

நன்றி செலுத்துவோம்

ஆகஸ்டு 15.

சுதந்திர தினம்.

நமக்கு நன்மை புரிவதொன்றுக்காகவே தம் வாழ்வு முழுவதையும் அர்ப்பணித்த ஒரு மகாபுருஷனுக்கு நமது நன்றி அஞ்சலியைத் தெரிவிப்பதைவிட சுதந்திர தினத்தில் உத்தம மான பணி வேறில்லை.

ராஜாஜியைப் போல் நமக்கு நலன் புரிந் தவர் எவருண்டு? அந்த ஞான வைரத்தில் தீட் டிய பட்டைகள் எத்தனை எத்தனை துறைகளில் சுடர் வீசி, நம் வாழ்விலே ஒளி கூட்டியிருக் கின்றன? மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு முதலியவற்றால் நம் சமூக வாழ்வைச் சுத்தம் செய்தார். நயம் சொட்டும் கதைகள் எழுதி நம் வாழ்வை எழில் பெறச் செய்தார். ராமா யணத்தையும் மகாபாரதத்தையும் வள்ளு வத்தையும் தந்து நம் வாழ்வில் தர்மம் தளிர்க்கச் செய்தார். உபநிஷதங்களையும் கீதையையும் எழுதி வைத்து நம் ஆன்மிக வாழ்வுக்கு ஆக்கமூட்டினார்; வாரென்னைக் காட்டி நம்மைக் கர்மயோகத்தில் ஊக்கினார்; முதலாழ்வார் மூவரைத் திரட்டித் தந்து நம்மைப் பக்தியில் மூழ்கச் செய்தார்.

அரசியல் வாழ்வை எடுத்துக் கொண் டாலோ அவர் புரிந்த பணிகள், செய்த தியா கங்கள் ஒரு மகா காவியமாகவே விரியும்.

நம் தேசத்தோடு, நம் பரம்பரையோடு மட்டும் நிற்கவில்லை அவரது அரும் பணி. உலகம் முழுவதையும் நச்சு மயமாக்கி, எதிர் காலச் சந்ததிகளுக்கும் தீமை பயக்கும் அணு ஆயுத சோதனையை எதிர்த்து பீஷ்ம பிதாமகராகப் போராடினார்.

எல்லாவற்றுக்கும் மேலாகச் சொந்த வாழ்க்கையில் அணுவளவும் அப்பழுக்குக் காட்ட முடியாத தர்மத் திரு உருவமாக வாழ்ந்தார்.

அண்ணல் ராஜாஜிக்குத் தேசத் தலைநக ரான தில்லியில், மையமானதொரு இடத்தில் சிலை நிறுவ வேண்டும் என்று நம் பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தியவர்கள் சில காலத் துக்கு முன் அபிப்பிராயப்பட்டார்.

அதையொட்டி 1974 ஆகஸ்டில் பாராளு மன்ற உறுப்பினர் ஸ்ரீ பி. கே. தேவ், அவர் களைத் தலைவராகவும், மற்றும் பல பெரு மக்களை அங்கத்தினர்களாகவும் கொண்ட ''ராஜாஜி நினைவுக்குழு'' அமைக்கப்பெற்றது.

தில்லியில் மக்களின் கவனத்தை வெகு வாக ஈர்க்கக் கூடிய ஒரு சதுக்கத்தை ராஜாஜி சிலை வைப்பதற்கென அரசாங்கம் ஒதுக்கீடு செய்ய முன்வந்திருக்கிறது.

சிலை 'எழுப்புவதற்காக ஏற்பாடுகள் நடை பெற்று வருகின்றன. உயர்ந்ததோர் பீடத் தின்மீது சுமார் பத்தடி உயரமுள்ள பெரிய வடிவில் வெண்கலச் சிலை நிறுவ உத்தேசித் திருக்கிறது. அடிப் பீடத்தின் நான்கு பக்கங் களிலும் ராஜாஜியின் வாழ் வில் முக்கியமான நான்கு கட்டங் களைப் புடைப்புச் சிற்பமாகச் செதுக்கத் திட்ட மிட்டிருக்கிறது.

சிற்ப விற்பன்னர் கலாசாகரம் ஸ்ரீ ராஜ கோபால், காணும் கண் கலங்குமளவுக்கு அத்தனை தத்ரூபமாக ராஜாஜியின் சிலையை வடித்து வருகிறார்.

ராஜாஜி சிலைக்காகப் பொருட் காணிக்கை அளிக்க நமது குழந்தைகளுக்குக் கோகுலம் பத்திரிகை ஒரு வாய்ப்பை ஏற் படுத்தி யிருந்தது. ஆயிரத்துக்கும் மேற்பட்ட குழந்தைகள் இந்த அரும் பணிக்கு ஆர்வ முடன் காணிக்கை செலுத்தியது நம் அனை வரையும் பெருமிதம் கொள்ளச் செய்வதா கும். கோகுலம் குழந்தைகள் பெற்ற இந்தப் பேற்றினைக் கல்கி வாசகர்களும் பெற வாய்ப் பளிக்க வேண்டும் என்று சென்ற இதழில் திரு கல்யாணராமன் எழுதி யிருந்தார். இன்னும் பலர் ''சென்னையில் இருப்பவர்கள் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் இசை விருந்தில் கலந்துகொள்வதன் மூலம் சிலை யெடுக்கும் சிறந்த பணியில் பங்கு கொள் கிறார்கள்; மற்ற ஊர்களில் உள்ள மனமுள்ள ராஜாஜி பக்தர்களும் பங்கு கொள்ள ஒரு வகை செய்ய வேண்டும்'' என்று கோரி வரு கிறார்கள். எனவே நாடெங்கும் உள்ள நமது வாசகர்களும் இப்புனிதப் பணியில் பங்கு கொள்ள இதோ ஒரு திட்டம்:

குறைந்தபட்சம் ஐந்து ரூபாய் அனுப் புங்கள். அதற்கு அதிகமாக எவ்வளவு வேணு மானாலும் அள்ளிக் கொடுங்கள். அக்டோபர் மாதம் 5ம் தேதிக்குள் உங்களது அன்புக் காணிக்கையை அனுப்பிப் பாரதப் பெருமக னுக்கு அஞ்சலி செலுத்துங்கள். ராஜாஜி சிலைக் குக் காணிக்கை அனுப்புபவர்களின் பெயர்கள் கல்கியில் வெளியாகும். தொகையை டிராப்டு, போஸ்டல் ஆர்டர் அல்லது மணியார்டர் மூலம் மட்டுமே அனுப்பவும். மறவாமல் **'ராஜாஜி சிலைக்கு நிதி'** எனக் குறிப்பிடவும்.

தொகை அனுப்ப வேண்டிய முகவரி: ஸ்ரீ சதாசிவம், அமைப்பாளர், ராஜாஜி நினைவுக் குழு, கல்கிப் பூங்கா, சேத்துப்பட்டு, சென்னை-600 031.


பாடுவோம் பாப் மியூசிக்!
6
கதை: தமயந்தி/சாருகேசி
சித்திரம்: ராஜு
பாலாஜியிடம் என்னவோ சித்தார் என்று சொன்னீர்களே? ஏதாவது நாய்க்குட்டி வளர்க்கிறீர்களா என்ன, புதுசா சித்தார்னு பேர் வைத்து?
ஹ ஹா! அதுவா? பாலாஜிக்கு ஹிந்துஸ்தானி மியூசிக்னு ஒரே பைத்தியம். பைத்தியம்னா அப்படி ஒரு பைத்தியம். எனக்கும்தான் பைத்தியம்.. ஹரி ஹரி... ஹிந்துஸ்தானி மியூசிக்லே தான்...
எத்தனை பெரிய தொழிலதிபரோட எத்தனை பெரிய பிள்ளை! ஹிந்துஸ்தானி மியூசிக்லே ஆர்வமா? உங்களாலேதான் சார் கலைகளுக்கே ஒரு கௌரவம் வருது. ஹரி ஹரி...
சார், நீங்க எல்லாத்துக்கும் இப்படி ஹரி ஹரிங்கிறது எனக்குச் சரியாப் படவில்லை. ஒரே ஒரு ஹரி மட்டும் சொல்லுங்கள். ப்ளீஸ்.
என்னடா பாலாஜி இது, விநோதமா இருக்கே?
ஹரி என்றால் ஹிந்துஸ்தானி மியூசிக். அவ்வளவுதானப்பா!
ஹ ஹ் ஹ ஹ் ஹா! நல்ல ஐடியா சார். பையன் ஜீனியஸ்தான். சந்தேகமேயில்லை.
என் தொழிற்சாலைகளை அவன்தான் நிர்வகிக்கிறான். மகா கெட்டிக்காரன். ஒரு நாள் அவனுக்கே விட்டுடுகிறேன்...
ஆஹா, நம் வித்யாவுக்கு பாலாஜியைக் கல்யாணம் பண்ணி வைத்துவிட்டால் பெரிய பிரச்னை தீர்ந்தது! பணத்துக்குப் பணம், அந்தஸ்துக்கு அந்தஸ்து!...


மிஸ்டர் லிங்கம்! உங்கள் பிள்ளையிடம் சொல்லி விடுங்கள். நம்ம சபா ஆண்டு விழாவிலே முக்கிய நிகழ்ச்சி ஹிந்துஸ்தானி மியூசிக்தான்...
ஐ ஸீ? ... பாலாஜி...
என்னப்பா, ஸார் பாட்டுப் பாடப் போகிறாரா? எதற்குக் கூப்பிட்டே?
ஹிந்துஸ்தானி மியூசிக்காம்பா சாரோட சபா ஆண்டு விழாவிலே! எப்படி?
ஆமாம் மிஸ்டர் பாலாஜி. உங்களை மாதிரி ரசிகர்கள் இருக்கிற போது பர்வீன் பாபியோட ஹிந்துஸ்தானி மியூசிக் போட்டால் எத்தனை பிரமாதமா யிருக்கும் தெரியுமா?
ஒன் மினிட். பர்வீன் பாபி ஒரு ஹிந்தி ஆக்ட்ரஸ். அவள் கூடப் பாடுகிறாளா என்ன?
ஓ, ஐ'ம் சாரி... பர்வீன் பேகம்.. ஓ, ஐ'ம் சாரி... பர்வீன் சுல்தானா.
அப்படிச் சொல்லுங்கள். வெரிகுட்... வெரிகுட்...
பாலாஜி இந்த விஷயத்திலெல்லாம் ரொம்ப அப்டுடேட். தெரியுமோ?
அதுதான் சொல்லிவிட்டேனே! ஆண்டு விழாவிலே ஹிந்துஸ்தானி கச்சேரி தான்.

தொடரும்

இரும்பு பீரோவுக்குள் புத்தகப் புழுக்கள் புகுமா ?

புகுந்து விட்டன. அதோடு மட்டுமில்லை. புகுந்து. குறைந்தபட்சம் ஆயிரம் ரூபாய் மதிக்கத்தக்க தபால் தலைகளைத் தின்று நாச மாக்கி விட்டன.

'' ஏதாவது சாமானைப் பீரோவுக்குள் வைக்கும்போது அந்தப் புழுக்களும் சேர்ந்து உள்ளே நுழைந்திருக்கும் முரளி! நாளடை வில் அவை பெருகி அந்த ஸ்டாம்புகளைத் தின்றிருக்கும் !'' என்று அவன் நண்பன் விளக்கம் தந்தான்.

விளக்கம் எதுவானால் என்ன? முரளிக்கு நெஞ்சு ஆறவேயில்லை. எல்லாம் அருமை யான இங்கிலாந்து தேசத்துத் தபால் தலைகள். சுலபமாகக் கிடைக்காதவை.

முரளிக்கு, ''பிலாடலி'' ஒரு பொழுது போக்கு. அவனிடம் அருமையான 'ஸ்டாம்ப் கலெக்ஷன்' இருந்தது. எதிர்பாராதவித மாக வட இந்தியாவுக்கு மாற்றலானபோது தன் ஆல்பங்களைத் தன் தந்தையின் இரும்புப் பீரோவுக்குள் வைத்துப் பத்திரப்படுத்திவிட்டு நிச்சிந்தையாகக் கிளம்பினான்.

ஆண்டுகள் கழிந்தன. எத்தனை முறைகள் விடுமுறைக்கு வந்திருக்கிறான்? ஆனால் அந்த ஆல்பங்களை எடுத்துப் பார்க்க வேண்டும் என்று தோன்றியதே இல்லை.

இரும்புப் பீரோவுக்குள் அவை பத்திரமாக இருக்கின்றன என்ற தைரியம்தான்.

இப்போதும் முரளி வெறும் நஷ்டத்துக் காக வருந்தவில்லை.... ஆல்பங்களையெல்லாம் அவன் ஒரு பெட்டிக்குள் வைத்திருந்தான். ஆனால், தனியே, ஒரு பெரிய காகிதக் கவருக் குள், அந்த இங்கிலாந்து தேசத்துத் தபால் தலைகளை மட்டும் வைத்து, கவரைப் பெட் டிக்கு வெளியே வைத்திருந்தான்.

பெட்டிக்குள் இருந்த ஆல்பங்கள் அப் படியே இருந்தன..... புத்தகப் புழுக்கள் தின்றது இந்தக் கவருக்குள் இருந்தவற்றை மட்டும்தான்.

'' இந்த ஸ்டாம்புகளைத்தான் அவை பொறுக்கியெடுத்துத் தின்ன வேண்டுமா?'' என்று நினைத்து நினைத்து மனத்துக்குள் புழுங் கினான் முரளி. இவை அவனுடைய பாட்டனா ரின் பரிசு. கடைசிப் பரிசு. இதை அவனுக்கு அளித்த பிறகு அவர் ஒரு வாரம்கூட உயிர் வாழவில்லை.

தாத்தாவை நினைத்துக் கொண்டான் அவன்... செல்வத்திலேயே புரண்டவர் அவர். ஆனால் கஞ்சத்தனத்துக்கு உதாரணமாக அவ ரைச் சொல்லலாம். சீசா நிறைய மிட்டாய் வைத்திருப்பார். ஆனால் தம்மைப் பார்க்க வருபவர்கள் ஒரு குழந்தையையும் உடன் அழைத்து வந்தால், அந்தக் குழந்தைக்கு ஒரே ஒரு மிட்டாய் தருவார். அதைத் தின்று விட்டுக் குழந்தை மறுபடியும் கையை நீட்டி னால் பட்டென்று அந்தப் பிஞ்சுக் கரத்தில் ஓர் அடி கொடுப்பார். கூடவே அதன் பெற்றோ ருக்கு ஒரு லெக்சரும் கொடுப்பார்.

அப்படி இருந்தவர்தான் ஆயுள் காலம் முடிய ஒரு வாரமே இருந்தபோது, முரளியை அழைத்து அந்தத் தபால் தலைகளைக்கொண்ட கவரை அவனுக்கு அளித்தார். ''உன் வயதில் நானும் ஸ்டாம்ப் சேர்த்தேன். இந்தா ! உனக்கு இதை நல்ல மனசோடு கொடுக் கிறேன்..... நீ நல்லவன் !''

'' நீ நல்லவன் !'' என்ற வார்த்தைகள் மட்டும் தனியாக, ஏதோ மர்மமான அர்த்தம் கொண்டவை போல், முரளி உணர்ந்தான்.

தபால் தலைகளை அவன் தன் தந்தையிடம் காண்பித்தான். '' என்ன ? அவர் பரிசளித் தாரா ? அதுவும் உனக்கா ? போகிற இடத் துக்குப் புண்ணியம் தேடிக் கொள்கிறாரா ?'' என்றார் அப்பா. அந்த வார்த்தைகளில் விஷம் இல்லை.... கிழவரின் கஞ்சத்தனம் அத்தனை பிரசித்தி! உதாரகுணம் படைத்த அப்பாவுக்கும் கஞ்சத்தனமே உருவான தாத்தாவுக்கும் எத்தனையோ வாக்கு வாதங்கள் நடந்திருக்கின்றன.

கொடுக்காதவர் கொடுத்த பரிசு. இது மட்டும் இப்படி அழிந்து போவானேன்?

தன் தந்தையிடம் சொன்னான் முரளி. '' அப்பா ! தாத்தாவின் சில புத்தகங்கள், மூக்குக் கண்ணாடி முதலியவை அடங்கிய பெட்டி உங்களிடம் இருக்கிறதல்லவா ?'' என்றான்.

அவர் பரிவோடு அவனைப் பார்த்தார். ''ஆமாம். ஏன் ?''

தெளிவு

ருக்மிணி பார்த்தசாரதி

'' அதை நான் திறந்து பார்க்க லாமா?''

''பாரேன் ? ஸ்டோர் ரூமில் இருக்கி றது. கறுப்புடிரங்க் பெட்டி. இந்தா, சாவி!'' அவர் சாவிக் கொத்தை எடுத்துத் தந்தார்.

சின்னப் பெட்டிதான். முரளி அதைத் தன் அறைக்கு எடுத்து வந்து தூசு போகத் துடைத்தான்.

சாவியைப் பொருத்திப் பூட்டைத் திறந் தான். மூடியை உயர்த்தினான்.

வேட்டி சட்டைகள். இரண்டு கைத் துண்டுகள். மூக்குக் கண்ணாடி. ஒரு வெற் றிலைப் பாக்குப் பெட்டி. அவர் பெயர் பொறித்த இரண்டு வெள்ளித் தம்ளர்கள். ஒரு சாப்பாட்டுத் தட்டு... சில புத்தகங்கள்.

ஒவ்வொரு பொருளாகக் கையில் எடுத் துப் பிரித்து மறுபடியும் அதனிடத்தில் வைத் தான் முரளி. துயரம் அழுகைப் பந்தாக நெஞ்சில் அடைத்தது. வெடித்து வெளியே வரவும் இல்லை. அமுங்கி மறைந்து போகவும் இல்லை.

சில புத்தகங்கள்... ஒரு டயரி...

டயரி! அவன் அதை ஆவலோடு பிரித்தான். நெஞ்சு அடித்துக் கொண்ட வேகத்துக்குக் காரணம்கூட விளங்கவில்லை.

கத்தையாகக் கடிதங்கள். அவற்றைப் புரட்டிக் கொண்டு வந்தவனின் கண்களில் அக்னியாக ஒரு வார்த்தை சுட்டது. ''ஸ்டாம்ப்.''

அவன் கடிதத்தைப் படித்தான். இங்கிலாந்திலிருந்து ''ஜான்'' என்று கையெழுத்திட்டு யாரோ எழுதியிருந்த கடிதம், தாத்தாவின் பெயருக்கு.

'' இத்துடன் சில, 'அபூர்வமான க்வீன் விக்டோரியா ஸ்டாம்புகள் அனுப்பியிருக்கிறேன். தயவுசெய்து மிஸ்டர் சுப்புவிடம் கொடுத்து விடவும்...''

மூளையில் மின்சாரம் பாய, நடுங்கும் விரல்களால் கடிதங்களைப் புரட்டினான் முரளி.... மற்றொரு கடிதத்தைப் பொறுக்கி எடுத்தான். இதுவும் ஆங்கிலத்தில்தான். ''சுப்பு'' என்று கையெழுத்திட்டிருந்தது.

'' நீங்கள் அனுப்பியதாகக் கூறும் தபால் தலைகள் எனக்கு வந்து சேரவில்லை. மிஸ்டர் ஜானின் அன்பளிப்பு இப்படித் தபாலில் தவறினது என்ன பரிதாபம் !''

சட்டென்று முரளிக்குப் புரிந்தது. ஜான் என்பவர் அன்பளிப்பாகச் சுப்பு என்பவருக்குச் சில தபால் தலைகளை அனுப்பியிருக்கிறார். தாத்தாவின் பெயருக்கு அனுப்பி அவற்றைச் சுப்புவுக்குக் கொடுத்துவிடச் சொல்லியிருக்கிறார். தாத்தாவோ அவற்றைத் தாமே வைத்துக் கொண்டு தபாலில் அனுப்பிவிட்டதாகச் சுப்புவுக்குத் தெரிவித்திருக்கிறார்... அவை கிடைக்காமல் போகவே தபாலில் தொலைந்ததாகச் சுப்பு நினைத்திருக்கிறார்.


அந்தத் தபால் தலைகள் திருட்டுப் பொருள்!

'' நீ நல்லவன்!'' என்று சொல்லிவிட்டுத் தாத்தா அவற்றைத் தனக்கு அளித்ததன் முழு அர்த்தமும் இப்போது முரளிக்கு விளங்கிற்று... குறுக்கு வழியே வந்த செல்வம் அது. அதை ஒரு நல்லவனுக்கு அளிப்பதன் மூலம் தம் பாபக் காரியத்துக்குப் பிராயச்சித்தம் தேடிக் கொள்ள முயன்றிருக்கிறார் தாத்தா.

தாத்தாவின் பொருள்களை மறுபடியும் அடுக்கி வைத்துப் பெட்டியை மூடிப் பூட்டினான் முரளி..... அதை எடுத்துப் போய் ஸ்டோர் ரூமுக்குள் வைத்துவிட்டுச் சாவிக் கொத்தைத் தந்தையிடம் கொடுத்தான்.

''டேக் இட் ஈஸி, ஸன் ! போனவை வெறும் தபால் தலைகள்தாம். நீயோ நானோ வேண்டுமென்றே அவற்றை அழிக்கவில்லையே! வீணாக மனத்தைக் குழப்பிக் கொள்ளாதே!''

''இல்லை, அப்பா ! என் மனம் தெளிந்து விட்டது !'' அவன் முறுவலோடு தன் அறைக்குச் சென்றான். ஒரு வத்திக் குச்சியைப் பற்ற வைத்துத் தீ நாக்குகளுக்கு அந்தக் கவரைச் சமர்ப்பித்தான்.



ஜலதோஷமும் ஃப்ளூவும்— சில முக்கிய தகவல்களும் முறியடிக்கும் முறைகளும்

“அனஸின் எனக்குப் பெரிதும் உதவுகிறது” என்கிறார் நர்ஸ் ஏஞ்சலா ஃபெர்னாண்டஸ்.



நர்ஸ் ஏஞ்சலா ஃபெர்னாண்டஸ், ஜலதோஷத்தையும் ஃப்ளூவையும் எதிர்த்து, விரைவில் வலிகளிலிருந்து நிவாரணமளிக்க சக்தி வாய்ந்தது அனஸின் என்பதைக் கண்டறிந்தவர்.

ஜலதோஷமும் ஃப்ளூவும் வரக் காரணம் என்ன?

பாதிக்கப் பட்டவர்களிட மிருந்து காற்றில் வரும் விஷ அணுக்கள் ஜலதோஷத்தையும் ஃப்ளூவையும் பரப்புகின்றன. இந்த விஷ அணுக்களை சாதாரணமாக உடல் எதிர்க்கிறது. ஆனால் அளவுக்கு மீறிய உழைப்போ சத்துக் குறைவோ உடலைப் பலவீனப் படுத்தி, நோய் எதிர்ப்பாற்றலைக் குறைக்கிறது.

அறிகுறிகள் யாவை?

உடல் வலி, தலைகனம், தும்மல், மூக்கிலே ஒழுக்கு இவற்றுடன் ஜலதோஷம் தொடங்கும். குளிர், அமைதியின்மை, வியர்வை தோன்றும். இருமல், தொண்டைப்புண், பசியின்மை, உடல் சோர்வு, தொடரலாம்.

சிக்கல்கள் தோன்றுமா?


புறக்கணித்தால் நிமோனியாவிலும் சுவாச கோசம் மற்றும் மேல் மூச்சுக் குழாயின் நோய்த் தொற்றிலும் முடியலாம்.

அனஸின் எப்படி உதவுகிறது?

இது ஜலதோஷம், ஃப்ளூவினால் ஏற்படும் வேதனையைப் போக்குகிறது. உலகெங்கும் டாக்டர்கள் சிபாரிசு செய்யும் வலி-நிவாரணியை அதிக அளவில் கொண்ட அனஸின் சக்தி வாய்ந்தது. டாக்டரின் நம்பகமான மருந்துக் கலவை போன்றது. ஜலதோஷம், ஃப்ளூவின் முதல் அறிகுறி தோன்றியதுமே, அனஸின் சாப்பிடுங்கள். ஒரு நாளைக்கு 4 தடவை.

நீங்கள் வேறென்ன செய்ய வேண்டும்?

- நிறைய திரவ பதார்த்தங்கள், கொதிக்க வைத்த நீர், ஆரஞ்சு எலுமிச்சை சாறு பருகுங்கள்.
- சத்துணவு புசியுங்கள்.
- போதிய ஓய்வெடுங்கள்.
- ஆண்டிசெப்டிக் மருந்து அல்லது உப்புக் கரைத்த நீரால் கொப்புளியுங்கள்.
- அறைகள் காற்றோட்டமாக இருக்கட்டும்.



சக்தி வாய்ந்த, நம்பகமான


அனஸின்

இந்தியாவின் புகழ் பெற்ற வலி-நிவாரணி

A 14-6/76

Regd. User of TM: Geoffrey Manners & Co. Ltd.

குட்மார்னிங் டாக்டர்!



டைபாய்ட் தடுப்பு ஊசி

காய்ச்சல் குறைந்ததும் பாய்ச்சல் வேண்டாம்!

"ஐந்து ஆறு நாட்களாக விட்டு விட்டுக் காய்ச்சல் அடிக்கிறது. இன்று காலையில் என்னால் படுக்கையிலிருந்து எழுந்திருக்கவே முடியவில்லை. அத்தனை அசதி, டாக்டர்!'' என்றார் வெங்கடாசம்.

அவரது நாக்கு வெண்மைப் பூச்சுடன் காணப்பட்டது. பெஞ்சியில் படுக்க வைத்து வயிற்றை அமுக்கிப் பார்த்தேன்.

''வயிறு உப்புசமாக இருக்கிறது. பசியே இல்லை. மலச்சிக்கலும் இருக்கிறது'' என்றார் நோயாளி.

மறுநாள் இரத்தப் பரிசோதனைக்கு ஏற்பாடு செய்வதாகச் சொல்லி அவரைப் படுக்கையை விட்டு எழுந்திருக்க வேண்டாமென்று எச்சரித்து அனுப்பினேன்.

இரத்தப் பரிசோதனையின் முடிவு: அவருக்கு 'டைபாய்டு'. ஆன்டிபயாடிக் மருந்து எழுதிக் கொடுத்தேன். நோய் கண்ட இரண்டாவது வாரத்தில் வெங்கடாசத்தின் இரத்தத்தில் இன்னொரு பரிசோதனை செய்ததில் 'டைபாய்டு'தான் என்பது மேலும் உறுதியாயிற்று. ஓய்வு, உணவுக் கட்டுப்பாடு ஆகியவற்றின் அவசியத்தை நோயாளிக்கு வற்புறுத்திக் கூறினேன். வீட்டிலுள்ள அவரது உறவினர், வேலைக்காரி உட்பட அனைவருக்கும் தடுப்பு ஊசி (TAB) போட ஏற்பாடு செய்தேன்.

''டைபாய்டு நோயாளிக்கு என்ன ஆகாரம் கொடுப்பது?''

''காய்ச்சல் மிகுதியாக இருந்தால் கஞ்சி, பால், பழச்சாறு முதலிய திரவ உணவுகளை மட்டுமே கொடுக்க வேண்டும். ஜுரம் குறைந்த பிறகு குழைய வடித்த சாதத்தில் மோர் கலந்து கொடுக்கலாம். ரொட்டியும் கொடுக்கலாம். மூன்று வாரங்கள் வரை இந்த உணவுக் கட்டுப்பாட்டினை நோயாளி கடைப்பிடித்தே தீர வேண்டும். ஜுரம் குறைந்து விட்டதே, அல்லது இல்லையே என்று எண்ணி வழக்கம் போல் காரம், உப்பு புளி கலந்த உணவு வகைகளை உண்ணத் தொடங்கினாலோ அல்லது நடமாட ஆரம்பித்தாலோ நோய் மீண்டும் வந்துவிடும்.''

''இந்நோய் வரக் காரணம் என்ன? இதனைத் தடுக்க வழி என்ன?''

''நீர், உணவுப் பண்டங்கள் மூலமாகப் பரவுகிறது. ஈக்கள் இந்நோய் பரவப் பெரிதும் காரணமாக அமைகின்றன. குடி தண்ணீரைக் கொதிக்க வைப்பதுடன் உணவுப் பண்டங்களை மூடி வைக்கவும் வேண்டும். சுகாதார விதிகளையும் அனுசரிக்க வேண்டும். நோயாளியைத் தனி அறையில் படுக்க வைக்க வேண்டும். நோயாளியின் கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்தும்போது பினைல்போன்ற கிருமி நாசினிகளை உபயோகித்தல் அவசியம்.

''ஓட்டல்களில் பணியாற்றுவோரை முனிசிபல் அதிகாரிகள் அவ்வப்போது உடற் பரிசோதனை செய்ய வேண்டியது மிக அவசியம். சிலருக்கு உடலிலேயே டைபாய்டு கிருமிகள் இருந்தும் அதனால் அவர்கள் பாதிக்கப்படுவதில்லை. ஆனால் அக்கிருமிகளை மற்றவர்களுக்கு அவர்கள் பரப்புவது சாத்தியம்.''

''இந்நோயின் விளைவாக எப்பொழுது ஜன்னி காணக் கூடும்?''

''இரண்டாவது வாரத்தில்தான் அநேகமாக ஜன்னி பிறக்கும் வாய்ப்பு அதிகம். ஜன்னியின் விளைவாக நோயாளி சுயநினைவு இழந்து வேதனையுற்றால், மருத்துவ மனையில் சேர்ப்பது நலம்.''

டாக்டர் வி. ராஜு கூறக் கேட்டு
எழுதியவர்: ஆர். பி.



ஜோராக அமைந்த ஜுகல்பந்தி

நகர்வலம் – சூரத் மிக அருமையாக எழுதப்பட்டுள்ளது. நிரம்ப விஷயங்களை அருமையாகத் தந்திருக்கிறார். வைரங்களைப் பட்டை தீர்க்கும் சூரத்தை எஸ். வி. எஸ். அழகாகப் பட்டை தீர்த்து ஒளியூட்டித் தந்திருக்கிறார்.

தேசபக்தர்களுக்கு சூரத் ஒரு புனித க்ஷேத்திரம் என முடித்திருப்பது தேசிய உணர்வைப் படிப்பவர்களிடம் மீட்டுகிறது.

சுதந்திர தினம் கொண்டாடும் தருணத்தில் இந்தக் கட்டுரையைத் தாங்கள் பிரசுரித்தது தனி பாராட்டுக்குரியது.

பாலமுரளியும், பெரிய முரளியும் என்ற தலைப்பு என்ன இது என ஆர்வத்தை எழுப்புவதாக உள்ளது. கலை உள்ளம் செய்த விமர்சனம் என்பதை வர்ணனைகளும் சொற்களும் பளிச்செனக் காட்டுகின்றன.

சென்னை–1
29–7–76 குயிலி ராஜேசுவரி

(படம் - 'இத்தனை பிரமாதமாக எழுதிவிட்டு ஒரு படத்தைப் போடாமல் இருந்துவிட்டீர்களே' என்று கேட்டுள்ள நேயர்களுக்கு. இடமிருந்து வலமாக: காசிநாத் மிச்ரா, ஹரிபிரசாத், சௌராசியா, ரமணி, தஞ்சாவூர் உபேந்திரன்.)

சுஜாதா விஞ்ஞான கதைகள் நான் படித்து வர்றேன்.

ஆ ! வெரி ஜோர். சுஜாதா எப்படி இப்படி ஜோரா எழுதுகிறீர்? தமிழாசிரியர் கதை ரொம்ப பிரமாதம். தொடர்ந்து, சுஜாதா விஞ்ஞான கதைகள்.

கடலூர் – 2
30–7–76 தங்க. குஞ்சிதபாதம்

சுஜாதா கல்கியில்தொடர்ந்து எழுதிவரும் விஞ்ஞானக் கதைகளைப் படித்து வருபவன். புதுமையான வகையில் ''தீம்'' உருவாக்கிச் சுவைபடத் தருவதில் விஞ்சி நிற்கிறார்..... 1–8–76 கல்கி இதழில் வெளி வந்த 'தமிழாசிரியர்' மட்டும் தமிழாசிரியர் வட்டாரங்களை, தமிழை, தமிழ் கற்பவர்களை எள்ளி நகையாடுவது போலிருக்கிறது.

எடமேலையூர்
30–7–76 என். வீரப்பன்

தங்களுடைய கல்கியில் தற்போது வெளிவந்து கொண்டிருக்கும் ஸ்ரீ காஞ்சிப் பெரியவாளின் அருள்வாக்குப்படி ஜீவகாருண்யச் செயல் புரிந்து அன்புக்கு இலக்கணம் வகுத்த தமிழகத்தின் இந்தரைப் பற்றித் தலையங்கமே எழுதியது மகுடம் சூட்டியது போல் உள்ளது.

மதுராந்தகம்
22–7–76 எம். வி. குமார்

நங்கநல்லூரில் ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்மர் கோயில் கட்ட அஸ்திவாரத்துக்காகத் தோண்டும்பொழுது பண்டைக் காலத்தில் இந்த இடத்தில் கோயில் ஒன்று இருந்ததற்கான சான்றுகளும், கிருஷ்ணர் சிலையும், ஒருசில உடைந்த மட்பாண்டங்களும் கண்டுபிடிக்கப் பட்டன. முன்பு கோயில் இருந்த இடத்தின் பக்கத்தில் மண் எடுப்பதற்காக 21–7–1976 அன்று காலை பள்ளம் வெட்டும்பொழுது சுமார் இரண்டு அல்லது மூன்று அடி ஆழத்தில் திருமாலின் சிலை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இச்சிலையின் பின் இரு கரங்களும் சிதைந்திருந்தாலும் மற்ற அங்கங்கள், முக்கியமாக முகம் எவ்விதச் சேதமுமின்றி உள்ளது. உட்கார்ந்திருந்த நிலையில் உள்ள இச்சிலை சுமார் ஒன்றரை அடி உயரம் உள்ளது. இதே இடத்தில் இன்னும் சில கலைப் பொருட்கள் கண்டெடுக்கப்படலாம். தமிழகத் தொல் பொருள் ஆராய்ச்சியாளர்கள் இவ்விடத்தைப் பார்வையிட்டு, தகுந்த நடவடிக்கைகள் எடுத்து, இன்னும் ஏதேனும் கலைப் பொருட்கள் இருப்பின் அவைகளை வெளிக் கொணர்ந்து காப்பாற்றுவார்கள் என நம்புகிறோம்.

நங்கநல்லூர்
23–7–76 எம்.கே. பார்த்தசாரதி

''கல்கி'' நினைவுச் சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற ''கணங்களும் யுகங்களும்' புதிய கோணத்தில் எழுதப்பட்ட, அழகான கதை. அழகாபுரி அழகப்பன் எழுதினால் கதை அழகாக இருக்கக் கேட்பானேன்? நன்றாகப் புரியும் நடை; எளிய வாக்கியங்கள். சின்னக் கருத்து. படித்து முடித்தவுடன் ஆழ்ந்து யோசிக்க வைக்கும் கதை. ஆசிரியருக்கு என் வாழ்த்துக்கள்.

விஜயவாடா
4–8–76 க. ரா.

'கணங்களும் யுகங்களும்' ஓர் ஆழமான பார்வையில் அமைந்த எதார்த்த அற்புதம் !

சேலம் – 1
4–8–76 வி. கமலராஜ்

அதற்கு மேலும் ஓட முடியாது. அப்படி இரைத்தது. தன் வாழ்நாளிலேயே அவ்வளவு ஓடியதில்லை. உடம்பின் சர்வ பாகங்களும் மூச்சுவிட வியர்வைத் திரை கண்ணை மறைக்க நாக்கில் உப்பு கரிக்க நனைந்து. தவித்து. தாகித்து... அந்த வாசலை அடைந்தார்.

திரும்பிப் பார்த்தார். அந்த நீண்ட, மிக நீண்ட பாதை காலியாக இருந்தது. துரத்தினவர்களைக் காணவில்லை. எதிரே பார்த்தார். மிக உயரமான சுவர்.... அப்பழுக்கில்லாத சுவர். சுவரில் பதிந்திருந்த ஒரே ஒரு வாசல். மூடியிருந்தது. அங்கே இருந்த கல்பெஞ்சியில் உட்கார்ந்தார். அது என்ன இடம்? நான் இங்கு இதற்குமுன்னால் வந்ததில்லையே....

'க்கும்' என்ற கனைத்தல் கேட்டுத் திடுக்கிட்டு விருட்டென்று எழுந்தார். சுற்றுமுற்றும் பார்த்தார். பத்தடி தூரத்தில் மற்றொரு கல் பெஞ்சில் ஓர் ஆசாமி உட்கார்ந்திருந்தான். கால் மேல் கால் போட்டுக்கொண்டு. ஆத்மாவைப் பார்க்காமல் நேர்ப் பார்வை பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். அவனிடம் ஆயுதம் எதுவும் இல்லை. ''இப்போதுதான் வந்தீர்களா?'' என்றான், நேர்ப் பார்வை விலகாமல்.

''ஆம் ! நீங்கள் யார் ?''

''அதை நான் உங்களிடம் கேட்க இருந்தேன்.''

'' என் பெயர் ஆத்மா. இது என்ன இடம் ?''

'' இங்கே வந்து உட்கார்ந்து கொள்ளலாமே ?''

''ஓ்ந்தக் கதவு ?''

''திறக்கும். அதற்காகத்தான் நானும் காத்திருக்கிறேன். வாருங்கள்.''

ஆத்மா நொண்டி நொண்டி அவன் அருகில் சென்று உட்கார்ந்து கொண்டார். அவன் போர்த்தியிருந்தான். மௌனமாகவே இருந்தான். ஆத்மாவை இது வரை நேரில் பார்க்க முடியவில்லை.

''இங்கே தண்ணீர் கிடைக்குமா? தூரத்தில் நதி தெரிகிறது. அதைக் கடந்துதான் வந்தேன். அந்தக் கரையில் அவர்கள் இருக்கிறார்கள் !''

அவன் தன் பெரிய போர்வைக்குள்ளிருந்து ஒரு பாத்திரத்தை எடுத்து. ''இதோ, குடியுங்கள். எனக்காக ஒரு முழுங்கு வைத்திருக்கிறேன். உங்கள் தாகம் அதிகப்பட்டதாகத் தெரிகிறது.''

ஆத்மா அதைப் பறித்துக் குடித்துவிட்டு, ''நன்றி'' என்றார்.

முகத்தைத் துடைத்துக் கொண்டு, ''கயவாளிப் பயல்கள்'' என்றார்.

''யார் ?''

''ஜனங்கள் ! நன்றி கெட்டவர்கள். நல்லது செய்கிறவர்களுக்குக் காலமில்லை, ஐயா !''

''அப்படியா? ரொம்ப ஓடினீர்களா ? இந்த வயதில் இப்படி ஓடலாமா ?''

''துரத்திக் கொண்டு வந்தார்கள்.''

''யார் ?''

''ஜனங்கள்! நன்றி கெட்டவர்கள்.''

''துரத்தும்படியாக என்ன ஆயிற்று ?''


''நின்றிருந்தால் கொன்றிருப்பார்கள்.... என்னை நோக்கித் துப்பாக்கி வெடித்தார்கள்.''

''துப்பாக்கியா ?''

''ஆம்.''

''விஷயம் தீவிரமாக இருக்கிறதே !''





''என்னை உங்களால் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லையா? ஆத்மா என்ற பெயரைக் கேள்விப்பட்டதில்லையா ?''

''இருக்கலாம். என் ஞாபகம் சரிவர வேலை செய்வதில்லை.''

''இனி நான் நீங்கள் கேள்விப்பட்ட ஆத்மா இல்லை.''

''புரியவில்லை.''

''எல்லாம் போய் விட்டது. என் வீடு.... என் நாடு... என் ராஜ்யம்....!''

''ராஜ்யமா ? நீங்கள் ராஜாவா ?''

''ஒரு வகையில் தலைவன் என்று சொல் லுங்களேன்.''

''அவர்கள் உன்னைத் துரத்தும்படியாக நீங்கள் என்ன தப்புச் செய்தீர்கள்?''

'' தப்பா! நானா? நல்லது செய்தேன். அந்த அறிவு கெட்ட ஜனங்களுக்கு அதை அறிந்து கொள்ளப் புத்தியில்லை. ஆட்டு மந்தைகள்... புரட்சியாம் விடுதலையாம்!''

ஆத்மா நன்றாகத் திரும்பி உட்கார்ந்து கொண்டார். ''நண்பரே ! உலகத்தில் ஒன்றே ஒன்று தெரிந்து கொள்ளுங்கள்.... எவரையும் நம்பாதீர்கள். கட்டின பெண் டாட்டியை நம்பாதீர்கள். சொந்த மகனை நம்பாதீர்கள். எல்லாருமே சுயநலக்காரர்கள். உங்களை முதுகில் கத்தியால் குத்துவார்கள். இவர்களுக்காக எத்தனை செய்தேன். இராப் பகல் கண் விழித்து என் நாட்டைப் பொன் நாடாக அமைத்தேன். குற்றம் என்பதை ஒழித்தேன். உட்காவலுக்குத் தேவையில் லாமல் செய்தேன். வயதானவர்களை விடுவித் தேன். ஏழைமையை ஒழித்தேன். அமைதியை நிலைநாட்டினேன். நான் இந்த நூற்றாண்டில் தப்பிப் பிறந்தவன்.... அவதார புருஷன்.... இவர்களுக்கு லாயக்கில்லை..... நதிக் கரையில் துரத்திக் கடுகிறார்கள் !''

''உங்கள் தேசத்தின் பெயர் என்ன?''

''ச் ! ஏதோ ஒரு தேசம். இப்போது எனக்குத் தேசமில்லை... என் சகலமும் போய்விட்டது.''

''அடாடா ! நல்லவர் போலத் தோன்றுகிறதே !''

''நல்லதாவது! கெட்டதாவது! அதில் எல்லாம் நம்பிக்கை இல்லை.''

''நீங்கள் நல்லதேதான் செய்திருக்கிறீர்கள் என்று தெரிகிறதே !''

''அவர்களுக்குத் தெரியவில்லையே ! நான் என் மனத்துக்குத் தோன்றியதைச் செய் தேன்.''

''அதை அவர்கள் ஒப்புக் கொள்ளவில் லையா ?''

''அவர்கள் எல்லாவற்றையும் அனுபவிக் கிறார்கள். சந்தோஷமாக இருக்கிறார்கள்.''

''பின் ?''

''நான் கடைப்பிடித்த முறைகள் சரியில்லை யாம் !''

''முறைகள் எப்படி இருந்தால் என்ன? கடைசியில் எய்தியதுதானே முக்கியம் ?''

''நீங்கள் சொல்கிறீர்கள். அவர்கள் அப் படிச் சொல்லவில்லையே!.... இப்போது உங் களையே எடுத்துக் கொள்வோம். உங்களிடம் கொஞ்சம் தண்ணீர் இருந்தது. அந்தத் தண்ணீருக்கு அதிகத் தேவை யாருக்கு இப் போது இருந்தது? எனக்கு. ஓடி வந்தவன். இரைக்கிறவன்.... அதிக தாகம் உள்ளவன். எனவே, எனக்கு அளித்தீர்கள். இதே



சுஜாதா



தர்மத்தைத்தான் நான் கடைப்பிடித்தேன், ஐயா !''

''அதில் ஏதாவது சிக்கல் இருந்ததா?''.

''எத்தனை சிக்கல் ! எத்தனை போராட்டம் ! பெரியவரே, நீங்களே சொல்லுங்கள். ஏதோ ஒரு நாடு இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அதில் ஆயிரம் பேர் இருக்கிறார்கள் என வைத்துக் கொள்ளுங்கள். அந்த ஆயிரம் பேருக்கும் போதுமான உணவு இல்லை. இடம் இல்லை. எவ்வளவோ விஞ்ஞான சாகசங்கள் செய்தாலும் அறுநூறு பேர்களின் தேவையைத்தான் பூர்த்தி செய்ய முடிகிறது. அறுநூறு பேர்கள்தான் ஆதார சுகங்களுடன் வாழ முடியும். அறுநூறு பேருக்குத்தான் கல்வி தர முடியும். நிழல் தர முடியும். அறுநூறு பேர்தான் நல்ல காற்றைச் சுவாசிக்க முடியும். உணவு பெற முடியும்.... அப்போது என்ன செய்வீர்கள்.... நீரே அந்த நாட்டின் தலைவர் என்று வைத்துக் கொள்ளலாம்.''

''ம்..... யோசிக்க வேண்டிய விஷயம். உற்பத்தியைப் பெருக்கலாம்.''

''செய்து விட்டேன்! பூமி தரும், கடல் தரும் சகலங்களையும் கவனித்துவிட்டேன். சாப்பிடக்கூடிய அத்தனை பண்டங்களையும் சேகரித்துவிட்டேன்..... இன்றைய விவசாய முன்னேற்றத்தின் எல்லை வரையில் வந்துவிட்டேன்..... அறுநூறு பேருக்குத்தான் தேறுகிறது.....!''

'' சிக்கல் ! நாட்டின் பரப்பை அதிகப்படுத்திப் பார்க்கலாம்.''

''எப்படி அதிகப்படுத்துவது ? அண்டை நாட்டுடன் போரிட்டா ? போரிட்டு அங்கே கொஞ்சம் பூமியைக் கவர்ந்து கொள்ளலாமா? சரி ! அந்த நாட்டில் முந்நூறு பேர் வாழ வேண்டிய இடத்தில் மூவாயிரம் பேர் வாழுகிறார்கள். அவர்களை உள்ளே வரவிடாமல் பாதுகாப்பதே பெரிய காரியமாக இருக்கிறது.....''

''அவர்கள் எப்படிச் சமாளிக்கிறார்கள் ?''

''சமாளிப்பதாவது !.... வறுமையிலும் போராட்டத்திலும்... மிருகங்கள் போல் வாழ்கிறார்கள் ! அந்த வாழ்வா உனக்கு வேண்டும் ! இருப்பவர் இருக்கிறதைப் பங்கு போட்டுக் கொண்டு எல்லோரும் அரைப் பட்டினியாக இருக்கலாமா ? சரி, அதனால் என்ன நிகழ்கிறது? ஆதாரத் தேவை உணவு, இடம், உடை, மூன்றும் போதவில்லை. என்ன செய்கிறார்கள்...... பலமுள்ளவன் அடித்துப் பிடுங்குகிறான். சேர்த்து வைக்கிறான். ஒளித்து வைக்கிறான். பொய் சொல்கிறான். சூறையாடுகிறான். நிகழ்வது என்ன? கையாலாகாதவர்கள் மடிந்து போகிறார்கள். பலமுள்ளவன் திருடன் தப்பிக்கிறான். அப்படி மடிந்து போகும் கையாலாகாதவர்களில் ஒரு தேர்ந்த விஞ்ஞானி இருக்கலாம், ஒரு தேர்ந்த சங்கீதக்காரன் இருக்கலாம், தத்துவ ஞானி இருக்கலாம், பொறி இயல் நிபுணன் இருக்கலாம், இல்லையா...? எண்ணிக்கை என்னவோ குறைந்து விடுகிறது. ஆனால் மிச்சம் இருப்பவர்கள் மிச்சம் இருக்கத் தகுதி உள்ளவர்களா? இதை யோசிக்க வேண்டாமா ?''

'' நீங்கள் எப்படிப் பிரச்னையைத் தீர்த்தீர்கள் !''

''சுலபமாக அமைதியாகத் தீர்வு கண்டேன்.... அந்தத் தேவையில்லாத நானூறு பேர்களைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துவிட்டேன். சந்தடியில்லாமல், சப்தமில்லாமல்.... ஆட் குறைப்புச் செய்தேன்.... அவர்களை நீக்கி விட்டேன்.....!''

''நீக்கிவிட்டேன் என்றால்....?''

''ஆம்.''

''கொஞ்சம் அசுர வைத்தியமாக இருக்கிறதே.''

'' வேறு வைத்தியம் இருக்கிறதா ?..... அப்படியே விட்டிருந்தால் நான் முன்பு சொன்னபடி மக்கள் தொகை குறைந்திருக்கும்.... ஆனால் இறக்க வேண்டியவர்கள் இறந்திருக்கமாட்டார்கள் !''

''இறக்க வேண்டியவர்கள் யார் என்று எப்படித் தீர்மானித்தீர்கள் ?''

'' நான் தீர்மானிக்கவில்லை.... அதை உணர்ச்சியில்லாத இயந்திரங்கள் தீர்மானித்தன. நாட்டின் பரப்பு இவ்வளவு. நாட்டின் உணவு உற்பத்தி இவ்வளவு.... உற்பத்திப் பெருக்கு இவ்வளவு.... கனிவகைகள் இவ்வளவு.... இயந்திர உற்பத்தி இவ்வளவு... அடுத்த நூறு ஆண்டுகள் எல்லாரும் சுகமாக இருக்க ஜனப் பெருக்க வேகம் எவ்வாறு இருக்க வேண்டும். அதற்கு ஏற்ப இன்றைய ஜனத்தொகை எவ்வளவு இருக்க வேண்டும்? எவ்வளவு பேர் இருக்கிறார்கள்?... எவ்வளவு பேர் உபரி ஆசாமிகள்.... எவ்வளவு மருத்து

மெடிமிக்ஸ்
பரிசு திட்டம்

Rs. 1,00,000
மதிப்புள்ள வீட்டுச்
சாதன பொருள்கள்

இலவசம்

மெடிமிக்ஸ் சோப்
உறையில் உள்ள பரிசுக்
கூப்பனில் கண்டுள்ளபடி
கூப்பன்களை சேகரித்து
பரிசுகளை பெற இன்றே
வாங்குங்கள்.



கடைசி
தேதி
30·4·77

ஆரோக்யமான
பற்களுக்கும்
ஈறுகளுக்கும்

மெடிமிக்ஸ்
ஆயூர்வேத பற்பொடி



ART ADS

மெடிமிக்ஸ்
ஆயூர்வேத சோப்

CHOLAYIL PHARMACEUTICALS.

1. PALAYAKARA STREET, MADRAS-600023.

வர்கள் வேண்டும்..... எவ்வளவு கலைஞர்கள் வேண்டும்.... எவ்வளவு கணிதம், எவ்வளவு பௌதிகம்... எவ்வளவு விவசாயம்... எவ்வளவு தொழில்கள்.... எவ்வளவு தொழிலாளிகள்.... கணவர்கள் எவ்வளவு.... மனைவிகள்............

"அபாரமான கம்ப்யூட்டர் இயந்திரம். கடைசித் தொட்டி வரை சரிபார்த்துச் சொல்லிவிட்டது..... மேலும் இந்த ஆதாரத் திட்டத்தின்படி நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் ஒரு பரிசோதனை நடத்தி அவன் புத்திசாலித்தனம் என்ன... அவன் லாயக்கு என்ன.... எல்லாவற்றையும் அந்த இயந்திரமே கணித்தது.... யாரார் இருக்க வேண்டும்... யாரார் இறக்க வேண்டும் என்று பட்டியலிட்டது.... அபார இயந்திரம் !

"இயந்திரத்தின் திட்டப்படி அப்படியே செயல்படுத்தினேன். திட்டம் மிக இரகசியமான திட்டம்..... மக்கள் மறைவது ஒருவருக்கும் தெரியாமல்... ஒருவருக்கும் நோகாமல்... அசாத்தியத் திறமையுடன்... அதையும் அந்த இயந்திரமே செய்தது. என்ன சொல்கிறீர்கள்?" மௌனமாக இருந்தார் சற்று நேரம்.

" நல்ல சித்தாந்தம்தான் ! ஆனால் இந்தச் சித்தாந்தத்தை அமைக்க உரிமை உங்களுக்கு இருக்கிறது என்று எப்படிச் சொல்வீர்கள்?"

" உரிமை நாட்டின் தலைவனான எனக்கு இல்லாமல் வேறு யாருக்கு இருக்கிறது?"

" கடவுளுக்கு !"

"ஹா! கடவுள் என்பது மனிதனின் கண்டுபிடிப்பு. நூற்றாண்டுக்கணக்காக மனிதன் உண்டு வந்த ஒப்பியம் ! கடவுள் சொர்க்கம் நரகம் என்றெல்லாம் பயம் காட்டி மனிதனைத் தளையில் ஆழ்த்தியிருந்த மதங்களை முதலில் ஒழித்துக் கட்டினேன்..."

" உங்கள் திட்டத்தின்படி எவ்வளவு பேர் நீக்கப்பட்டார்கள்?"

" நீக்கப்பட வேண்டியவர்கள் மூன்று லட்சம் பேர் இன்னும் பாக்கி இருக்கிறார்கள். இருந்தும் என் திட்டத்தின் பலன்களை மக்கள் உணர ஆரம்பித்து விட்டார்கள்..... மற்ற நாடுகளின் தலைவர்கள் வெரிடமும் இதைப் பற்றிப் பேசியிருக்கிறேன். அவர்களும் இந்த இயந்திரத்தைக் கேட்டார்கள்...."

"பின் என்ன தப்பு ஏற்பட்டது ?"

"அதுதான் சொன்னேனே ! என் சொந்த மனைவியும் மகனுமே என்னைக் காட்டிக் கொடுத்து விட்டார்கள். இந்தத் திட்டம் செயல்படுவது என் ஒருவனைத் தவிர வேறு எவருக்குமே தெரியாதபடி அவ்வளவு அபாரமாக அமைந்திருந்தது அந்த மெஷின்...காணாமல் போகிறவர்கள், காணாமல் போகிறார்கள் என்று எவருக்குமே தெரியாதபடி.... எவரும் அறியாதபடி...

"கடைசியில் என் மனைவியும் மகனும் இடைக் காகிதங்களைப் பார்த்துவிட்டார்கள். துரோகம் செய்து விட்டார்கள். அவர்களையும் மெஷினுக்கு அனுப்பி இருக்க வேண்டும். அவர்களும் பட்டியலில் இருந்தவர்கள்...

"அப்புறம் வதந்தி பரவி. என்னை ஒரு ராட்சதனாக ஆக்கி.... கொலைகாரனாக ஆக்கி மயிரிழையில் நான் தப்பித்து என் காரில் விரைய அவர்கள் துரத்த... கார் சக்கரம் பழுதாகி நான் நதிக் கரையில் ஓட..... நதியை நீந்திக் கடக்க ... அவர்கள் கட..... ஆச்சரியமாகத் தப்பித்து இதோ உங்கள் அருகில் உட்கார்ந்திருக்கிறேன்... துப்பாக்கிக் குண்டு என் முதுகில் பட்டதோ என்றுகூட சந்தேகமாக இருக்கிறது. பாருங்கள், ரத்தம் வருகிறதா என்று ?"

ஆத்மா முதுகைக் காட்டினார்.

"பட்டிருக்கிறது."

"காலிலுள்ள பெரிய வலியில் முதுகின் சின்ன வலி தெரியவில்லை !"

கதவு திறந்தது....

அவன், "வாருங்கள், உள்ளே போகலாம். அங்கே நீங்கள் பத்திரமாக இருக்கலாம். இனி அவர்கள் உங்களைத் துரத்தமாட்டார்கள்......" என்றான்.

அந்த வாசலுக்குள் குகை போன்று தெரிந்தது. தூரத்தில் மெலிய ஆரஞ்சு நிற வெளிச்சம் தெரிந்தது. அவர்கள் உள்ளே நுழையக் கதவு மூடிக் கொண்டது.

"இது... இது... என்ன இடம்?" என்று கேட்டார் ஆத்மா.

"நரகம்!" என்று பதில் வந்தது.

காப்பி அடிக்க முடியாதது!



ஜீவனுள்ள ஒரே காபி

நரசுஸ்

"தெர்மலோ" காபி

''தெர்மலோ'' முறை தயாரிப்பு
நரசுஸ் காபியின் தனிச் சிறப்பு.


நற்சுவை மிகுந்தது.
நறுமணம் கொண்டது.
நாளும் புதியது.
நரசுஸ் காபி!

தயாரித்த 24 மணி நேரத்திற்குள் தமிழகத்தில் உள்ள எங்கள் எல்லா கிளைகளின் மூலம் வினியோகம் செய்யப்படுகிறது.



நரசுஸ் காபி கம்பெனி.
சேலம்-636 007
கிளைகள்:- பாண்டிச்சேரி & தமிழகமெங்கும்.

ADWAVE/NCC 410 TAM



அமரர் கல்கி

அத்தியாயம் 35

இருள் நிலவாகுமா?

மாஜிஸ்திரேட் கோவர்த்தனன் தமது பங்களா வாசல் போர்ட்டிகோவில் காரை நிறுத்திவிட்டு இறங்கி உள்ளே வந்தார். டென்னிஸ் டிரெஸ்ஸில் இருந்தவர் நேராக மாடியில் தமது படுக்கை அறைக்குப் போய் அவற்றைக் களைந்துவிட்டு நைலக்ஸ் கோட் ஒன்றை அணிந்து இடுப்பில் நாடாவை முடித்தபடியே மீண்டும் கீழே இறங்கி வந்தார். வரவேற்பு அறையில் இருந்த அலங்காரமான அலமாரி யொன்றைத் திறந்தார். உள்ளே நோட்டம் விட்டு விட்டு, ''மணி! மணி!'' என்று உரக்க அழைத்தார்.

''ஸார்! வந்துட்டேன்'' என்று பதில் கொடுத்தபடியே சமையலறையிலிருந்து வந்த மணி, தோளிலிருந்து தொங்கிய அழுக்குத் துண்டில் கையைத் துடைத்தபடி நின்றார்.

''சோடா இருக்கான்னு பார்த்து வாங்கிக் கொண்டு வந்து வைக்கப்படாது? தினமும் அதற்கு ஒரு போராட்டம் நடத்த வேண்டுமா நான்?''

''சோடாதானே? ரெடியா இருக்கே? மார்க்கெட்டுக்குப் போய் வாங்கி வந்த சாமான்களோடு அடுப்பங்கரையிலேயே வைச்சுட்டேன். . சமையலுக்கு, நேரமாகி விடவே அதில் கவனம் போய்விட்டது.''

''சரி, சரி! சீக்கிரம் கொண்டுவந்து இங்கே அடுக்கு. ஒவ்வொரு தடவையும் நான் ரயில்வே ஸ்டேஷன் பிளாட்பார வியாபாரி மாதிரி சோடா சோடான்னு அலற வேண்டியிருக்கு!''

மணி சமையலறைக்குச் சென்று ஒரு பெரிய துணிப் பையுடன் திரும்பினார். அதிலிருந்து ஸ்பென்ஸர் சோடாக்களை எடுத்து அலமாரியில் வரிசையாக அடுக்கினார். கூடவே, ''ஸார்! நான் சொல்றேன்னு கோபிக்கப் படாது. நீங்க இங்கே உத்தியோகத்தை ஏற்று வந்தபோதே உங்க அப்பா என்னிடம் சொல்லி அனுப்பினார்...'' என்று இழுத்தார்.

''ஷட் அப்!''

''நான் வாயை மூடிக் கொண்டு போய்விட்டால் உங்க அப்பாவுக்குத் துரோகம் செய்தவனாவேன்.''

''அவரா உனக்குச் சம்பளம் தருகிறார்? நகரு!''

மணி அப்பால் சென்று துணிப் பையை மடித்துக் கொண்டே பேசினார். ''இன்று நீங்கதான் சம்பளம் கொடுக்கிறீங்க. ஆனா என் பன்னிரண்டாவது வயதிலிருந்து உங்க அப்பாகிட்டே வேலை செய்து வந்தவன் நான். 'மணி! கோவர்த்தனன் தெற்கே துணையில்லாமல் போகக் கூடாது என்பதற்காகத்தான் உன்னையும் பின்னோடு அனுப்பறேன். எவ்வளவு நல்லவனானாலும் தனியே இருக்கும்போது மனசு சில சமயம் தடுமாறிப் போய்விடும். அவன் பிறந்த தினத்திலிருந்து அவனை உனக்குத் தெரியும். அவனுக்குச் சமைத்துப் போடுவது மட்டும் உன் வேலை இல்லை. என் ஸ்தானத்திலிருந்து அவனை நீ கவனித்துக் கொள்ளணும்' என்றார்.''

''லெக்சர் முடிந்ததா ?'' — கேட்டுக் கொண்டே அலமாரிக்குள்ளிருந்து ஒரு கண்ணாடிக் கோப்பையை எடுத்துத் தமது நெஞ்சுயரத்துக்கு வந்த அலமாரியின் மேல் பரப்பில் வைத்தார் கோவர்த்தனன். அடுத்து விஸ்கி பாட்டிலையும் எடுத்து வைத்துவிட்டு, சோடா ஒன்றை உடைத்தார்.

''எனக்கு இங்கே சில வார்த்தைகளைக் கூறச் சந்தர்ப்பம் அளித்தமைக்காக நன்றி கூறி விடைபெறுகிறேன், வணக்கம்'' என்று சொற்பொழிவை முடித்தார் மணி.

கோவர்த்தனன் சிரித்தார்.

''குளிக்க வெந்நீர் ரெடி; சாப்பாடும் தயார்!''

''வெந்நீரில் நீ குளி. உனக்குத்தான் பச்சைத் தண்ணீர் உடம்புக்கு ஒத்துக்கொள்ளாது. வெய்யில் காலத்திலும் வெந்நீர் வேண்டும். எனக்கு எதற்கு? இப்பத்தான் டென்னிஸ் ஆடிட்டு வந்தேன். வியர்வை அடங்கியதும் குளித்துவிட்டுச் சாப்பிட வரேன். நீ போய் டேபிளை 'அரேஞ்ச்' பண்ணு.''

மணி சென்றதும், கோவர்த்தனன் மீண்டும் அலமாரிக்குள் கண்ணோட்டம் விடக் குனிந்தார். அதில் ஃபிரேம் போட்டு நிமிர்த்தி வைத்திருந்த பவானியின் இரு படங்களையும் எடுத்து அலமாரி மீது பார்வையாக வைத்தார். மதுவை அருந்தியபடியே அவற்றை மாறி மாறிப் பார்த்தார். ஒன்றில் அவள் வக்கீல் உடையில் இருந்தாள்; மற்றொன்றில் டென்னிஸ் உடையில் கையில் மட்டை ஏந்தி நின்றாள். உதடுகளைக் குவித்து இரு படங்களையும் நோக்கிக் காற்றை முத்தமிட்டார்

கோவர்த்தனன். பிறகு டென்னிஸ் உடையிலிருந்த பவானி படத்தை ஒரு கையில் எடுத்துக்கொண்டு மற்றொரு கரத்தில் மதுக் கோப்பையுடன் நடந்து சென்று சோபாவில் அமர்ந்தார்.

அந்தப் படங்களைத் தருமாறு அவர் முதலில் பவானியைத்தான் கேட்டார். அவள் கண்டிப்பாக மறுத்துவிடவே அவர் வேறு வழியை நாட வேண்டியதாயிற்று. கிளப் லைப்ரரியில் போடுவதற்காக எடுக்கப்பட்ட படங்கள் அவை என்பது கோவர்த்தனனுக்குத் தெரியும். அவற்றை எடுத்த ஸ்டுடியோ சொந்தக்காரரையும் தெரியும். வெகு சுலபமாக, பவானிக்குத் தேவை என்று கூறியே அவற்றுக்கு மறு பிரதிகள் போட்டுக் காசு கொடுத்து வாங்கி வந்து விட்டார். ஃபிரேம் போட்டும் வைத்துக் கொண்டார்.

பவானி இப்போதெல்லாம் அடிக்கடி டென்னிஸ் ஆட வருவதில்லை. ஒரு நாள் வந்தால் இரண்டு தினங்கள் நாடக ஒத்திகையின் நிமித்தத்தைக் காரணம் காட்டித் தப்பித்துக் கொண்டாள். மாஜிஸ்டிரேட் வேறு யாருடனாவது ஆடிவிட்டு வீடு திரும்ப வேண்டியிருந்தது. அவளுடன் ஆடும்போது ஏற்படாத சோர்வு வேறு யாருடனாவது ஆடிவிட்டு வந்தால் உண்டாயிற்று. எதையோ பறிகொடுத்து விட்டுத் திரும்புவது போல் காணப்படுவார் கோவர்த்தனன். பவானி கல்யாணத்தைக் காதலிக்கிறாள் என்பதற்கோ அல்லது தம்மை வெறுக்கிறாள் என்பதற்கோ எந்த விதமான சாட்சியமும் மாஜிஸ்டிரேட்டுக்குப் புலப்படவில்லை. என்றாலும் அவள் தம்மை விட்டு விலகி விலகிப் போவது போல் கோவர்த்தனனுக்கு ஒரு பிரமை ஏற்பட்டது. இந்த இழப்பை மறக்கத்தான் அவர் மதுவின் துணையை நாடினார். கிளப்பில் ஆரம்பித்த பழக்கம் வீட்டுக்கே குடிவந்து விட்டது. மணியை விட்டே சோடாவும் ஸ்காச் விஸ்கியும் வாங்கிக் கொண்டு வந்து வைக்கச் சொல்லும் அளவுக்கு வளர்ந்து விட்டது.

அந்தப் பெரிய வீட்டில் தாம் தன்னந்தனியாக இருக்க நேரிட்டதை ஏதோ பெரிய துர்ப்பாக்கியமாகக் கருதினார் கோவர்த்தனன். பவானி மட்டும் இங்கே தம்முடன் இருக்குமாறு வந்துவிடக் கூடுமானால் இந்தப் பெரிய வீட்டில் தனிமை அவரைத் திரும்பிய பக்கமெல்லாம் தாக்காது. வீடு மட்டுமல்ல; வாழ்க்கையே வெறுமையும் வெற்றிடமுமாகத் தோன்றும் நிலை விநாடிப் போதில் மாறிவிடும். பவானியின் வெள்ளி மணி நாதச் சிரிப்பொலி இவற்றில் நிரம்பி மங்களகரமாகி விடும். சூன்யங்கள் ஓவியங்களாகும், வறட்சிகள் அருவிகளாகும்; இருள்கள் நிலவுகளாகும்; வெம்மைகள் தண் புனல்களாகும்!

எல்லோருமாகச் சேர்ந்து கொண்டு, ஏதோ சதி செய்கிறார்கள், தமக்குத் துரோகம் இழைக்கிறார்கள். நியாயமாகவும் இயல்பாகவும் தமக்குக் கிடைக்க வேண்டிய மகிழ்ச்சியை இல்லாமல் செய்து நெஞ்சில் அடிக்கிறார்கள்!

அவர் மதுவை இன்னும் ஒரு மிடறு விழுங்கினார்.

''வெறும் வயிற்றில் அதைக் குடிக்க வேண்டாம். கெடுதல்; சாப்பிட்டுத்தான் ஆக வேண்டுமென்றால் இதை அவ்வப்போது கொறித்துக் கொள்ளுங்கள்'' என்று கூறி ஓர் அகன்ற கிண்ணத்தில் மிக்சர் கொண்டு வந்து வைத்து விட்டுப் போனார் மணி. நெய் விட்டுப் பொன்னிறமாக வறுத்த முந்திரிப் பருப்புக்களைத் தாராளமாகவே அதில் கலந்திருந்தார்.

பெரிய வெள்ளி ஸ்பூனில் அதைச் சிறிது அள்ளி வாயில் போட்டுக் கொண்ட கோவர்த்தனன் நெஞ்சோடு அணைத்திருந்த பவானியின் படத்தை எதிரே பிடித்துப் பார்த்தார். 'பவானி! ஏன் என்னை இப்படிச் சித்திரவதை செய்கிறாய்? உன் மனம் கொஞ்சம் இரங்கினால் போதும். என் வாழ்க்கை எத்தனை ஆனந்த மயமாகி விடும்! உன் கண்கள் தரும் போதைக் கிறக்கம் இருக்கும்போது மதுவை நான் ஏன் நாடப் போகிறேன்? மணிக்கு என்னைக் கோபித்துக் கொள்ளக் காரணமே அகப்படாமல் தவிப்பான், பவானி!'

வாசலில், ''ஸார்!'' என்று குரல் கேட்டது.

கோவர்த்தனன் கோப்பையைக் காலி செய்து வைத்து விட்டு, ''யார் அது?'' என்று கேட்டவாறே எழுந்தார்.

அத்தியாயம் 36

பாங்குக் கொள்ளை!

போர்ட்டிகோவில் காருக்குப் பக்கத்தில் நின்ற இருவரும் கோவர்த்தனனுக்கு சல்யூட் செய்தனர்.

''என்ன விஷயம்?'' என்றார் கோவர்த்தனன் வராந்தாவில் நின்று.

இருவரும் பாக்கெட்டுகளிலிருந்து அடையாளச் சீட்டுக்களை எடுத்து நீட்டியவாறே ''ஸி.ஐ.டி.'' என்றனர்.


அடையாளச் சீட்டுக்களைப் பார்க்க அவசியமில்லை என்பது போல் கரம் அசைத்து விட்டு, ''என்ன வேணும்?'' என்றார் கோவர்த்தனன்.

''கல்கத்தா சென்ட்ரல் ஜெயிலிலிருந்து ஒரு கைதி 'எஸ்கேப்' ஆகிவிட்டான் ஸார்! சென்னைக்கு அவன் வந்திருக்கலாம் என்று சந்தேகப்பட்டு ஃபோட்டோவும் மெஸேஜும் அனுப்பி வைச்சாங்க. மெட்ராஸில் அலர்ட்டாகி அலசியதிலே இந்தப் பக்கம் அவன் வந்து தலைமறைவாகி யிருக்கலாம்னு துப்புக் கிடைச்சது.''

''ஸோ? அரெஸ்ட் வாரண்ட் வேணுமா? நாளைக்குக் கோர்ட்டுக்கு வாங்க.''

''நோ ஸார். ஏற்கனவே வாங்கி வைத்திருக்கிறோம்.''

''பின்னே? ஆசாமியைக் கண்டுபிடிச்சீங்களா இல்லையா?''



இன்று போய் நாளை வா!

ஸ்ரீரங்கத்தில் எங்கள் வார்டு தபால்காரர் திரு சுப்பையா என்பவரிடம் 'தபால் இருக்கிறதா?' என்று கேட்டால் அவர், 'இல்லை' என்று பதில் சொல்லாமல் 'உங்களுக்கு நாளைக்கு' என்று பதில் சொல்கிறார். அது எவ்வளவு இனிமையாக இருக்கிறது. இதை மற்றத் தபால்காரர்களும் பின்பற்றினால் என்ன? யோசனை: ஸ்ரீரங்கம் ரா. ராகவன்

''இன்னும் இல்லே ஸார். போட்டோவைக் காட்டி விசாரிச்சுக்கிட்டு வருகிறோம். அவர்களிலே சிலர்....''

''என்ன சொல்றாங்க?''

''அந்தப் படத்தைப் பார்த்தால் உங்களைப் போலவே இருப்பதாகச் சொன்னாங்க.''


''நான்ஸென்ஸ்! என்ன விளையாடறீங்களா? இல்லே குடிச்சுட்டு வந்திருக்கீங்களா? என் டயத்தை வேஸ்ட் பண்றீங்க. கெட் அவுட்!''

''எக்ஸ்க்யூஸ் மீ ஸார்! கோபப்படாதீங்க. அவங்க பேச்சுக்கு நாங்க மதிப்புக் கொடுக்கலைதான். ஆனாலும் டியூட்டியைச் செய்தாகணுமே!''

கோவர்த்தனனுக்கு எரிச்சலாக வந்தது. இன்று ஒரே கடமை வீரர்கள் மயம். பவானி நாடகத்தில் நடிக்க ஒப்புக் கொண்டு விட்டதால் ஒத்திகைக்குப் போக வேண்டியது தன் கடமை என்கிறாள். வீட்டுக்கு வந்தால் பனி குடிக்கக் கூடாது என்று எச்சரிப்பது தன் கடமை என்கிறான். போதாக் குறைக்கு இந்த ஸி. ஐ. டி.க்கள் வேறு கடமையைச் செய்ய வந்து விட்டார்கள்!

''சரி, டியூட்டியைச் செய்தாச்சல்ல? என்னைப் பார்த்தாச்சு. நான் அவனைப் போலில்லே யல்லவா? நீங்கள் கிளம்பலாம். எனக்கு வேலை இருக்கு.''

''ஸாரி ஸார். அவங்க சொன்னதிலே அவ்வளவா தப்பில்லேன்னுதான் உங்களைப் பார்த்ததும் தோன்றுகிறது. அந்த ஃபோட்டோ கிட்டத்தட்ட உங்களைப் போல வேதான் இருக்கு. உங்களுக்கு மீசை இல்லே, கண்ணாடி போட்டிருக்கீங்க, கொஞ்சம் 'யங்'காத் தெரியறீங்க. ஆனால் இவற்றால் ஒற்றுமைகளை மறைக்க முடியவில்லையே?''



வெள்ளி விழா மந்திரி!

சென்னை கவர்னர் மோகன்லால் சுகாடியா பதினோறு ஆண்டு காலம் ராஜஸ்தானின் முதல்வராகத் தொடர்ந்து பதவியில் இருந்திருக்கிறார்.

அவரையும் தோற்கடித்துவிட்டவர். மத்திய அரசாங்க விவசாய மந்திரி ஜகஜீவன்ராம் 1946ம் ஆண்டிலிருந்து இன்று வரை மத்திய அரசாங்க மந்திரியாக இருந்து வந்து கொண்டிருக்கிறார். நடுவில் 1963ல் காமராஜர் திட்டத்தின்படி மூன்று ஆண்டு காலம் மட்டும் தாமாகவே பதவியிலிருந்து விலகிக் கொண்டிருந்தார். அவர் வெள்ளிவிழாக் கொண்டாடியவர்.

-- என். ஆர்.

கோவர்த்தனனுக்குத் திடும்மென்று உடல் நெடுக ஒரு மின்னல் பாய்ந்தது போல் இருந்தது. நிலை வாசலை ஒரு கையால் பிடித்துக் கொண்டு, "எங்கே கொடுங்கள் அந்தப் படத்தை" என்று கேட்டு வாங்கிப் பார்த்தார். அவர் கரம் இலேசாக நடுங்கியது. தலையைச் சுற்றவும் ஆரம்பித்தது. அது மது அருந்தியதன் விளைவா அல்லது இந்தப் படத்தைப் பார்த்ததனால் உண்டான கலக்கமா? உடலின் பதற்றத்தையோ மனத்தின் உளைச்சலையோ அவர்களிடம் காட்டிக்கொள்ளாதிருக்கப் பெரு முயற்சி செய்து இயல்பாக நடப்பது போல் அடியெடுத்து வைத்து, அவர் வராந்தாவில் இருந்த பிரம்பு நாற்காலிகளுள் ஒன்றில் அமர்ந்தார். படத்தை ஒரு முறைக்கு இரு முறையாகப் பார்ப்பது போலும் யோசிப்பது போலும் சற்று நேரத்தைக் கடத்தினார். பிறகு "பாங்க் ராபரியா?" என்றார்.

ஸி. ஐ. டி.க்கள் வியப்படைந்தவர். "ஆமாம் ஸார்! பாங்குக் கொள்ளைதான். உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்றார் அவர்களில் ஒருவர்.

"நான் சம்பவம் நிகழ்ந்தபோது கல்கத்தாவில்தானே இருந்தேன்?" என்றார் கோவர்த்தனன். "எனக்கு இந்தக் கேஸ் நன்றாகத் தெரியும். நான் லா பிராக்டிஸ் ஆரம்பித்து நன்றாக முன்னுக்கு வந்து கொண்டிருந்த சமயம். எங்கள் வக்கீல்கள் வட்டாரத்திலே ஒரே ஸென்ஸேஷன். இவன் கொள்ளையடிச்சான், அகப்பட்டுக் கொண்டு கம்பி எண்ணினான் என்பதால் இல்லே. அது சகஜம். இந்தப் பயலோட அப்பா ஊரிலே பெரிய மனுஷன். செல்வாக்குள்ளவன். பொதுஜனங்களுக்கு ஒரு விவரமும் தெரிய வராதபடி நியூஸ் பேப்பர் ஆபீஸ் முதலாளிங்களுக்கெல்லாம் ஃபோன் பண்ணி விஷயத்தை அப்படியே அமுக்கிட்டான். அதுதான் எங்களைப் பொறுத்த மட்டில் பெரிய பரபரப்பை ஏற்படுத்தியது. புரியுதா?"

"எஸ் ஸார்!"

"வழக்கறிஞர் வட்டாரத்திலே அதிகமாக இவனைப் பற்றிப் பேச மற்றொரு காரணம் இவன் ஒரு தீவிர சோஷலிஸ்டு. புரட்சி இயக்கத்துக்குப் பணம் வேண்டும் என்பதற்காகவே பாங்கைக் கொள்ளையடித்தான் என்பது. என்ன நான் சொல்றது சரிதானே?"

"ஆமாம் ஸார். மெட்ராஸுக்கு வந்த மெஸ்ஸேஜிலே அப்படித்தான் கண்டிருக்கிறது."

"பெரிய கிரிமினல் அப்பா இவன். எப்பேர்ப்பட்ட கில்லாடியா யிருந்தால் சிறையிலிருந்து தப்பி வந்திருப்பான்! சீக்கிரமே பிடிச்சு மறுபடியும் உள்ளே தள்ளலேன்னு சமூகத்துக்கே ஆபத்து. அண்டர் கிரௌண்ட் இயக்கத்துக்கு ஆதரவா இவன் என்ன வேணு மானாலும் செய்வான். கொலைக்குக் கூடத் தயங்க மாட்டான். நீங்க என்ன இப்படி அலட்சியமா இருக்கீங்க?"

"இல்லே ஸார்! எங்களால் முடிந்ததையெல்லாம் செய்துக்கிட்டுத்தான் இருக்கிறோம்."

"அப்படிச் சொல்லிப் பிரயோஜனமில்லே! இப்ப எங்கிட்டே எதுக்கு வந்தீங்க? இவனைக் கண்டு பிடிக்க முடியல்லேன்னு ஒப்பாரி வைக்கவா? யூ மஸ்ட் ஃபைண்ட் ஹிம். அதுவும் சீக்கிரமாப் பிடிக்கணும். இல்லேன்னு போலீஸ் இலாகாவுக்கே அவமானம். நானே உங்களைப் பற்றிப் புகார் பண்ணும்படியிருக்கும். இப்போ யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. தெரியுமல்லவா? யுத்த முயற்சிக்கு இந்த அண்டர் கிரௌண்ட் பேர்வழிங்க பெரிய முட்டுக்கட்டை என்பதைப் புரிஞ்சுக்கிட்டிருக்கீங்களா!"

"ஆமாம் ஸார்; தெரியும் ஸார்."

"என்னய்யா தலையாட்டிப் பொம்மை மாதிரி எதைச் சொன்னாலும் 'ஆமாம் ஸார், எஸ் ஸார்'னு பேசறீங்களே யொழிய காரியத்திலே ஒண்ணையும் காணோம்?" படத்தை அவர்கள் பக்கமாகக் கோபத்துடன் வீசினார் கோவர்த்தனன். ஒருவர் குனிந்து பொறுக்கிக் கொண்டார்.

"இன்னும் ஒரு வாரத்துக்குள் எனக்கு நிலைமை பற்றி ரிப்போர்ட் பண்ணுங்க. இல்லாத போனால் நான் கவர்னருக்கு இதுபற்றி எழுதும்படி இருக்கும்."

"அதற்கு அவசியம் நேராது ஸார். அவசரப்படாதீங்க. நாங்க எப்படியும் கண்டு பிடிச்சுடறோம்."

"யாரோ உளறினான் என்பதற்காக நான் தான் இந்தக் கைதியா என்று சோதித்துப் பார்க்க வந்தீங்களா? அப்படி நீங்க வந்ததும் ஒரு விதத்தில் நல்லதாப் போச்சு. டிபார்ட்மெண்ட் எவ்வளவு மோசமா செயல்படுகிறது என்பதை எனக்குப் புரிய வைச்சீங்க. ஒம்பா அசப்பிலே பார்த்தா ஒரே மாதிரியா அமையறது ஆண்டவன் படைப்பிலே உண்டு என்பது உங்களுக்குத் தெரியாதா? எத்தனை வருஷ சர்வீஸ் உங்களுக்கு?".

"பதினைஞ்சு வருஷம்."

"எனக்குப் பன்னிரண்டு."

"அவ்வளவு சர்வீஸ் ஆனவங்க மாதிரி தெரியல்லையே. நடத்தையிலே அனுபவத்தின் சுறுசுறுப்போ திறமையோ காணுமே."

"இன்னும் கஷ்டப்பட்டுத் தேடறோம் ஸார்!"

"செய்யுங்க. உங்கள் முயற்சியின் பலனை எனக்கு ஒரு வாரத்துக்குப் பிறகு வந்து சொல்லுங்க."

அவர்கள் போன பிறகு உள்ளே வந்த கோவர்த்தனன் சோடா கலப்பதற்காக விஸ்கியைக் கோப்பையில் ஊற்றப் போனார். சட்டென்று மனம் மாறியவராக ஒரு வாய் பாட்டிலோடு கவிழ்த்துக் கொண்டார்.

எரிச்சலுடன் தொண்டையில் மது இறங்கியபோதிலும் அவரது மன எரிச்சலை விட அது அதிகமாகத் தெரியவில்லை. (தொடரும்)





ராதாஸ்

ஆயுர்வேத சோப்

குளிர்ச்சியும்,
நறுமணமும் தரும்
இந்த ஆயுர்வேத சோப்
ராமச்சம், கஸ்தூரி மஞ்சள்,
கச்சோலம், ஓமம்,
மரவெட்டி எண்ணை
ஆகியவைகளால்
தயார் செய்யப்படுவது.
மிருகக் கொழுப்புச்
சத்தோ, செயற்கை
மணமோ கலவாதது.

தயாரிப்பவர்கள்:

ராதாஸ் ஆயுர்வேதிக் சோப் ஒர்க்ஸ் கொல்லம்-2 (கேரளா)

மிகப் பழைமையான ஸ்ரீ பார்த்தசாரதி சாமி சபையினர் மிக நவீனமான காரியம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள்: 'லக்கிடிப்'. அதிர்ஷ்ட எண்ணுடைய டிக்கெட்டைத் தேர்ந்தெடுக்க சினிமா நட்சத்திரம் வந்தார். ஆனல் என்ன துரதிர்ஷ்டம்! முக்கால் மணி நேரம் தாமதமாய் வந்தார். அதற்கு முன் திரு கே. வி. நாராயணசாமியின் கச்சேரி ஆரம்பமாகிவிட்டது!

பார்த்தசாரதி சாமி சபாவுக்கு இந்த ஆண்டு எழுபத்தைந்து வயது பூர்த்தியாகிறது. பிளாட்டினம் ஜூபிலியை யொட்டி இசை விழா — அன்று நிறைவு நாள்.



நிறைவு நாளும், ஆரம்ப தினமும்

'லக்கி டிப்' விஷயம் இப்படி ஆரம்பத்தில் கொஞ்சம் 'அன் லக்கி'யாகப் போனாலும், நிறைவு நாளன்று திரு நாராயணசாமி கச்சேரி அமைந்தது எவ்வளவு அதிர்ஷ்டம் என்பது சீக்கிரமே புரிந்தது. நிறைவு நாளன்று மனத்துக்கு நிறைவு தரும் ஒரு கச்சேரியாக அது விளங்கியது.

கச்சேரியைக் கால தாமதமாக ஆரம்பிக்க நேர்ந்ததில் சிறிது சலனமுற்றவர் போல் கிடுகிடுவென்று மூன்று பாட்டுக்களைப் பாடித் தள்ளினர் திரு கே. வி. என். அப்புறம் சங்கீதத்தை அவர் ஆட்கொள்ள ஆரம்பித்தார். பிறகு சங்கீதம் அவரை ஆட்கொண்டது: அதன் பின் சங்கீதத்தாலும் கே. வி. என்.னும் ஒருங்கே ரசிகர்கள் ஆட்கொள்ளப்பட்டனர்! இவ்வளவுக்கும் மேல் நான்காவதாக ஒரு நிலை உருவாயிற்று. ஆட்கொண்டவர் யார், ஆட்கொள்ளப்பட்டவர் யார் என்பதொன்றும் புரியாத ஐக்கிய நிலை அது.

'சுப்ரமண்யாய நமஸ்தே' — எத்தனையோ தரம் கேட்டிருக்கும் பாட்டுத்தான். இருந்தாலும் 'வாசவாதி சகல தேவ'வில் அன்று திரு கே. வி. என். நிகழ்த்திய நிரவலையும் அதைத் தொடர்ந்த ஸ்வரப்ரஸ்தாரங்களையும் இன்றைக்கு நினைத்தாலும் மேனி சிலிர்க்கிறது. 'கோடி கோடி லாவண்ய'ங்களைப் பார்த்தோம் என்று தீட்சிதர் வார்த்தைகளையே உபயோகித்து வர்ணிக்க வேண்டியதுதான்.

ராகம் தானம் பல்லவி ராகமாலிகையில் அமைந்தது. **சங்கராபரணனை** **தர்பாருக்கு** அழைத்**தோடி** வருமாறு தோழி **கல்யாணி**யிடம் வேண்டுகிறாள் தலைவி. சர்க்கஸில் உயரே கம்பி மீது நடப்பது போன்ற காரியம் தான். ஆனல் அன்று கே. வி. என். பாடிய போது கோலோடு உயிரையும் கையில் பிடித்துக் கொண்டு நகரும் சர்க்கஸ்காரனை நாம் பார்க்கவில்லை. அழகிய மயில் தோகை விரித்துக் கொண்டு நளினமாகக் கம்பி மீது நடப்பது போலிருந்தது. கடினமான ஒரு காரியத்தை இலகுவாக முடிப்பது போன்ற லாகவத்துடன் அழகுணர்ச்சி கெடாமல் சாதித்தார். திருப்பாற்கடல் வீரராகவனும் வேலூர் ராமபத்திரனும் மிக நன்ருக ஒத்துழைத்தார்கள்.

என்ன கேட்கிறீர்கள்? 'லக்கி டிப் விஷயம் என்ன ஆயிற்று' என்று? கவலை வேண்டாம். இறுதியில் அதற்கு வேறு தகுதியான ஒருவரைப் பொறுப்பேற்கச் செய்து பணியை இனிதே நிறைவேற்றினர்கள்.

ஸ்ரீ **கிருஷ்ண** கான சபா, **கோகுலாஷ்டமி** உற்சவக் கச்சேரிகளின் ஆரம்ப தினத்தன்று திரு **கிருஷ்ணமூர்த்தி**யைக் கௌரவிப்பதில் மும்முனைப் பொருத்தம் இருப்பதை போலீஸ் இலாக்கா திரு நரசிம்மன் சுட்டிக் காட்டினர். அன்று நேதுநூரி கிருஷ்ணமூர்த்தியைப் பாராட்டிப் பேசியவர்களில் அவரும் ஒருவர். தலைமை தாங்கியவர் காங்கிரஸ் தலைவர் கபிஸ்தலம் திரு கருப்பையா மூப்பனர்.

"இசைக் கலைஞர்களை ஆதரித்த பெருமை என் முன்னேர்களுக்கு உண்டு. அவர்கள் செய்த அந்த நல்ல காரியத்தின் கர்ம பலனகத்தான் இன்று எனக்கு இந்தப் பெருமை —இசை விழாவைத் தொடங்கி வைக்கும் பெருமை — கிடைத்திருக்கிறது" என்று அடக்கமாகக் கூறிக் கச்சிதமாகப் பேச்சை முடித்துக் கொண்டார்.

"இனி கச்சேரி செய்யப் போவதில்லை என்று நான் தீர்மானித்ததிலிருந்து அடிக்கடி சொற்பொழிவாற்ற அழைக்கிறார்கள்" என்று குறைப்பட்டுக் கொண்டே பேச ஆரம்பித்தார் செம்மங்குடி. கச்சேரி பண்ணுவதற்கு

வேணுமானால் அவர் சாரீரம் சில சமயம் ஒத்துழைக்காமல் போகலாம். பேசுவதற்கு என்ன? அதுவும் அவரைப் போல் இசைத் துறையில் பல்லாண்டு அனுபவம் உள்ளவர்கள் எவ்வளவு சுவாரசியமான விஷயங்களைக் கூற முடிகிறது! இசை உலகத் தொடர்பிலிருந்து அவர் எப்படி ரிடையர் ஆக முடியும்? கிருஷ்ணமூர்த்திக்கு அவர் சால்வை போர்த்தி சங்கீத சூடாமணி விருதும் பதக்கமும் அளித்தார்.

''நேதுநூரி கிருஷ்ணமூர்த்தி திருப்பதி ஸ்ரீ வேங்கடேசுவரா இசை, நடனக் கல்லூரியின் முதல்வர். டாக்டர் பினாகபாணியைக் குருவாக அடையும் அதிர்ஷ்டம் செய்தவர். கர்நாடக இசையைக் கலையாக மட்டுமின்றி விஞ்ஞானமாகவும் அணுகி இலக்கணங்களைப் பயின்றவர். அறிவாற்றலுக்கு இணையான அளவில் அடக்கமும் உடையவர். அன்னமாச்சாரியார் கீர்த்தனைகளைச் சேகரித்து, வகைப்



○ பார்த்தசாரதிசாமி சபாவில் கே. வி. நாராயணசுவாமி கச்சேரி.

○ நேதுநூரி கிருஷ்ணமூர்த்திக்குச் செம்மங்குடி பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கிறார்.

படுத்தி, சுவரப்படுத்திப் புத்தகங்களாகப் பிரசுரிக்கும் அரிய பணியில் தற்போது ஈடுபட்டிருக்கிறார்'' என்றெல்லாம் விழா நாயகரைக் குறித்துப் பல அரிய தகவல்களை வெளியிட்டார் ஸ்ரீ செம்மங்குடி.

லால்குடி திரு ஜெயராமன் செம்மங்குடிக்குப் பக்கவாத்தியம் போலவே பேச ஆரம்பித்தாலும் சீக்கிரம் ஸோலோ பாணிக்குத் திரும்பிப் புதிய கருத்துக்கள் சிலவற்றை உதிர்த்தார்: ''டாக்டர் பினாகபாணியிடம் பயின்று இன்று பிரபலமாக இருப்பவர்கள் மூன்று நான்கு பேர் இருந்தாலும் ஒவ்வொருவரும் ஒரு தனி பாணி வகுத்துக் கொண்டிருப்பது விசேஷம். அதில் நேதுநூரி ஒரு ரகம். இசைக் கல்லூரி முதல்வராயிருக்கும் கிருஷ்ணமூர்த்தி, தமது மாணவர்களைச் சுட்டிக்காட்டி, 'இவர்களெல்லாம் ஜூனியர் ஸ்டுடெண்ட்ஸ். நான் ஸீனியர் ஸ்டுடெண்ட்' என்பார்!''


இசை உலகப் பணியில் பொன் விழா ஆண்டினை அடைந்துள்ள திரு சீனிவாசய்யர் அவர்கள் கரத்தால் விருதும் பதக்கமும் பெறுவதைப் பெரும் பேறாகக் கருதினார், திரு கிருஷ்ணமூர்த்தி. ''எனக்கு அளிக்கப்பட்ட முதல் கௌரவமாகவும் முக்கியமான கௌரவமாகவும் இதனைக் கருதுகிறேன்'' என்றார். ''டாக்டர் பினாகபாணியிடம் பயின்றாலும் அரியக்குடி செம்மங்குடி கச்சேரிகளைக் கேட்டுக் கேட்டு அவர்களிடமிருந்து பல அம்சங்களைக் கிரகித்துக் கொண்டிருக்கிறேன்'' என்பதாகத் தெரிவித்தார். மற்றொரு குருவாகவே மதிக்கிறார் செம்மங்குடியை என்பது முகமன் கூறிய போதும் பிறகு மேடையில் விருது பெற்ற போதும் பாதங்களைத் தொட்டு வணங்கியதிலிருந்து புரிந்து கொள்ள முடிந்தது.

விழாவைத் தொடர்ந்து நேதுநூரியின் கச்சேரி. புதிய சபாநாயகரைப் பழைய சபாநாயகர் மேடைக்கு நடத்திச் சென்று அரியாசனத்தில் அமர்த்துவது போல் இவ்வாண்டு சங்கீத சூடாமணிக்குச் சென்ற ஆண்டின் சங்கீத சூடாமணி ராமபத்திரன் மிருதங்கம் வாசித்தார். வயலின் வித்வானும் ஒரு மணிதான். வி. வி. எஸ். மணி! மும்மணிகள் சேர்ந்து மணியான நிகழ்ச்சியாகச் செய்து விட்டார்கள்.

அண்டை மாநிலத்தைச் சேர்ந்த இசை விற்பன்னரைத் தருவித்துப் போற்றிக் கௌரவித்த கிருஷ்ண கான சபையை, அதன் தலைவரை, காரியதரிசிகளை வாழ்த்துகிறோம்.

—குட்டிகிருஷ்ணன்

▫▫▫▫▫▫▫▫▫▫▫▫▫▫▫▫▫▫▫▫▫▫▫▫▫▫▫▫▫▫



ஒலிம்பிக் சின்னத்திலிருக்கும் ஐந்து வட்டங்கள் எதைக் குறிக்கின்றன? ஒலிம்பிக் விளையாட்டுப் பந்தயத்தில் ஐந்து கண்டங்கள் கலந்துகொள்கின்றன என்பதைத்தான்!

பூத் டைமன் - சரோஜா ராமச்சந்திரன்

20-அம்ச திட்டம்

அம்சம்: 13


கள்ளக் கடத்தல்காரர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்ய தனிச் சட்டம்.



20-அம்ச திட்டம்

அம்சம்: 14


தொழில் முதலீடுகளுக்கான வரைமுறைகள் தளர்த்தப்படுதல்; இறக்குமதி லைசென்சுகளைத் தவருகப் பயன்படுத்துவோர் மீது நடவடிக்கை.



20-அம்ச திட்டம்

அம்சம்: 15

தொழில்கள், தொழிற்சாலைகளில் தொழிலாளர்களும் நிருவாகத்தில் பங்கு பெறப் புதிய திட்டங்கள்.



20-அம்ச திட்டம்

அம்சம்: 16

சரக்கு வண்டிகளின் போக்குவரத்திலுள்ள கட்டுப்பாடு இடையூறுகளைக் களைதல் — தேசிய மட்டத்தில் அனுமதி வழங்கும் முறையை அமுலாக்குதல்.



வெளியீடு:
இயக்குநர்: செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தமிழ்நாடு அரசு, சென்னை-600 009



சிலம்புச் செல்வம்

ம.பொ.சி

இந்தியாவில் தோன்றிய மகா கவிகளுக்குள்ளே தேசிய ஒருமைப்பாட்டுக்கு வழி காட்டிய முதல் கவிஞர் சிலப்பதிகாரம் படைத்த இளங்கோவடிகளேயாவார். அவர் காலத்தில் நாட்டில் நிலவிய சைவ, வைணவ, சமண, பௌத்த மதங்களிடையே ஒருமைப்பாடு நாடினார். அந்தண, அரச, வணிக, வேளாள வருணங்களிடையே ஒருமைப்பாட்டினைத் தமது காப்பியத்திலே உருவாக்கிக் காட்டினார். இந்திய உபகண்ட — இலங்கை உள்ளிட்ட — அரசர்களைக் கண்ணகி கோயில் முன்னிறுத்திக் கற்புத் தெய்வத்தை வழிபடும் முறையிலே மன்னர்களிடையேயும் ஒருமைப்பாடு காட்டினார். தென்புலத்தில் தோன்றிய பத்தினித் தெய்வமாம் கண்ணகிக்குச் சிலை வடிக்க வடபுலத்து இமயத்திலே கல்லெடுக்கச் செய்து வடக்குக்கும், தெற்குக்குமிடையே ஒருமைப்பாடு தேவை என்பதை உணர்த்தினார். பூம்புகாரிலே இந்திர விழாவில் மாதவி ஆடிய நடனத்தைக் காண இமயப் பிரதேசத்திலிருந்து கந்தர்வ சாதிக் காதலர் இருவர் வந்தனர் எனக் கூறி, கலைத் துறையிலேயும் இந்தியாவின் ஒருமைப்பாட்டினை வற்புறுத்தினார்.

சமயங்களிடையேயும், வருணங்களிடையேயும், மொழி வழி நாடுகளிடையேயும், சமத்துவமும் சமரசமும் நிலவினால்தான் இந்திய தேசிய ஒருமைப்பாடு சாத்தியமாகும் என்பதனையும் சிலப்பதிகாரத்தின் மூலம் நமக்குக் காட்டினார்.

அரசியல் மரபுக்கு மாறாக அண்ணனுக்குரிய அரசு தனக்கு வரவிருந்ததைப் பரதன் ஏற்க மறுத்ததன் மூலம் இராமாயணக் கதை தொடங்குகிறது. அது போல், இமய வரம்பன் சேரலாதனின் மூத்த மகன் செங்குட்டுவனுக்கே உரிய அரசு இளவல் இளங்கோவைத்தான் சாருமென்று நிமித்திகன் கூறியதை எதிர்த்து இளங்கோவடிகள் தமக்கு வரவிருந்த அரசைத் துறந்ததன் மூலம் சிலப்பதிகாரக் கதை ஆரம்பமாகிறது.

அதிகாரத்திலிருந்த செங்குட்டுவன் கண்ணகிக்குக் கற்கோயில் கட்டினான். அதனை, இன்று கண்டுபிடிக்க முடியவில்லை. தமக்கு வரவிருந்த அரசைத் துறந்த இளங்கோவடிகள் கண்ணகிக்குச் சொற்கோயில் கட்டினார். இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னும் அது நின்று நிலைத்திருக்கிறது. தேசத்திலுள்ள பல்வேறு பிரிவினரையும் ஒன்றுபடுத்திக் காட்டுவதுதான் தேசியம் என்றால், அந்தத் தேசியத்தைப் பாடிய முதற் கவிஞர் இளங்கோவடிகளேயாவார்.

சிலப்பதிகாரம் என்ற பெயர் இளங்கோ படைத்த காப்பியத்துக்கு எதனால் வந்தது? கண்ணகியின் காற்சிலம்பால் மதுரையில் புரட்சி விளைந்ததனால், அதன் பெயரைக் கொண்டே இளங்கோவடிகள் காப்பியம் படைத்தார் என்று சொல்லப்படுகிறது. அதுவும் ஒரு காரணம்தான். ஆயினும் அதை விடவும் சிறந்த காரணம் உண்டு. வால்மீகி இராமாயணத்திலே கிஷ்கிந்தையில் தன்னைச் சந்தித்த இராமனிடம் இராவணனால் அபகரிக்கப்பட்டு வான வழியே சென்று கொண்டிருந்த சீதையானவள் எறிந்துவிட்டுப்போன அணிகலன்களைக் காட்டுகிறான் சுக்ரீவன். அவற்றைச்சீதை அணிந்த கோலத்தில் முறைப்படுத்தி வைத்து, இளவல் இலக்குவனைப் பார்த்து, ''தம்பி, இந்த அணிகலன்கள் உன் அண்ணியினுடையவைதானா, அடையாளம் கண்டு சொல்'' என்று இராமன் கேட்கிறான். அப்பொழுது ''காற்சிலம்புகள் இரண்டும் அண்ணியினுடையவை. அண்ணியின் திருவடிகளைத் தினமும் வணங்கிய போது காற்சிலம்புகளைக் கண்டிருக்கிறேன். ஆனால், அவளுடைய திருமேனியை நான் ஒரு முறையும் கண்டதில்லையாதலால், மற்ற அணிகலன்களை அடையாளம் சொல்ல இயலேன்'' என்று கூறுகிறான். இதனை நினைவில் கொண்டால் நமது காப்பியத்துக்கு இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் என்று பெயர் சூட்டிய காரணம் புரியும்.

கண்ணகி கற்புத் தெய்வமாகப் படைக்கப்பட்டிருக்கிறாள். அந்தத் தெய்வத்தின் திருவடியைக் காணத்தான் நமக்கு உரிமை உண்டு. அதனால் 'கண்ணகி காப்பியம்' என்று பெயரிட்டால் திருமேனி நினைவுக்கு வருமே என்றஞ்சி அவள் திருவடியை அலங்கரித்த அணியான சிலம்பின் பெயரை வைத்துத் திருவடி ஒன்றே நமது நெஞ்சிலும் நினைவிலும் பதியும்படி செய்து விட்டார் இளங்கோ.

(தொடரும்)

(மயிலை இலக்கிய வட்டத்தின் சார்பில் நிகழ்த்திய சொற்பொழிவிலிருந்து.)

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600 031.
Managing Editor: T. Sadasivam. Associate Editor: K. Rajendran.



REGISTERED No. M. 4382
Registered as a Newspaper in Sri Lanka